கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(02.09.2018 - 02 புரட்டாதி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 191, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

**திருத்தந்தையின் இம்மாத கருத்து**

இளையோர் தங்கள் சொந்த
நாடுகளிலேயே கல்வி மற்றும்
வேலைக்கான வாய்ப்பை
பெறும்படியாக செபிப்போம்.

ஞான ஒளி
ඥාන ඔලි
GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

# தேவத்தை நோயாளர் தினம் – 2018







## நாட்டின் சமாதானம், ஒருமைப்பாட்டிற்காக மன்றாடுவோம்.

**தேவத்தை வருடாந்த நோயாளர்கள் குணமளிக்கும் தினத்தின் போது கர்தினால் ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.**



“இந்நாட்டில் வாழும் பிரஜைகள் அவர்தம் மேன்மை நிலையினை பாதுகாத்துக் கொள்வதோடு, பல்வேறுபட்ட எண்ணங்கள், சவால்களினால் உருவாகியுள்ள வேற்றுமைகள் நிலவும் எம் சமூகத்தில் ஒற்றுமையை, சமத்துவத்தினை ஏற்படுத்தி இந்நாட்டின் நலன் கருதி செயற்பட வரம் கிடைக்க வேண்டி இறைவனிடம் மன்றாட வேண்டுமென கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கடந்த ஞாயிறு (26.08.2018) தினம் தேவத்தை இலங்கை அன்னையின் பெசிலிக்காவில் இடம்பெற்ற வருடாந்த நோயாளர்களை குணமாக்கும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உன் விசுவாசம் உன்னைக் குணப்படுத்தியது

**தேவத்தை வருடாந்த நோயாளர்கள் குணமளிக்கும் தினத்தின் போது யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.**



கிறிஸ்து இயேசுவில் அன்பார்ந்தவர்களே!

லங்கா மாதாவின் பாதத்திலே வந்து அவர் முன்னிலையில் இருக்கின்ற அவரது மகன் நற்கருணை நாதரிடம் மன்றாடி எமது நோய் நொடிகளிலிருந்து விடுதலையடைய வேண்டுமென்று நாம் இங்கு வந்துள்ளோம்.

நற்செய்தியிலே நாம் காண்கின்றோம். ஆண்டவர் இயேசுவிடம் வந்த குருடர்கள், முடவர்கள், உடல் உள நோயாளர்கள் அனைவரையும் குணமாக்கினார். நோயாளிகளிடம் இருந்த விசுவாசம் தான் அவர்களை குணப்படுத்தியது. அந்த விசுவாசத்தோடு தான்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## போதைப் பொருளில் இருந்து எம் பிள்ளைகளை பாதுகாப்பதற்கு முன்வருவோம்.



“நான் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானாலும் பரவாயில்லை, போதைப் பொருளில் இருந்து எம் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு முன்வருவேன்” என கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, கடந்த வாரம் பேராயர் இல்லத்தில், சுகாதார மற்றும் தேசிய வைத்தியத் துறை அமைச்சர் திரு. ராஜித்த சேனாரத்ன அவர்கள் பேராயரை சந்திக்க வந்திருந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்தார். போதைப்பொருள் நடவடிக்கைளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அவர்களுக்கு மரண தண்டனை வழங்குவது பற்றியும் தான் பேசிய போது எனக்கு பல்வேறுபட்ட எதிர்ப்புக்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டன. தூக்கிலிட முடியாவிடின் அவர்களை தீவொன்றில் வைக்கச் செய்யவும், சிறைச்சாலைக்குள்ளே போதைப்பொருள் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு உதவிகள், பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றமையால் அவர்களை கட்டுக்கோப்புடன் வைத்திருப்பது கடினமான விடயமாகும். மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதைக் குறித்த ஈடுபாடு எம் நாட்டு...

தொடர்ச்சி XVIIIம் பக்கம்

## 9வது அகவையில்

### ஞான ஒளி



ஒன்பதாவது
அகவையினுள் காலடி
பதிக்கும் ஒரே ஒரு
தாரகையே!
உயர்மறைமாவட்ட
ஞான ஒளியே!
உன் ஞானம் நிறைந்த
பத்திரிகையின்
ஒளியிலே இருள்
அகன்று ஒளியைக்
கண்டேன்.
நீ உன் பத்தாவது
அகவையினுள் தடம்
பதிக்க ஆவலுடன்
எதிர்பார்த்து
ஆசிக்கின்றேன்

அருட்சகோ.
R. ஜோசப் ஜெயகாந்தன்.

## அறிவித்தல்

கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியின் பரிபாலனம் கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கின்றது என கடிதங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் பரிசுரிக்கப்பட்டு வருகின்றன எனும் தகவலை பற்றி என் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான எந்த நடவடிக்கையும் உண்மை இல்லை என நான் தெளிவாக, உறுதியாக, தெரிவித்துக் கொள்கின்றேன். டிலாசால் அருட்சகோதரர்களின் பரிபாலனத்திற்கு கீழ் எவ்வாறான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது எனும் விடயம் குறித்தே கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன....

தொடர்ச்சி XVIIIம் பக்கம்

## மறையாசிரியர் தேர்வுகள் 2018

தொடர்ச்சி XVIIIம் பக்கம்

## தாய்க்கு பிறந்தநாள்

இன்னுயிர் காக்கும்
இறைவனின் தாய்!
இருளை நீக்கி ஒளியைக்
கொடுக்கும் தாய்!
நாடி வருபவர்களுக்கு
நலமருளும் தாய்!
நம் துன்பங்களை
தன்னோடு பகிர்ந்து
கொள்ளும் தாய்!
பரிந்துபேசும் தாய்!
அருளையும் ஆசீரையும்
அள்ளித் தரும் தாய்!

அரவணைத்து காத்திடும்
அன்புத் தாய்!
அருள் நிறைந்த தாய்!
ஆசீர் பெற்ற தாய்!
இறைவனையே மனிதனாக
ஈன்ற தாய்!
அன்னையின் பிறந்த நாளன்று
வாழ்த்துப் பா பாடுவோம்
புகழ்ந்து பாடுவோம்
உளமார பாடுவோம்
தாயின் மகிமை
மலரட்டும், ஒளிரட்டும்.



## தேசிய குடும்ப ஞானொடுக்கம்

**இம்மாதம் 21-23ம் திகதிகளில்**

தொடர்ச்சி XVIIIம் பக்கம்

**ஆண்டவரே உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்? (தி.பா 15)**

# திரு இருதயநாதர் ஆலயம், கிருலப்பனை வருடாந்த திருவிழா 2018







"இறைசித்தம் இன்றி ஓர் அணுவும் அசையாது" என்பதற்கிணங்க கடந்த வருடம் முழுவதும் எம்மை காத்து, அனைத்து வரப்பிரசாதங்களையும் அளித்த எம் பாதுகாவலராம் திரு இருதயநாதருக்கு விழா எடுக்கும் முகமாக கிருலப்பனை, திரு இருதயநாதர் ஆலயத்தின் திருவிழா கடந்த ஆனி மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வதிவிடத்தந்தை பிரதீப் குமார் அடிகளாரின் வழிநடத்தலின் கீழ் பங்குமக்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக இடம்பெற்றது. ஆனி மாதம் 16ம் திகதி கொடியேற்றப்பட்டு நவநாட்கள் ஆரம்பமானது. நவநாட் கருப்பொருட்கள் யாவும் நல்லாயன் ஆண்டையொட்டியதாக அமைந்திருந்தமை சிறப்பம்சமாகும். பங்குத்தந்தை அநுர சில்வெஸ்ட்டர் அடிகளார், அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளார் மற்றும் அருட்தந்தை லின்டன் அடிகளார் மற்றும் அருட்தந்தை ஜெயசந்த ஆகியோர் தமது ஆழமான மறையுரைகளின் மூலம் நவநாட்திருப்பலிகளை அர்த்தமுள்ளதாக்கினர்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## கத்தோலிக்க திருச்சபையானது தேவ நற்கருணை நாதரையும், தேவாலயத்தினையும் முதற்கண்ணாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட திருச்சபையாகும்.

### ஹெரணைப் பங்கின் இங்கிரிய புதிய ஆலயத்தினை ஆசீர்வதிக்கும் நிகழ்வின் போது கர்தினால் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.







"கத்தோலிக்கத் திருச்சபையானது தேவ நற்கருணை நாதரையும் தேவாலயத்தினையும் முதற்கண்ணாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட திருச்சபையாகும்!. அன்று கல்வாரியில் சிலுவை மரத்தடியில் இடம்பெற்ற பலியானது, இன்று ஆலயங்களில் பலிப்பீடத்தின் மீது மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுவதோடு, கிறிஸ்துவின் மீட்பின் மறைப்பொருளானது எமது வாழ்க்கையின் அனுபவமாக அமைகின்றது" என கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்த மாதம் இடம்பெற்ற ஹொரணை பங்கின் இங்கிரிய புனித தெரேசாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட புதிய தேவாலயத்தினை ஆசீர்வதித்த பின் இடம்பெற்ற திருப்பலியின் மறையுரையின் போது தெரிவித்தார்.

மேலும் அவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் கடைசித்துளி இரத்தத்தினை சிந்தும் வரைக்கும் எம்மை அன்பு செய்தார்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## கொழும்பு உயர்மறைமாவட்டத்தால் நடாத்தப்பட்ட திருப்பாலத்துவ சபையின் 30ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வத்தளை வட்டார நாயக்ககந்தை பங்கு மாணவர்கள் பெற்றுக் கொண்ட வெற்றிகள்



2017 மார்கழி மாதம் மருதானை புனித. ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற கொழும்பு மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை கரோல் போட்டியில் இரு தடவைகளிலும் முதலாம் இடத்தையும், வெற்றிக்கிண்ணத்தையும் நாயக்ககந்தை புனித காணிக்கை மாதா ஆலயப் பங்கின் தமிழ்ப் பிரிவு திருப்பாலத்துவ சபையினர் சுவீகரித்துக் கொண்டனர்.

எமது பங்குத்தந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அடிகளாரின் முழுமையான ஒத்துழைப்பும், ஊக்கமுமே இவ் வெற்றிக்கான காரணம் என்றால் அது மிகையாகாது. அத்துடன் வட்டாரச் சகல போட்டி நிகழ்ச்சிகளிலும், செயற்பாடுகளிலும் மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிகளிலும் பேதமின்றி எம்மையும் எமது மாணவர்களையும் ஈடுபடுத்தி இணைந்து வழிநடத்தும் திருப்பாலத்துவ சபை வத்தளை வட்டார இயக்குனரும் உதவிப்பங்குத்தந்தையுமான அருட்பணி. லலித் திசேரா அடிகளாரும் இவ்வெற்றிகளுக்கு உறுதுணையாக செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் திருப்பாலத்துவ சபை ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டின் நிறைவினையொட்டி வேதாகமக் கட்டுரை, வரைதல், வினாவிடைப் போட்டிகள் நடாத்தப்பட்டு அதற்கான பரிசளிப்பு விழா 2018.06.16ம் திகதி சனிக்கிழமை புனித ஜோசப் கல்லூரியில் நடைபெற்றது. இதற்குப் பிரதம அதிதியாக வருகை தந்திருந்த இலங்கையில் திருப்பாலத்துவ சபையை ஆரம்பித்து வைத்த அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களும், கரோல் போட்டிக்கான கிண்ணத்தையும் எமது பங்கில் 2018.06.17ம் திகதி...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



குருகுலாவ புனித லாசரஸ் ஆலய பங்குத்தந்தையின் அழைப்பின் நிமித்தம் வருகை தந்திருந்த கொழும்பு உயர்மறைமாவட்ட புதிய துணை ஆயர் மேதகு. ஜே.டீ அந்தனி ஆண்டகையை குருகுலாவ மக்கள் மகிழ்வுடன் வரவேற்பதோடு குருகுலாவ மற்றும் துடுவெகெதர பங்குகளின் மாணவர்கள் 220 பேருக்கு உறுதிபூசுதல் திருவருட்சாதனம் வழங்கல் நிகழ்வு கடந்த 2018.07.22ம் நாள் இனிதே நடைபெற்றது.

**தகவல் : H,A கல்தேர**

## கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வு – 2018

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மேற்படி தேர்வு 2018 கார்த்திகை மாதம் நடைபெற இருப்பதாக, 2018, ஆவணி மாதம் 17ம் திகதிக்கான வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 17 - 09 - 2018 ஆகும்.

கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி தேர்வில் தோற்றுவதற்கு பங்கு மாணவர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். பங்குத்தந்தை, தனது பங்கின் கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினது மறைப்பாடசாலையின் தலைமையானவராக இருப்பதால் இத்தேர்வில் தோற்றுவதற்கு விண்ணப்பதாரரை ஊக்கப்படுத்தும் பொறுப்பு அவரை சார்ந்ததாக உள்ளது. ஆகவே பரீட்சைக்குத் தோற்றுமாறு மாணவர்களை ஊக்கப்படுத்தவும். விண்ணப்பப்பத்திரம் இதுவரை கிடைக்காத பங்குகளில், மறைப்பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகியவை பங்குக்குருவினால் குறிப்பிடப்பட்டு **பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு 31-08-2018 க்கு முன் அனுப்பப்பட வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 17-08-2018 வர்த்தமானியைப் பார்க்கவும்.

**நன்றி**

**அருட்தந்தை பியல் ஜானக்க பர்னாந்து**

**தேசிய மறைக்கல்வி இயக்குனர்.**

## புனித யோசவ்வாஸின் திருச்சிலுவைப் பயணம்

➡ 01.09. 2018 மகாகல்கமுவாவிலிருந்து ஆனமடுவை வரைக்கும் பயணித்தல்.

➡ 01.09. 2018 - 07.09.2018 வரை சிலாப மறைமாவட்டம்.

➡ 08.09. 2018 - 24.09.2018 வரை கொழும்பு உயர்மறைமாவட்டம்.

➡ 25.09. 2018 காலி மறைமாவட்டம்.

➡ 26.09. 2018 - 28.09.2018 வரை பதுளை மறைமாவட்டம்.

➡ 29.09. 2018 - 01.10.2018 வரை இரத்தினபுரி மறைமாவட்டம்.

➡ 02.10. 2018 - 10.10.2018 வரை கண்டி மறைமாவட்டம்.

➡ 11.10. 2018 ஹபரண (அனுராதபுரம்) மறைமாவட்டம்.

➡ 12.10. 2018 பொலன்னறுவை (அனுராதபுரம்) மறைமாவட்டம்.

➡ 13.10. 2018 - 15.10.2018 வரை மட்டக்களப்பு மறைமாவட்டம்.

➡ 16.10. 2018 - 17.10.2018 வரை திருகோணமலை மறைமாவட்டம்.

➡ 18.10. 2018 - 22.10.2018 வரை யாழ்ப்பாணம் மறைமாவட்டம்.

➡ 23.10. 2018 - 29.10.2018 வரை மன்னார் மறைமாவட்டம்.

➡ 30.10. 2018 - 31.10.2018 வரை அனுராதபுரம் மறைமாவட்டம்.

➡ 01.11. 2018 மகாகல்கமுவைக்கு வருதல்.

**அருட்பணி. அலெக்ஸ் ஜனாக்க அடிகள்,**

**பங்குத்தந்தை, கல்கமுவ**

## புனித கல்கத்தா தெரெசா ஆலயத் திருவிழா – 2018

தல்கஸ்வல புனித கல்கத்தா தெரெசா ஆலயத் திருவிழா இவ்வருடம் 26.08.2019 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 02.09.2018 அன்று காலி மறைமாவட்ட ஆயர் தேமகு ரெய்மன்ட் விக்ரமசிங்க ஆண்டகையின் தலைமையில் திருப்பலியோடு நிறைவுபெறும். இத்திருவிழாவிற்கு அனைவரும் வருகை தந்து புனித கல்கத்தா தெரெசாவின் வழியாக இறைவனின் அற்புதங்களையும் ஆசீரையும் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : அருட்பணி. அருண் றெக்ஸ்**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
02 புரட்டாதி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# மீட்பு வரலாற்றிலே மரியன்னைக்கு ஓர் தனியிடம் உண்டு

பரிசுத்த திருச்சபையானது புரட்டாசி மாதம் 8ம் திகதி அன்னை மரியின் பிறந்த தினத்தை கொண்டாடி வருவது நாமறிந்ததே. மீட்பு வரலாற்றிலே மரியன்னைக்கு ஓர் தனியிடம் இருப்பதை எவரும் மறுக்கமுடியாது. உலக மீட்பராகிய இயேசுவை கருத்தாங்கி பெற்றெடுத்த பெருமை மரியன்னையைச் சாரும். அதேவேளையில் திருச்சபை மீதும் தனிப்பட்ட அக்கறையுடையவளாய் திகழ்கின்றாள். மரியன்னையின் மகிமையைப் பரவச்செய்த பல புனிதர்கள் இறைவல்லுனர்கள் திருத்தந்தையர்கள் பலர் நமது திருச்சபையிலே இருக்கின்றனர். இன்றும் பலர் உற்சாகத்துடன் மரியன்னையின் பக்தியை வளர்த்திட முனைந்துவருகின்றனர். இதற்கு நல்லதொரு சான்றாக அமைவதுதான் அன்னையின் பெயர்கொண்ட ஆலயங்கள். அதேவேளையில் மரியன்னையை இழிவாக பேசுவோரும் நம்மிடையே இல்லாமலும் இல்லை என்பதை நாம் மறுக்கவியலாது. சிப்பிக்குள் இருக்கும் முத்து முக்கியமா? அல்லது சிப்பி முக்கியமா? முத்தை பெற்றுக்கொண்ட நாம் ஏன் சிப்பியை பிடித்துக்கொண்டிருக்க வேண்டும். சிப்பி செல்லாக் காசுதான். ஆனால் முத்தை உருவாக்கியது யார்? பாதுகாத்தது யார்? முத்து முத்தாக இருக்க சிப்பி எந்தளவிற்கு முக்கியம் என்று நாங்கள் உணர்ந்திருக்க வேண்டியது அவசியமானதொன்றாகும். எனவே அன்னை மரியின் பிறந்த தினத்தை சிறப்பிப்பதோடு எமது கடமை முடிந்துவிடுவதில்லை. அன்னையின் வழி நாம் நடந்திட வேண்டும். அவளின் பண்புகள் எமது வாழ்வாகிட வேண்டும். இன்று அன்னை மரியாளுக்கு கோலாகலமாக விழாக்கள் பல எடுக்கப்படுகின்றன. ஆடம்பரமான ஆலயங்கள் பல கட்டப்படுகின்றன. இவையெல்லாம் தேவையானதே. ஆனால் மக்கள் மனங்களிலும் அன்னையின் பண்புகளான விசுவாசம், தாழ்ச்சி, பிறரன்பு ஆகிய பண்புகள் வளர்ந்திட வேண்டும். இவைதான் நாம் அன்னைக்கு அளிக்கும் அன்புப் பரிசு.

அன்பார்ந்த வாசகர்களே! “ஞான ஒளி” தனது எட்டாவது வருடத்தை நிறைவு செய்து, ஒன்பதாவது வருடத்தில் கால் பதிக்கின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதற்கு முழுக் காரணமும் வாசகர்களாகி நீங்களே என்பதை இவ்வேளையில் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன். இப்பத்திரிகையானது பல இல்லங்களையும், உள்ளங்களையும் வயது வரம்பின்றி கவர்ந்து வருவதென்றால், அது நீங்கள் தரும் ஆதரவினாலேயே ஆகும். இப்பத்திரிகை இதுவரை காலமும் சிறப்பாக வெளிவர எமக்குத் துணைநின்ற எல்லாம் வல்ல இறைவனுக்கு எமது கோடானகோடி நன்றிகள். அதேவேளையில் இப்பத்திரிகைக்கு பலவிதத்திலும் ஆக்கமும் ஊக்கமும் தந்துதவும் அனைத்து அன்பு உள்ளங்களையும் இந்நேரத்தில் நினைவுகூறுவதோடு எனது மனமார்ந்த நன்றிகளையும் கூறிக்கொள்கின்றேன். மேலும் கடந்த சில மாதங்களுக்கு முன் நான் எமது பத்திரிகை நட்டத்தில் ஓடிக்கொண்டிருப்பதாக கூறியிருந்தேன். அதை கருத்திற்கொண்டு பல பங்குகள் எமது பத்திரிகையை கூடுதலாக வாங்கி விற்பனை செய்கின்றனர். எமது வேண்டுகோளுக்கு செவிசாய்து உதவிய அனைத்து பங்குத் தந்தையர்களுக்கும், விளம்பரங்களை தந்துதவிய வர்த்தகர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்கின்றேன். மேலும் இப்பத்திரிகையில் உங்கள் பங்கு திருவிழாக்கள், இறந்தவர்களின் நினைவுநாட்கள், திருமண சேவைகள் போன்ற விளம்பரங்களை கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஞான ஒளி இறைமக்கள் மனங்களில் குடிகொண்டு இறைபிள்ளைக்குரிய படிப்பினையை மேலும் கற்பித்து இறைவனில் மென்மேலும் நாமெல்லோரும் இணைந்து வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டி நிற்கின்றேன்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

# தலைமுறைகள் வாழ்த்தும் தவப்புதல்வி



பிதாவின் செல்ல குமாரத்தி, சுதனின் அன்னை, தூய ஆவியின் பத்தினி என்று மூவொரு கடவுளின் இதயமாகத் திகழ்ந்தவள் அன்னை மரி. இறைவன் தம் மீட்புத் திட்டத்தில் பலரை உடன் உழைப்பாளர்களாகத் தேர்ந்து கொண்டார். இந்த தேர்ந்து கொள்ளல் இறைவனே விரும்பி அழைக்கும் அழைப்பு. “தாய் வயிற்றில் நீ உருவாகும் முன்னே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன்” (எரே 1:5) என்கிறார். உலகம் தோன்றிய பொழுதே ஆதாம், ஏவாளை உருவாக்கிய பொழுதே “உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன், அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்” (தொ.நூ 3:15) என்று சொன்ன பொழுதிலேயே இறைச் சிந்தையில் பிறந்துவிட்டவர் அன்னை மரியா. “நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்” (யோவா 15:16) என்று சொல்லி தமக்குரியவர்களைத் தேர்ந்துகொள்கிறார். தமது பரிசுத்த திருமகன் பிறப்பதற்கு பரிசுத்தமான, ஜென்மப் பாவமாக கூட இல்லாமல் அமல உற்பவியாக அன்னை மரியாவைப் பிறக்கச் செய்கின்றார். இந்தப் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் 1854ஆம் ஆண்டு, திருத்தந்தை 9ஆம் பயஸ் “மரியா தாம் உற்பவித்த நொடியிலிருந்தே வல்லமை மிக்க இறைவனின் தனிப்பட்ட அருளினாலும், இயேசு கிறிஸ்துவின் பேறுபலன்களினாலும், பிறப்பு நிலை பாவத்தின் (சென்மப்பாவ) கறைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டார்” என்ற விசுவாசக் கோட்பாட்டை அறிக்கையிட்டார். 1830ஆம் ஆண்டு கத்தரீன் லபோரே என்ற புனித கன்னியருக்குக் காட்சி கொடுத்த போதும், 1858இல் லூர்து புனித பெர்னதெத்துக்குக் காட்சி கொடுத்து “நாமே அமல உற்பவம்” என்று அறிவித்த போதும் இந்த உண்மையை உறுதி செய்திருக்கின்றார் நமது அன்னை.

> “மரியா தாம் உற்பவித்த நொடியிலிருந்தே வல்லமை மிக்க இறைவனின் தனிப்பட்ட அருளினாலும், இயேசு கிறிஸ்துவின் பேறுபலன்களினாலும், பிறப்பு நிலை பாவத்தின் (சென்மப்பாவ) கறைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டார்”


இவர் பிறப்பின் அதிசய அடையாளங்களைப் பார்க்கும்போது இறைத்திட்டம் எங்ஙனம் வல்லமையுடன் செயல்படுகிறது எனப்புரிந்து கொள்ளலாம். கி.பி இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யாக்கோபின் நற்செய்தியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. “வயதான, இனிமேல் குழந்தை பிறக்காது என்று கருதப்பட்ட சுவக்கீன் - அன்னம்மாள் தம்பதியர்க்கு வானதூதர் வழியாக மரியாவின் பிறப்பை இறைவன் முன்னறிவித்தார். சுவக்கீன் - அன்னம்மாள் இருவரும் இறைச்சித்தத்தின் படி புண்ணிய தம்பதியராக வாழ்ந்ததால்தான் கடவுள் அவர்களைத் தேர்ந்து கொண்டு, அவர் மூலமாக தம் மகனின் தாயை அன்னை மரியை பிறக்கச் செய்தார்.

இதனால் மனம் மகிழ்ந்த இவர்கள் தம் தாழ்நிலையை அகற்றிய இறைவனில் மனம் மிக மகிழ்ந்து, பிறக்கப்போகும் குழந்தையை ஆலயத்திற்கு அர்ப்பணிப்பதற்காக தேர்ந்து கொண்டனர். பத்தாம் மாதம் குழந்தை பிறந்ததும் வானதூதர் அறிவித்தபடி அக்குழுந்தைக்கு “மரியா” (கடலின் நட்சத்திரம்) என்று பெயரிட்டனர். பின்பு, தமது நேர்ச்சையின்படி மூன்று வயதிலேயே எருசலேம் தேவாலயத்தில் காணிக்கையாக அன்னை மரியாவை ஒப்புக்கொடுக்கின்றனர். மரியாவும் மிக மனமகிழ்வோடு பெற்றோர் சொல்லுக்குப் பணிந்து ஆலயத்தில் தங்கி வாழச் செல்கிறார். அங்கு ஆலய உறைவிடப்பள்ளியில் கல்வி கற்கவும், கடவுளின் தாயாகும் நிலைக்கு தன்னை தயாரிக்கவும் ஆலயத்திலேயே இருந்தார் என மரபு வழி நம்பப்படுகிறது...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இன்றையச் சூழலில் மரியாவின் பிறப்பு!



இந்த உலகில் இருக்கின்ற, உருவாக்கப்பட்ட ஒவ்வொன்றுக்கும் நிரந்தரமான குறிக்கோள் உண்டு என்பது வேத மறைகள் சொல்லுகின்ற உண்மை. பிறப்பும், இறப்பும் இந்த உலகில் சதாகாலமும் நடந்தேறுகின்ற ஒரு முடிவில்லா இறைவனின் செயற்பாடு என்று இறைநம்பிக்கையுள்ளோர் கூறுகின்றனர். மற்றவர்கள் ‘இது இயற்கையின் நியதி’ என்று விஞ்ஞானம் கற்பிக்கின்றது. வேறு சிலர் ‘இது புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிர்’ என்று நம் புத்தியைக் கூர்மையாக்குகின்றனர். இப்படி இந்த உலகில் நிகழ்கின்ற ஒன்றை எப்படியும் கூறலாம் என்பது தெளிவாகிறது.

மேலே கூறியதை எழுதியதைச் செய்வதற்கு ஒருவன் வேண்டும். அவன் இந்த உலகில் பிறந்தாக வேண்டும். இதையெல்லாம் எழுத வேண்டுமென்ற குறிக்கோள் அவனிடம் இருப்பதால் அவன் அதை எழுதுகின்றான். இன்றையச் சமூகத்தில் பிறப்பைக் கொண்டாடுகின்ற மனிதர்கள் நம் மத்தியில் இருக்கின்றார்கள். பெற்றெடுக்க வேண்டுமென்று ஏங்கும் பெண்கள் இருக்கின்றார்கள். வந்தோம், வாழ்வோம், வீழ்வோம் என்று வெந்ததைத் தின்று, விதி வந்தால் சாவோம் என்றும் ஒருசிலர் இருக்கின்றனர். இப்படி பிறப்பையும், பிறப்பித்தலையும் அனுபவிக்க மனிதர்கள் இருக்கின்றனர். இதில் இறைவனோடு இணைந்து, அவரின் உருவாக்கும் பணியில் பலர் பங்கு பெறுகின்றனர்.

பிறந்ததைக் கொண்டாடும் மனிதர்கள் இருக்கின்றனர். ‘ஏன் பிறந்தய்?’ என்று கூவி அழும் மக்களும் இருக்கின்றனர். தெரிந்தவர் ஒருவர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். பிறகு அவரது குடும்பக் கதையெல்லாம் பேசிவிட்டு, “உங்களிடம் இன்னொரு முக்கியமான சந்தோசமான செய்தி சொல்ல வேண்டும்” என்று சொன்னார். நான் ஏதோ இடம் வாங்கி இருக்கிறார், நான்கு சக்கர வண்டி வாங்கி இருக்கிறார், இல்லை பையன் கல்லூரியில் தங்கப் பதக்கம் வாங்கியிருப்பான் போலும் என்று யோசித்தபோது, “எங்க வீட்டு நாய் ஆறு குட்டி போட்டிருக்கு. அதை பலருக்கு விற்று ரூ.6000க்கு மேல் சம்பாதித்தோம்” என்று கூறி மகிழ்ந்தார்.

நாய் குட்டி போட்டது சந்தோசம். மேலும் அதன் வழியாக அவருக்குப் பணம் கிடைத்தது சந்தோசம். இப்படி மிருகங்கள், செல்வப் பிராணிகள் பெற்றெடுக்கும்போது மனிதர்களுக்கு சந்தோசம். காரணம் அதன் வழியாகப் பணம் சேர்க்கலாம் என்று.

இன்று ஒருபுறம் மனிதர்கள் தாம் பெற்றெடுக்கும் குழந்தைக்காக மகிழ்வும், பெருமிதமும் கொள்வதைப் பார்க்கின்றோம். வேறு சிலர் இது ஏன் பிறந்தது என்றும், அதை அப்படியே அனாதையாக மருத்துவமனைகளிலும், மற்ற பொதுவிடங்களிலும் விட்டு விட்டு ஓடுவதையும், வேறுவிதமாகப் பிறந்ததைத் தாயே கொலை செய்து கிணற்றிலும், வேலியிலும், மற்ற இடங்களிலும் தூக்கி எறிந்துவிட்டுப் போகின்ற நிகழ்வுகளை இன்று தொலைக்காட்சிகளிலும், செய்தித் தாள்களிலும், பிறர் சொல்லவும் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

இந்தியா போன்ற நாடுகளில் பெண் குழந்தையாக இருந்தால் அது வளர்ந்தவுடன் நமக்குச் செலவு வைக்கும் என்று ஒருசில பகுதிகளில் அதைக் கொன்று போடுகின்ற ஈவு இரக்கமற்ற மக்களையும் நமது சமூகத்தில் காண்கின்றோம்.

விவிலியத்தில் மோசேயின் பிறப்பு ஒரு பாடம். பார்வோன் மன்னனுக்குப் பயந்து அவர் ஆற்று நீரில் விடப்பட்டதால் அரண்மனையில் வளர்ந்து மக்களின் விடுதலைக்கு இறைவனால் அழைக்கப்பட்டதை நாம் படிக்கின்றோம். பிறப்பு என்பது இவ்வுலகில் ஏதோ ஒரு பணியைச் செய்யத்தான் என்பதை பெற்றெடுப்போரும், பிறரும், அந்த நபரும் உணர்ந்துவிட்டால் இந்த உலகில் மக்களை மீட்க, அவர்களை சமூகக் கட்டுகளிலிருந்து, அடிமைத்தனத்திலிருந்து, சாதியச் சம்பிரதாயங்களிலிருந்து மீட்டெடுக்கத்தக்க நபர்களை நம்மால் வாழ வைக்க முடியும்.

அந்த வகையில் பார்க்கும்போது இம் மாதம் 8ஆம் திகதி அன்னை மரியாவின் பிறப்பை நாம் கொண்டாடுகின்றோம். தனது பெற்றோர்களால் வேண்டிப் பெறப் பெற்ற வரப்பிரசாதமான குழந்தை இளம் பருவத்திலிருந்து இறைவனுக்கு நேர்ந்தளித்து, தன்னையே முழுமையாக இறைவனுக்குத் தந்துவிட்டவராகப் விவிலியத்தில் அடங்காத நூல்கள் கூறுகின்றன.

ஒரு கன்னியாக இருந்து கொண்டு சமூகக் கட்டுப்பாடுகளையும் மீறி, அதன் அடக்கு, ஒடுக்குமுறைகளுக்கு இடம் கொடுக்காமல் ஒரு சுதந்திர மனுஷியாக இறைவனுக்கு “இதோ, உமது அடிமை” என்று அர்ப்பணம் செய்து, அந்த இறைமகனுக்குத் தன்னையே முழுமையாக அளித்ததினால் அவருக்கே தாயாகும் நிலையை அடைந்தார்.

தன்னை இறைவனுக்கு அர்ப்பணம் செய்தாலும், தனது மானிடப் பிறப்பால் மாந்தருக்குச் சொந்தமானார் என்பதை உணர்ந்து, இறைவனின் வழிகாட்டலினால் மனித சமூகத்திற்குத் தன்னையும், தன் மகனையும் அளித்த அன்னையின் விழாவைக் கொண்டாடும்போது அவரின் பிறப்பை எண்ணிப் பெருமைப்படுகின்றோம்.

**அரிது அரிது மானிடராகப் பிறத்தல்**
**அரிது – அதனினும்**
**கூன் குருடு செவிடு பீடு நீங்கிப் பிறத்தல் அரிது!**

அதிலும் ஒரு பெண்ணாகப் பிறந்து பேரண்டத்தை ஆள்கின்ற பேரொளியைத் தன் தலையில் இருத்தி, தனக்கும், பிறருக்கும் மங்கா ஒளி கொடுத்த மங்கையர்க்கரசியை அவரின் பிறந்த நாளில் வாழ்த்தி, இறைவனுக்கு நன்றி கூறி, நாமும் பிறப்பின் மேன்மையை உணர்ந்து, பெற்றோருக்கும், உற்றாருக்கும், உடன் பிறந்தாருக்கும் கீழ்ப்படிந்து வாழ வேண்டும்.

சீனாவில் அதிகமான முதியோர்கள் உள்ளனர். இளைஞர்கள் இல்லை. ஆகவே, குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் உத்தரவு கொடுத்துள்ளது. குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரில் இயற்கைக்கு மாறாக நடக்கும் மனிதர்கள் இன்று மலிந்துக் கிடக்கின்றனர்.

இன்றைய அதிமுக்கிய தேவை சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது. பெண்ணடிமைத்தனத்தை விரட்டுவது. இதைச் செய்தால் நல்ல பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் தாய்மார்களையும், சமூகத்தையும் உருவாக்கலாம். அவர்கள் வாழ்கின்ற இடமான இந்தப் பூமியை ஒரு பாதுகாப்பான இடமாக உருவாக்க வெப்பம் தணித்து, காடுகளைப் பாதுகாத்து, இயற்கையை அழகு கொஞ்சும் இடமாக மாற்ற நல்ல மனிதர்களாக நாம் மாறவேண்டும். நல்ல குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும்.

மரியாவின் பிறந்த நாள் எப்படி மீட்பின் காலத்தின் விடியலோ, அதுபோல் இறைமகனாக இயேசுகிறிஸ்துவும் உலகிற்கு ஒளி வீசுகிறார். நாம் ஒவ்வொருவரும் அடுத்திருக்கும் மனிதருக்கும், அடுத்துவரும் மனித இனத்திற்கும் விடிவெள்ளியாக இருக்கவும், கிறிஸ்துவின் ஒளியைப் பெற்று மறு கிறிஸ்துவாக மாறவும் வேண்டுமென்றால் அன்னை மரியாவைப்போல் அந்த ஆதவனை நம் உள்ளத்தில் நிறுத்தி, இனியொரு சமூகம் செய்வோம். அதில் தனிமனிதச் சுதந்திரத்தைப் பாதுகாத்து, தன்னலம் துறந்து, பிறர்நலம் நாடி எங்கும் மனித மாண்பு வளர்ந்திட நம்மாலான உதவிகளைச் செய்து அன்னையின் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவோம்.

## மரியன்னைக்கு எது சிறந்த அன்பளிப்பு

மரியன்னையின் புண்ணியங்களான தாழ்ச்சி, அன்பு, பொறுமை, கற்பு, கீழ்ப்படிவு முதலிய புண்ணியங்களை அனுசரிப்பதாக உறுதி செய்து அதற்காக பெருமுயற்சி செய்வதே அன்னைக்கு நாம் கொடுக்கும் சிறந்த அன்பளிப்பாகும். அன்னையும் தம் பிள்ளைகளாகிய நமக்கு வேண்டிய வரங்களைத் தாராள மனதுடன் கொடுப்பார். நாம் அவருடைய பிரியமுள்ள பிள்ளைகளாக நடந்துக் கொண்டால் அவர் தாயென தன்னைக் காட்டுவார். அவருடைய அமல உற்பவத்தை குறித்து அல்லது கடவுள் அவருக்குக் கொடுத்துள்ள வல்லமை, ஞானம், இரக்கம் இவற்றிற்கு நன்றியாக காலையிலும், மாலையிலும் மங்கள வார்த்தை மன்றாட்டை மும்முறை சொல்லி பாவத்தை விலக்கவும், அவரது புண்ணியங்களை அனுபவிக்கவும், அவரது உதவியை நாடுவோம்.

***தூயோர்களாம் எல்லோரும் – நீ***
***தோன்றும் நாளினை***
***ஓயாமல் நோக்கிப் பார்த்தே***
***தம் முன் மகிழ்ந்தாரே***

## அன்னை மரியின் பிறப்பு விழா

### புரட்டாதி 8 ஆம் திகதி கொண்டாடுவதற்கு காரணம் என்ன என்று தெரியுமா?

**இதோ ஒரு கதை**

ஒவ்வொரு ஆண்டும் புரட்டாதி 8ம் திகதி ஒரு துறவி இனிமையான இசையைக் கேட்டு மகிழ்ந்து ஆச்சரியப்படுவாராம். ஆனால் அந்த இசை எங்கிருந்து வருகிறது என்று தெரியாமல் இருந்தார். எனவே பல ஆண்டுகள் கடவுளிடம், அதைத் தமக்கு வெளிப்படுத்தும் படி வேண்டினாராம். அப்பொழுது ஒரு நாள் அதே புரட்டாதி 8ஆம் திகதி அவருக்கு அதைப் பற்றி வெளிப்படுத்துவதாக கூறியிருந்தார். அதாவது அந்த நாளில் அன்னைக்கு விண்ணகத்தில் வானதூதர்கள் பிறந்தநாள் விழா எடுத்து அன்னையைப் புகழ்ந்து பாடுகின்ற இசைதான் அவர் கேட்டதாக அவருக்குச் சொல்லப்பட்டது. எனவே நாமும் நமது அன்னைக்கு இந்த உலகத்தில் விழா எடுக்க வேண்டும் என்று திருத்தந்தையிடம் சென்று அத்துறவி சொன்னார். அப்போது திருத்தந்தையாக இருந்த 14ம் பெனடிக்ட் உலகளாவியத் திருச்சபைக்கு அன்னையின் பிறப்பு விழாவினை புரட்டாதி 8ம் திகதி கொண்டாடப் பணித்தார்.

## கருணையின் தாயே

விண்ணகத் தந்தையின் எண்ணிலா வரமுடன்
மண்ணகம் வந்த கன்னி மா மரியே!
அன்பின் நிறைவாய் அழகின் உருவாய்
மன்னன் இயேசுவை பெற்ற தாயே!

தாயே நீர் செய்த புதுமைகள் ஏராளம்
- மோர் கண்ட முடவனை
நடக்க வைத்தாய்
- முத்தெடுக்க வந்தவனை
பிழைக்க வைத்தாய்
- கடல் வழி வந்த போர்ச்சுகருக்கு
கலங்கரை விளக்கமானாய்

உன் கால்கள் நனைக்கவே
கடல்கள் நித்தம்
உன்னால் தானே முடிவுக்கு வந்தது
பல யுத்தம்

உன் ஆலயத்தில் தானே
எரிந்துகொண்டே இருக்கிறது
அணையா விளக்கு

உம் வழியில் நாம் செல்ல
வழிநடத்தும் கருணைத் தாயே.

# தூய கன்னி மரியாவின் பிறப்பு விழா

## “வெள்ளிச்சுரங்களின் அலைகளிலே, துள்ளி வருகின்ற சந்தங்களே, சொல்லிப்பாடுங்களே எம் தேவ அன்னைக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை”






அருள் மிகப் பெற்ற மரியே!
ஆண்டவர் உம்முடனே என வாழ்த்தப்பட்டவளே
அன்பின் அன்னையாம் உம்மை
அடியவர்கள் நாம் வாழ்த்துகின்றோம்.
அமலோற்பவ கன்னிகையே! இறைவனின் மேலான
படைப்பே! உம்மை வாழ்த்துகிறோம்.
அனைத்துப் படைப்புகளும் ஒன்றிணைந்து
வாழ்த்துகின்றது அன்புத்தாயே.

திருமகளாய் தெய்வப்புதல்வியாய் பேறுபெற்ற
அன்னம்மாள், சுவக்கீன் பெற்றெடுத்த திருமகளே!
திருயேக தேவனின் திருவரம் பெற்ற தேவதாயே!
தினமும் நாம் தேடிவரும் தாய்மரியே,
திருத்தாயே - உம்
திருத்தலம் நாடி வந்தோம்
எம் வாழ்த்துக்களை கூற.

என்ன தவம் செய்தோம் இறைவா!
மானிடர் நாம் - உம்
தாயை எம் தாயாகப் பெற
எப்பொழுதும் எந்நாளும்,
எம்மையெல்லாம் காப்பாளே,
எம் ஆண்டவர் இயேசு எமக்களித்த
எம் அன்புத் தாயே! நாம்
எல்லோரும் ஒன்றிணைந்து வாழ்த்துப்பா,
பாடினோம் அம்மா

வாழ்க அன்னையே! வாயார வாழ்த்தினோம்
உம்மைப் புகழ்ந்து
வந்தனங்கள் புரிந்தோம், வாழ்த்துக்கள்
சமர்ப்பித்தோம்.
வாழ்க அரசியே! பேருபகாரியே! பாடினோம்
உன் புகழை
வாழ்க, வாழ்கவென்று வாழ்த்தினோம்
வையகம் அனைத்தும் இணைந்து

தூய கன்னித்தாயே! தூதர்கள் வணங்கும்
தூய இராக்கினியே
தூய மாதாவே, துன்பங்களை துடைத்து
துயர்போக்கும் தாயே!
தூய மரியே, துணை தந்து வழிநடத்துமம்மா,
தூயவன் பாதம் நோக்கி,
தூய்மைவழி நடந்திடவும், தூண்டுதல் தந்து
துயர் போக்கும் தாயே!

தாவீது குலத்தின் மாணிக்கச் சுடரே,
தந்தையாம் இறைவனின் அன்பு மகளே,
தாசர்கள் நாம் தாள் பணிந்தோம், தாயே
தயை கூர்ந்து காப்பாயே அம்மா!

தாயே! தஞ்சமே! தனயர்கள் நாம், உம்மை
வாயார வாழ்த்தினோம் அம்மா
தாயக மக்கள் நாம், பாடிப்புகழ்ந்து
வாழ்த்தினோம் அம்மா!

மனிதகுல மாணிக்கமாய், மண்ணில்
உதித்த மாமரியே!
மங்காப்புகழ் பெற்று மாண்புடன் நீர்
வாழ வாழ்த்தினோம் தாயே!
மனுக்குலம் மீட்புப் பெற, மனுமகன் இயேசுவை
பெற்றெடுத்த தாயே!
மனுவான இறைவனிடம் உம் மக்கள்
எமக்காய் மன்றாடுவாய் தாயே!

இறைவனின் தூய மாதாவே!
இதோ உம்மிடம் சரணடைந்தோம்
இகமெல்லாம் உம்புகழ் ஓங்கிட,
ஒலித்தி வேண்டுமம்மா
இதோ! உம் அடைக்கலம் தேடி வந்தோம் தாயே!
இனிய உம் ஆசியை ஏராளமாய்
எம்மீது பொழியுமம்மா

கொண்டாடுவோம், கோலங்கள் போட்டு, குவலயம்
போற்றும் கோமகளை
கொட்டுவோம் மேளம், ஆடிப்பாடி ஆர்ப்பரிப்போம்
எம் அன்னை மரியை வாழ்த்தி
கொண்டு செல்வோம் விளக்குகளை கலங்கரைத்
தீபமான எம் கன்னிகைக்கு
கொடைகளை வழங்கி வாழ்த்துப்பா
பாடிப்புகழ்வோம் எம் அன்னையை

குவலயம் போற்றும் தாய்மரியே
குகைக்குன்றே வாழி,
குடும்பங்களின் இராக்கினியே குடும்பமாய்
உம்மை வாழ்த்தினோம் அம்மா
குலமகளே! அருளின் இருப்பிடமே,
நீ எந்நாளும் வாழ்கவே!
குதூகலமாய் வாழ்த்தினோம் வணங்கினோம்
தாயே! வாழ்க வாழ்கவே!

பிறந்த நாள் வந்ததம்மா,
பேருவகை கொள்கிறோம் அம்மா!
பிறந்த நாள் வாழ்த்துக்களை பெருந்திரளான
மக்கள் நாம் அளிக்கின்றோம் அம்மா!
பிறந்தநாள், பிறந்தநாள் எம் அன்பு
அன்னையின் பெருநாள்
பிறந்த நாள் வாழ்த்துக்களை பெருமையுடன்
வழங்குகின்றோம் உம் மக்கள் நாமம்மா!

பாவால் பண்ணிசைத்து, பூவால் பூமாலை அணிந்து
பாடிப் போற்றி பற்பல இராகங்களில்
யாழினை மீட்டு - உம்
பாதம் பணிந்தோம் தாயே
பாவிகள் எமக்காய் மன்றாடுவீர்
பார்போற்றும் அன்னையே, பாசத்தின் தாயே,
பரவசமாய் உம்மை வாழ்த்துகின்றோம் அம்மா

**அருட்சகோ. டெலா றோஸ். அ.கா**




# ஞான ஒளி பத்திரிகை

**9வது வருடத்தில் கால்பதிக்கும்** *புரட்டாதி - 5*

ஞானமே உருவான,
ஒளியின் வடிவான,
அருள் நாதர்
ஆண்டவர் இயேசுவின்,
அன்பு வழிகளை,
அருள் மொழிகளை,
ஆன்மீக வழிகளை,
அனைவருக்கும்
ஞான மொழிகளாக,
வாழ்வின் வழிகளாக,
வாரி வழங்கும்
ஞான ஒளிக்கு,
நலன்கள் நன்கு
அமைந்திட,
நாமும் நல்லாயரை
நாளும் வேண்டுவோம்.
நாளும் பொழுதும்
நட்டமே வந்தாலும்,
சோர்ந்து போகும்
கட்டமே வந்தாலும்,
சோர்ந்து போகாது,
கலிப்படையாது,
சோதனைகளையும்
சாதனைகளாக்கி,
வேதனைகளையும்
வலிமையுடன் வென்று,
ஞானம் என்னும்
நல் விருந்தை,
நல் வாக்கை,
வாசகர் நெஞ்சில்
ஊற்றி, உற்சாகம்
ஊட்டி, உயர்வுக்கு
உற்ற துணையாய்,
வழிகாட்டியாய்
வந்து உதித்த
ஞான ஒளியே வாழ்க,
வசந்த காலம் வருக,
என்று வாயார
வாழ்த்துகிறோம்.
ஆன்மாவின்
இருளை அகற்றி,
அருளைப் பொழிந்து,





இறைவனின் அன்பை,
இரக்கத்தின் பண்பை,
இதயத்தில் பதித்து,
ஞானம் என்னும்
ஒளியை ஏற்றி வைத்த,
ஞான ஒளியே
உலகின் ஒளியாய்,
உன்னத வழியாய்,
வாழ்வின் வசந்தமாய்,
வாசகர் எம்முடன் வலம்
வருவாயே.
வாழ்வின் வார்த்தையாய்
வந்து உதிப்பாயே.
ஞானத்தின்
வார்த்தையாய் வந்து
இறைவனைத்
துதிப்பாயே.

**ஆக்கம்:**
**பென்ஜமின் சோமநாதர்.**
**தெஹிவளை.**

# குடும்பத்தில் சண்டை



**மனைவி தனது குடும்பத்தினரைக் கவனிப்பதை விடத் தனது கணவனின் பெற்றோர் சகோதரர்களைக் கவனமாகப் பார்க்க வேண்டும். அப்போது அவர்கள் மருமகள் என்று ஏற்பதைவிட, மகள் என ஏற்றுக் கொள்வர்.**



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு 160

மனிதனை இறைவன் தமது சாயலாகப் படைத்தார். அதாவது அன்பின் சாயலாகப் படைத்தார். (ஆதி 1.:.27) மனிதன் சுயநலத்தால் இன்று அன்பின் சாயலாக இல்லை. திருமண உடன்படிக்கையின் மூலம் ஒருவர் மற்றவரை அன்பின் சாயலாக மாற உதவுவேன் என்ற குறிக்கோளில் வாக்குறுதி எடுத்தனர். திருமணத்தின் போது இக்குறிக்கோள் இருவருக்கும் இல்லையேல் குடும்பத்தில் அடிக்கடி சண்டை ஏற்படும். நீ, எனக்காக வாழவேண்டும், எனக்காக மாறவேண்டும் என எதிர்பார்ப்பதே சண்டைக்கு ஆணிவேர். உனக்காக என்னை மாற்றுகிறேன் என யாரும் எண்ணுவதில்லை.

குடும்பத்தில் ஒற்றுமை நிலவ போதை, மது போன்றவற்றைக் கணவன், மனைவி பாவிக்காது இருத்தல் வேண்டும். காரணம் அதனால் பல கெடுதிகள், பணச் செலவுகள் ஏற்படுகின்றன.

மேலும் மனைவி தனது குடும்பத்தினரைக் கவனிப்பதை விடத் தனது கணவனின் பெற்றோர் சகோதரர்களைக் கவனமாகப் பார்க்க வேண்டும். அப்போது அவர்கள் மருமகள் என்று ஏற்பதைவிட, மகள் என ஏற்றுக் கொள்வர். அது போன்றுதான் கணவனும்.

திருமணம் முடிக்கும் போது இருவருக்கும் சில எதிர்பார்ப்புகள் இருந்திருக்கும். அவை நிறைவேறியுள்ளனவா? இல்லையேல் இருவரும் மனம்விட்டுப் பேச வேண்டும். ஒருவர் மற்றவரில் எதை எதிர்பார்க்கிறார்? என்பதை அறிதல் வேண்டும்.

இருவரும் கலந்துரையாடித் தமது குடும்பத்தின் குறிக்கோளைத் தெளிவுபடுத்த வேண்டும். தமது தொழில், பிள்ளைகளின் படிப்பு, குடும்ப முன்னேற்றம் போன்றவற்றில் இருவரும் கலந்துரையாடி ஒரு குறிக்கோளில் வாழ வேண்டும். இல்லையேல் இருவரும் இருகுறிக்கோளில் வாழ முனைவர். அதனால் அடிக்கடி சண்டை ஏற்படலாம்.

நான், எனது என்பது மாறி நாம், எமது என எதையும் சிந்திக்கப் பழக வேண்டும். ஒருவர் ஒருவரைப் புரிந்து கொள்ள வேண்டும். பாராட்ட வேண்டும், செவிமெடுக்க வேண்டும், விட்டுக்கொடுக்க வேண்டும், மதிக்க வேண்டும், அன்பு செய்ய வேண்டும். மன்னித்து மறத்தல் வேண்டும். ஒருவரது பெலவீனத்தில் மற்றவர் அவரைத் தாங்கிக் கொள்ளவேண்டும். கோப உணர்வில் செயற்படும் போது அக்கோப உணர்வை வெளிப்படுத்தச் சூழலை ஏற்படுத்தி உதவ வேண்டும்.

பெற்றோர் சகோதரர்களுக்கு உதவும் போது இருவரும் கலந்துரையாடிச் சேர்ந்தே உதவப் பழக வேண்டும். மற்றவர்கள் அறியும் விதத்தில் சண்டை பிடிக்காது வீட்டிற்குள் சண்டை பிடிக்க வேண்டும். சண்டை பிடிக்கும் போது இருவருக்கு மட்டும் தெரிந்த பெலவீனங்களை எல்லோரும் அறியும் விதத்தில் கத்தக் கூடாது. சண்டை பிடிக்கும் போது பெற்றோர், சகோதரர்களை இழுத்துப் பேசக்கூடாது.

ஒரு தலைப்பில் சண்டை பிடிக்கப் பழக வேண்டும். ஒரு தலைப்பில் சண்டை தொடங்கிப் பல தலைப்புகளில் உருவெடுத்துப் பூகம்பமாக வெடிக்கக் கூடாது.

ஒருவர் மற்றவருக்கு மறைத்துச் செயற்படுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். முகமூடி போடாது வாழப்பழக வேண்டும். பொய் சொல்லி வாழ்ந்து அகப்பட்டால் ஒருவரில் மற்றவர் வைத்துள்ள நம்பிக்கை, விசுவாசம் உடைந்து விடும்.

ஆடம்பரமான வாழ்வை விட்டு மற்றவர்களுக்குப் பொறாமை ஏற்படுத்தாத விதத்தில் வாழப் பழக வேண்டும். அவசியமானதை மட்டும் பாவிக்கப் பழக வேண்டும்.

பிள்ளைகளைச் செல்வங்களாக எண்ணப்பழக வேண்டும். பிள்ளைகள் இரு விதத்தில் எமக்குக் கிடைக்கின்றன. எமக்குப் பிறக்கும் பிள்ளைகள் அடுத்தது வளர்ப்புப் பிள்ளைகள். இருவரையும் ஒரே விதத்தில் கவனிக்கப்பழக வேண்டும். வளர்ப்புப் பிள்ளையைக் குறைத்துப் பார்ப்பது பிழையாகும்.

பிள்ளைகளைக் கண்டிக்கும் பொழுது இருவரும் ஒருமனப்பட்டே கண்டிக்க வேண்டும். ஒருவர் கண்டிக்கும் போது மற்றவர் அதைப் பிள்ளைகளுக்கு முன்னால் எதிர்ப்பது தவறு. குடும்பத்தில் எல்லோரும் இருந்து மனம் விட்டுக் கலந்துரையாடி, செபிப்பது நன்று. எமது குடும்பங்களை வளர்ப்போம். சமுதாயத்தில் நல்ல பிள்ளைகளை உருவாக்குவோம். இறை அன்பில் வாழ்வோம்.

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

## நலம் பெறுக.

என் தெய்வமே!
வரலாறு காணாத இயற்கை அழிவில்
சிக்கித் தவிக்கும் கேரளா மக்கள்
உடலாலும் மனதாலும் வேதனையுற்று,
நோயுற்று, உறவு இழந்து இருக்கின்றார்களே,
அவர்கள் உடனே நிவாரணம் பெற
பிரார்த்திக்கின்றோம்.
வழி தெரியாதோர், குழந்தைகள், முதியோர் என
பாதுகாப்பற்றவர்கள் அனைவருக்கும் நன்மை
பயக்கும் தெய்வீகத்தால் காக்கப்படுவார்களாக.
இவ் அவதியுறும் மக்களுக்கு மனிதாபிமானம்
கொண்டு உதவி புரிந்திடவும், ஒருவருக்கொருவர்
நட்புறவு காட்டிடவும் அனைவரும் அமைதி
காணவும் நலம் அளிப்பீராக!

## நீதியும் அமைதியும்

கவிதை எழுதும் கைகளுக்குத் தெரியுமா?
காதலின் வலி என்னவென்று? (அன்பின்)

நாள்தோறும் போற்றிடும் நயவஞ்சகம் அறியுமா?
நட்பின் வலி என்னவென்று?

உண்மையின்றி உரையாடும்
உதடுகளுக்குப் புரியுமா?
உறவின் வலி என்னவென்று?

தேசமெங்கும் எழுதுகின்ற தேர்வுகள் உணருமா?
வேலை தேடும் வலி என்னவென்று?

நீ மட்டும் போதும் - இறைவா!
நினைவில் நிலைத்திருந்தால்
நீதியும் அமைதியும் கிடைத்திடுமே



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

▶▶ பேதுரு ◀◀

## பொதுக்காலத்தின் 22வது ஞாயிறு (02.09.2018)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 22வது ஞாயிறு வாரத்தில் கால்பதிக்கும் இறை அன்பர்களே, உறவுகளே! சட்டம் மனிதனுக்காக இருக்கிறதே தவிர மனிதன் சட்டத்திற்காக இல்லை என்பதை இன்றைய நற்செய்தி வாயிலாக இயேசு கோடிட்டுக் காட்டுகின்றார். மனித மாண்பை, மனித நலன்களை மேம்படுத்தாத சமயம் மற்றும் சட்டங்கள் பழக்க வழக்கங்கள் போலியானது, பொய்யானது. சமுதாய விடுதலை சமய விடுதலை இரண்டும் இறையரசின் பரிமாணமாகும் என்பதை இயேசு சுட்டிக்காட்டினார். சம்பிரதாய சடங்குகளின் அர்த்தங்களை புரிந்து கொள்ளாமல் அதற்குள் போய்ச் சிக்கிக் கொள்வது அல்ல நமது சமய வாழ்க்கை. சாப்பிடும் முன் கைகழுவ வேண்டும் என்பது யூதசட்டம். ஆனால் சாப்பிட்ட பிறகு கைகளைக் கழுவ வேண்டும் என்பது அவர்கள் சட்டமல்ல, சட்டங்களும் சமுதாய சம்பிரதாயங்களும் நம்மை இறைவன்பால் கொண்டுவரவேண்டும். சட்டங்கள் அனைத்தும் நாம் சக மனிதரோடு நல்லுறவில் வாழ்வதற்காகவே. எனவே இறைவனுக்கு கீழ்ப்படிந்து அவரது அன்பின் கட்டளையை பின்பற்றும் பிள்ளைகளாக வாழ பலியில் இணைந்து மன்றாடுவோமாக.

**முதல் வாசகம் : இ.ச 4:1-2,6-8**
நான் உங்களுக்கு கட்டளையிட்டு சொல்பவற்றோடு எதையும் சேர்க்க வேண்டாம்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்?

**இரண்டாம் வாசகம் : யாக் 1:17-18, 21-22, 27**
இறைவார்த்தையின் படி நடக்கிறவர்களாய் இருங்கள்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா! தம் படைப்புக்களுள் நாம் முதற் கனிகள் ஆகும்படி உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் நம்மை ஈன்றெடுக்க அவர் விரும்பினார் அல்லேலுயா.

**நற்செய்தி வாசகம் : மாற் 7:1-8, 14-15, 21-23**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஆன்மீகப் புரட்சியையும், சமூகப் புரட்சியையும் ஏற்படுத்திய இயேசுவை தலைவராகக் கொண்டு தன் மக்களை வழி நடத்தும் திரு அவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் சட்டம் மனிதனுக்காக இருக்கிறதே தவிர மனிதன் சட்டத்திற்காக இல்லை என்ற புரிதலோடு பணியாற்றிட வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

சட்டங்கள் மனித மாண்பிற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் தேவையானது என்பதை நாட்டின் தலைவர்களும் மக்களும் ஏற்று நடக்கவும், சுயநலம் பாராது ஒழுக்கம் ஒன்றையே கருத்திற்கொண்டு செயல்படவும், அகவாழ்விற்கும், அகத்தூய்மைக்கும் முன்னுரிமை கொடுத்து சட்டதிட்டங்களை மதித்து நடக்கவும் தேவையான அருள்வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்துவைப் பின் செல்லும் மக்களாகிய நாமனைவரும் தாழ்ச்சியும் பணிவும் கொண்டவர்களாக இறைவனின் அன்புக் கட்டளையை ஏற்று அதன்படி வாழவும் மனித மாண்பை மதித்து எல்லோரையும் அன்பு செய்யவும், நம்முடன் வாழும் ஏழை எளியவர்களுக்காக எம்மால் இயன்ற உதவிகள் புரியவும் வேண்டிய வரங்களை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 23வது ஞாயிறு (09.09.2018)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 23வது ஞாயிறு வாரத்தில் அடிபதிக்கும் திருஅவையின் இறைமக்களே! இன்றைய நாளில் நமக்குத் தரப்பட்டுள்ள மூன்று வாசகங்களும் ஓர் அழகான இறையியல் உண்மையை வெளிப்படுத்துகின்றன. முதல் வாசகத்தில் இறைமகன் இயேசுவின் வருகையும் அவர் வந்தவுடன் மண்ணுலகில் நடக்கப் போகும் புதுமைகளையும், அதிசயங்களையும் இறைவாக்கினர் எசாயா எடுத்துரைக்கின்றார். நற்செய்தியில் எசாயா முன்னுரைத்தவை கிறிஸ்து வழியாக நிறைவேறுவதைப் பார்க்கின்றோம். இயேசு வந்தவுடன் முடிவு என்ன என்பதை இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கின்றது. இவ்வாறு கடவுளின் மீட்புத் திட்டம் இறைவாக்கினர் முன்னுரைத்தபடி இயேசு வழியாக முழுமையடைகிறது. இயேசு தந்தையை மகிமைப்படுத்தவே தான் இவ்வுலகிற்கு வந்தவர் என்பதைக் கணமும் மறக்கவில்லை. தந்தையின் மகிமை விளங்கவே அவர் அனைத்துப் புதுமைகளையும் ஆற்றினார். நம்முடைய வாழ்வும் கடவுள் கொடுத்த கொடை. எனவே நம்முடைய வாழ்வும், செயல்களும் கடவுளை மகிமைப்படுத்த வேண்டும். இதற்காக தந்தையிடம் மன்றாடுவோம்!

**முதல் வாசகம் : எசா 35:1-7**
காதுகேளாதோரின் செவிகள் கேட்கும் வாய் பேசாதோர் மகிழ்ந்து பாடுவர்.

**பதிலுரைப் பாடல் :**
என் நெஞ்சே நீ ஆண்டவரைப் போற்றிடு

**இரண்டாம் வாசகம் : யாக் 2:1-5**
ஏழைகளாய் இருப்பவர்களை கடவுள் தேர்ந்து கொள்ளவில்லையா?

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா இயேசு விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார். மக்களிடையே இருந்த நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார். அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மாற் 7:31-37**

### விசுவாசிகளின் மன்றாட்டு


ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவனின் மீட்புத் திட்டம் இயேசுவில் நிறைவேறியது அது இன்றும் அவர் வழியாக திருஅவையால் முன்னெடுக்கப்படுகின்றது என்பதை உணர்ந்தவர்களாக திருஅவையின் உடன் உழைப்பாளர்களாக திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்க்கு கீழ்படிந்து எம் வாழ்வை நடத்திச் செல்லத் தேவையான வரங்களை தந்தருள வேண்டுமென்று...

எமது தலைவர்களும் அதிகாரிகளும் கடவுளின் பிரதிநிதிகள் என்பதை மறவாமல் அனைத்து மக்களுக்காவும் சேவை செய்யவும் நாமும் நம்மிடம் உள்ளவற்றை இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளவும் ஏழை எளியவர் ஒடுக்கப்பட்டோர் மீது இரக்கம் காட்டவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நாமும் இயேசுவின் மனநிலையைக் கொண்டவர்களாக கடவுளை மகிமைப்படுத்தவே எந்த நற்செயலையும் செய்பவர்களாக வாழவும், அனைவரும் இறைவனின் பிள்ளைகள் என்ற நிலையில் ஏற்றத்தாழ்வுகள் பாகுபாடுகள் காட்டாது ஒற்றுமை வழிநின்று எம் வாழ்வை நடத்தவும் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# புனிதர் நிலைக்கு உயர்த்தப்படும் முதல் தமிழர் தேவசகாயம்பிள்ளை.



தமிழ்நாடு நாகர் கோவிலைச் சேர்ந்த வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை (1712- 1752) புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுகிறார்.

இவ்வருட நிறைவில் இதற்கான அறிவிப்பை திருத்தந்தையின் பிரதிநிதி முறைப்படி வெளியிடவுள்ளதாக கோட்டாறு மறைமாவட்ட ஆயர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த வேதசாட்சியான தேவசகாயம்பிள்ளை சைவராக இருந்து திருமுழுக்குப் பெற்று கத்தோலிக்க கிறிஸ்துவ மறையை தழுவிய பின்னர் சாதிக்கொடுமை தமிழ்நாட்டில் தலைவிரித்தாடிய காலகட்டத்தில் இறைவன் முன் அனைவரும் சமம் என்ற கருத்தை வலியுறுத்தி சாதி அடக்குமுறைக்கு எதிராக அகிம்சைப் போர் தொடுத்து நின்றாலும் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தை பிரசாரம் செய்ததன் விளைவாகவும் கொல்லப்பட்டார்.

மறைசாட்சியான இவருக்கு முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களால் முத்திப்பேறு பட்டம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுகின்றார். தேவசகாயம் பிள்ளை ஒரு பொதுநிலையினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இறைவனின் குரலைக் கேள்

பூமி எப்போதும் சப்தங்களால்
நிறைந்திருக்கின்றது

இடையறாப் பேச்சுக்களால்
பின்னப்பட்டுக் கிடக்கிறது.

சொல்வதற்கு ஏதுமில்லா
மனிதர்கள் கூட
தங்களுக்குள்ளே
பேசிக்கொண்டேயிருக்கிறார்கள்

மகிழ்ச்சியை வெளிப்படுத்த
அச்சுறுத்த
யாரையேனும் கட்டுப்படுத்த

ஏதாவது கொடூர நேரங்களில்
தன் இருப்பை ஸ்திரப்படுத்த

தன் பக்க நியாயத்தை
வலியுறுத்த
வாய்ப்பு வேண்டி
கிசுகிசு பேச்சுக்களால்
யாரையேனும் கழுத்தறுக்க

இடையறாமல் உலகம்
பேசிக்கொண்டே இருக்கிறது


பேச்சுக்களால் சிலர்
நாகரீகமற்றவர்களாகிறார்கள்

பேச்சுக்களால் சிலர்
எல்லா சமாதானங்களையும்
உடைத்தெறிந்து விடுகிறார்கள்

பேச்சுக்களால் சிலர்
குணப்படுத்தி விடுகிறார்கள்



பேச்சுக்களால் சிலர்
புலன் இன்பம் அடையும்
சாத்தியங்களை அறிந்து
வைத்திருக்கிறார்கள்




ஆகவேதான்
பேச்சு வெறுமனே
சப்தமல்ல
சக்தி என்கிறது திருவிவிலியம்.

# சிந்தனைக்கு

**வெற்றி உன்னை எல்லோருக்கும் அறிமுகம் செய்யும்**
**தோல்வி எல்லோரையும் உனக்கு அறிமுகம் செய்யும்.**

✤✤✤

**பணம் உன்னிடத்தில் இருந்தால்**
**வழிப்போக்குனும் உனக்கு சொந்தம்**
**அது உன்னிடத்தில் இல்லையென்றால்**
**சொந்தத்திற்கும் நீ ஒரு வழிப்போக்கன்.**

✤✤✤

**சோதனை காலத்தில் பொறுமையாய் இரு**
**மேகங்கள் மூடிக் கொண்டால்**
**சூரியன் கூட பிரகாசிக்க முடியாது**
**நீயும் நானும் எம்மாத்திரம்**

✤✤✤

**உன் மனசாட்சிக்கு நீ உண்மையாக இருந்தால் போதும்**
**மற்றவர்களிடம் அதை நிரூபிக்க வேண்டியதில்லை**

✤✤✤

**வாழ்க்கையில் பல பேருக்கு நன்றி சொல்**
**சில பேருக்கு மிகவும் நன்றி சொல்**
**பலபேர் நம் வாழ்க்கையில் பாடம் கற்பிக்க வந்தவர்கள்...**
**சில பேர் பாடமாகவே வந்தவர்கள்.**

# அயர்லாந்து திருப்பயணம் ஒப்புரவை உருவாக்கும்

**அயர்லாந்து உலக குடும்பங்கள் மாநாட்டிற்கு திருத்தந்தை அனுப்பியுள்ள காணொளிச் செய்தியில், உலக குடும்பங்கள் மாநாடு, குடும்பத்திற்கென கடவுள் வகுத்துள்ள திட்டத்தின் அழகைக் கொண்டாடுவதாகும் என்று கூறியுள்ளார்**

அயர்லாந்து நாட்டிற்கு நான் மேற்கொள்ளும் திருத்தூதுப் பயணம், அந்நாட்டின் கிறிஸ்தவர்கள் மத்தியில், ஒன்றிப்பு மற்றும் ஒப்புரவைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையிலே என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். இத்திருத்தூதுப் பயணத்தின் முக்கிய நோக்கம், உலக குடும்பங்கள் மாநாட்டில் கலந்துகொள்வதாக இருந்தாலும், அயர்லாந்து குடும்பங்களின் அனைத்து உறுப்பினர்களையும், தான் அரவணைக்க விரும்புவதாகக் கூறினார்.

அயர்லாந்தில் ஆவணி 21, செவ்வாய் மாலையில் தொடங்கிய, 9வது உலக குடும்பங்கள் மாநாட்டின் நிறைவு நிகழ்வு சனி, ஞாயிறு தினங்களில் (ஆவ.25,26) அந்நாடு செல்வதையொட்டி, செவ்வாய் மாலையில் அந்நாட்டினருக்கு அனுப்பிய காணொளிச் செய்தியில், இவ்வாறு கூறியுள்ளார் திருத்தந்தை.

கிறிஸ்தவ விசுவாசிகள் மத்தியில், முழு மனித சமுதாயத்திற்கும் கடவுள் காணும் கனவாகிய நிலைத்த அமைதியையும், ஒன்றிப்பையும் ஒப்புரவையும், இம்மாநாடு கொண்டுவரும் என்று, தான் நம்புவதாகத் தெரிவித்தார் திருத்தந்தை.

இத்தாலிய மொழியில் வழங்கிய இக்காணொளிச் செய்தியில், இடையில் ஆங்கிலத்தில் பேசியவேளையில், நான் அயர்லாந்திற்குத் திரும்பி வருவேன் என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சியாக இருக்கின்றது என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூறியுள்ளார்.



# *Croke* அரங்கத்தில் குடும்பங்கள் விழா

**“குடும்பத்தில் மன்னிப்பு மற்றும் நம்பிக்கை, பாட்டி தாத்தாக்களின் முக்கியத்துவம், குடும்ப வாழ்வில், சமூகத்தொடர்பு சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு” போன்ற தலைப்புக்களில், குடும்பங்கள் சாட்சியங்கள் பகர்ந்தனர்.**

குடும்பங்கள் விழாவில் கலந்துகொள்வதற்காக, ஆவணி 25, சனிக்கிழமை இரவு 7 மணி 15 நிமிடத்திற்கு, திருப்பீட தூதரகத்திலிருந்து, டப்ளின் நகரின் Croke பூங்கா அரங்கத்திற்கு காரில் சென்றார், திருத்தந்தை பிரான்சிஸ். ஐரோப்பாவிலுள்ள மிகப்பெரிய அரங்கங்களில், இதுவும் ஒன்று. அயர்லாந்தின் தனித்துவம் மற்றும், வரலாற்றின் அடையாளமாகத் திகழும் இந்த அரங்கத்தில், 82 ஆயிரத்து 300 பேர் அமரலாம். திருத்தந்தை கலந்துகொண்ட இந்நிகழ்வில் ஏறத்தாழ எழுபதாயிரம் பேர் இருந்தனர். குடும்பங்கள் சாட்சியங்களைப் பகிர்ந்துகொள்ளும்போதும், கலைநிகழ்ச்சிகளிலும் திருத்தந்தைக்கு நெருக்கமாய் எல்லாரும் அமர்வதற்கு வசதியாக, “சந்திப்பின் வட்டம்” என்ற கருத்தில், இந்த அரங்கம் வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆயிரம் பேர் கொண்ட பாடகர் குழு, 50 இசைக்கருவிகள் குழு, 700க்கும் அதிகமான நடனக்கலைஞர்கள் என, அயர்லாந்தின் சிறந்த கலைஞர்களும், பாடகர்களும் இந்நிகழ்வில் கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். இத்தாலியின் புகழ்பெற்ற, பார்வையற்ற பாடகர் அந்த்ரேயா பொச்செல்லி மற்றும், அமெரிக்காவின் புகழ்பெற்ற, ஒரு ஜாஸ் பாடகர் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், முதலில், திருப்பீட பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்வு அவையின் தலைவர், கர்தினால் Kevin Joseph Farrell அவர்கள் வரவேற்புரை வழங்கி, குடும்பங்களுக்காகச் செபித்தார். பின்னர் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

### குடும்பங்களின் சாட்சியங்கள்

இந்தியா, கனடா, ஈராக், அயர்லாந்து, புர்க்கினோ ஃபாசோ ஆகிய நாடுகளைச் சேர்ந்த குடும்பத்தினர், மேடையில் தங்கள் பிள்ளைகளுடன், திருத்தந்தையின் முன்பாக சாட்சி பகர்ந்தனர். இக்குடும்பங்களில் ஒன்றில், பத்து பிள்ளைகள் இருந்தனர். ஒவ்வொரு குடும்பத்தினரையும் கைகுலுக்கி ஆசிர்வதித்து, செபமாலைகள் கொடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். இந்தியாவின் மும்பையிலிருந்து வந்து சாட்சி சொன்ன குடும்பத்திற்குப் பதிலளித்த திருத்தந்தை, சமூகத்தொடர்பு சாதனங்களைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவது பற்றிச் சொன்னார். நட்புறவு, ஒருமைப்பாடு மற்றும், ஒருவருக்கொருவர் ஆதரவு ஆகியவற்றை வலைத்தளத்தைக் கட்டியெழுப்புவதற்கு, சமூகத்தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். சமூகத்தொடர்பு சாதனங்கள், அளவோடும், விவேகத்தோடும் பயன்படுத்தப்பட்டால் அவை பயனுள்ளவையாய் இருக்கும் என்றும் திருத்தந்தை கூறினார். இறுதியில், குடும்பங்களின் உலக மாநாட்டிற்காகச் செபித்து, அனைவரையும் ஆசிர்வதித்து இந்நிகழ்வை நிறைவு செய்தார், திருத்தந்தை பிரான்சிஸ். பின்னர், டப்ளின் திருப்பீட தூதரகம் வந்து இரவுணவருந்தி உறங்கச் சென்றார், திருத்தந்தை. இத்துடன் அயர்லாந்து நாட்டுத் திருத்தூதுப் பயணத்தின் முதல் நாள் நிகழ்வுகள் நிறைவுற்றன.

குடும்பத்தி




# அயர்லாந்தில் திருத்த

**திருஅவை பணியாளர்களின் பாலியல் மு**

**திருஅவைக்கு வேதனையையும் வெ**

அயர்லாந்து நாட்டில் என் திருத்தூதுப்பயணத்தின் தொடக்கத்திலேயே, இந்நாட்டின் சமூக, கலாச்சார, மற்றும், மத பிரதிநிதிகளையும், நாடுகளின் அரசியல் தூதுவர்களையும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

உலக குடும்பங்கள் மாநாட்டில் பங்குபெற நான் வந்துள்ளேன் என்பது நீங்கள் அறிந்ததே. குடும்பங்களை ஊக்கப்படுத்தவேண்டிய அவசியம் திருஅவைக்கு உள்ளது. இந்த குடும்பங்களின் மாநாடு என்பது, குடும்பங்கள் ஒருவருக்கொருவர் ஆதரவு தரவேண்டும், தங்களுக்குள் ஒருவருக்கொருவர் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துவதற்காக மட்டுமல்ல, மாறாக, தங்கள் குடும்ப அங்கத்தினர்களின் கல்வியிலும் வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகித்து, உறுதியான சமூக இணக்கத்தை உருவாக்க உதவுவதற்குமாகும்.

### குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சனைகள்

இன்றைய குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சனைகள் எண்ணற்றவை. திருமண முறிவுகளும், குடும்பப் பிரிவினைகளும், வருங்கால சமூகங்களை, பல நிலைகளிலும் பாதிக்க வல்லவை. எல்லாச் சூழல்களிலும், குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும். வாழ்வின் முதல் அடிகளை நாம் அனைவருமே, குடும்பங்களில்தான் எடுத்து வைத்தோம். அங்குதான் இணக்க வாழ்வையும், சுயநல உணர்வுகளை வெற்றி கொள்வதையும், முரண்பாடுகளிடையே ஒப்புரவை உருவாக்குவதையும், வாழ்க்கை மதிப்பீடுகளையும் கற்றுக்கொண்டோம். இவ்வுலகம் அனைத்தையும் ஒரே குடும்பமாக நோக்கினோமென்றால், ஒன்றிப்பு மற்றும் ஒருமைப்பாட்டிற்கான நம் அழைப்பை, குறிப்பாக, நம் பலவீனமான சகோதரர், சகோதரிகளுடனான

# ிற்கென கடவுள் வகுத்துள்ள திட்டத்தின் அழகை கொண்டாடுவதற்கே



## ந்தையின் முதல் உரை

**றைகேடுகளும், அது குறித்த பாராமுகமும், ட்கக்கேட்டையும் கொணர்ந்துள்ளன.**

ஒருமைப்பாட்டிற்கான அழைப்பை நாம் உணர்வோம். ஆனால், இன்றைய உலகின், ஏழை - பணக்கார இடைவெளி அதிகரிப்பு, மனித உரிமை மீறல், மனித மாண்பு புறக்கணிப்பு, வன்முறை, மோதல், நிற - இன பகைமை போன்றவைகள் முன்னால், வலிமையற்ற-வர்களாக உணர்கிறோம். உண்மை அமைதி என்பது, கடவுளிடமிருந்தே வருகிறது. இருப்பினும் நம் மனமாற்றங்கள் தொடர்ந்து இடம்பெறவேண்டிய தேவையும் உள்ளது. பொருளாதார வளம், நம்மிடையே நீதியான, சரிநிகரான, ஒரு சமூக ஒழுங்குமுறையை உருவாக்கும் என நம்மால் கூறமுடியுமா? அல்லது, இன்று, "பயன்படுத்தி தூக்கியெறியும் கலாச்சாரம்", ஏழைகளின் தேவைகள் குறித்த நம் பாராமுகத்தை உருவாக்கியுள்ளதா? பிறக்கவிருக்கும் குழந்தைகளின் வாழும் உரிமையைப் பறிக்க நமக்கு உரிமை உள்ளதா? இன்றைய நம் மனச்சான்றிற்கு சவாலாக இருக்கும் கேள்வி, அகதிகள் நெருக்கடி பற்றியது.

**கடவுளின் கொடைகளாகிய குழந்தைகளைப் பராமரித்தல்**

இந்நாட்டில் திருஅவை அதிகாரிகளால் இளஞ்சிறார் பாலியல் முறையில் தவறாக நடத்தப்பட்டது பற்றி நான் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இதைத் தடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ள கத்தோலிக்க ஆயர்கள், துறவுசபைத் தலைவர்கள், அருள்பணியாளர்கள், மற்றும், ஏனையோர் செயல்படத் தவறியது, வேதனையையும் வெட்கத்தையும் திருஅவைக்குக் கொணர்ந்துள்ளது. ஒவ்வொரு குழந்தையும் கடவுளின் கொடை. குழந்தைகளைப் பாதுகாக்கத் தவறிய இந்த பாலியல் முறைகேடுகள் தந்துள்ள பாடம்,..

தொடர்ச்சி 15ம் பக்கம்

# சேர்ந்து செபிக்கும் குடும்பம் சேர்ந்தே இருக்கும்

**நற்செய்திக்கு சான்றுகளாக வாழ்வதன் வழியாக, இறைவனின் கனவுகளை நனவாக்கவும், இறை மக்கள் ஒன்றாக இணைந்து ஒன்றிப்பில் வாழவும், நம்மால் உதவ முடியும்.**

அன்பு சகோதரர், சகோதரிகளே, மாலை வணக்கம். கொண்டாட்டங்கள் என்பவை நம்மை மனிதபிமானம் மிக்கவர்களாகவும், கிறிஸ்தவ பண்புடையவர்களாகவும் மாற்றுகின்றன. குடும்ப விழா வரும்போது, அங்கு, அனைத்து உறவுகளின் இருப்பும் உணரப்படுகிறது. அதில் கலந்து கொள்ள முடியாத, மற்றும், வெகு தூரத்தில் வாழ்கின்ற, உறவினர்களின் இருப்பும் உணரப்படுகிறது. கிறிஸ்துவில் ஒரே குடும்பமாக இருந்து, உலகெங்கும் பரந்து வாழும் நாம் அனைவரும், இந்த டப்ளின் கொண்டாட்டத்தில் பங்குபெறுகிறோம்.

**மகிழ்வைப் பிரதிபலிக்கும் குடும்பங்கள்**

இறைமக்களில் பெரும்பான்மையினராக இருப்பது குடும்பங்களே. குடும்பங்கள் இல்லையெனில் திருஅவையின் நிலை என்னவாக இருக்கும்? இந்த உலகில் கடவுளின் அன்பு தரும் மகிழ்வை பிரதிபலிப்ப-வர்களாக ஒவ்வொரு குடும்பமும் இருக்க வேண்டும் என இறைவன் விரும்புகிறார். நாம் அனுபவித்த அந்த மீட்பளிக்கும் அன்பை நம் வாழ்வு நடவடிக்கைகளில் நாம் வெளிக்கொணர வேண்டும் என இறைவன் விரும்புகிறார். கடவுளின் பிரசன்னத்தை தங்கள் வாழ்வில் பிரதிபலித்த எண்ணற்ற புனிதர்களை வரலாற்றில் காண்கிறோம். இன்றும் நம்மைச் சுற்றி நிறைய பேர் வெளியே தெரியாமல், அமைதியில் வாழ்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். அனைத்துக் குடும்பங்களிலும், பிறரை அன்பு கூர்ந்து, மன்னித்து, இரக்கம் காட்டும் அனைத்துக் குடும்பங்களின் மனங்களிலும் இறைப்பிரசன்னம் அமைதியாக குடிகொண்டுள்ளது. கிறிஸ்தவத் திருமணங்களும், குடும்ப வாழ்வும், கடவுளின் அன்பில் நங்கூரமிட்டதாக இருக்கும்போதுதான், அவற்றின் அனைத்து வனப்பும் மிளிர்கின்றன. தந்தையரும், தாய்மார்களும், தாத்தா பாட்டிகளும், குழந்தைகளும், பேரக்குழந்தைகளும், அன்பின் நிறைவை குடும்பங்களில் காண அழைப்புப் பெற்றுள்ளார்கள்.

***Burkina Faso* நாட்டு சாட்சியக் குடும்பம்**

Burkina Faso நாட்டைச் சேர்ந்த Felicité, Isaac, Ghislain ஆகியோர், குடும்பத்தில் மன்னிப்பின் வலிமை குறித்த ஒரு உண்மை நிகழ்வை எடுத்துரைத்தார்கள். "தவறுவது மனித இயல்பு, மன்னிப்பதோ தெய்வீகம்" என கவிஞர் ஒருவர் கூறியுள்ளார். ஆம், அது உண்மை. மன்னிப்பு வழங்கும் பண்பு, கடவுளிடமிருந்து பெறப்படும் சிறப்பு கொடை.

நம் குடும்பங்களில் "மனம் வருந்துகிறேன்", "தயவுசெய்து", "நன்றி" என்ற மூன்று வார்த்தைகளை பயன்படுத்த கற்றுக்கொள்ள வேண்டும். வீட்டில் சண்டைகள் நிகழ்ந்தால், தூங்கப் போவதற்கு முன்னர், மன்னிப்பு கேட்டு விடுங்கள். ஏனெனில், மன்னிப்பை நாடும், மற்றும், மன்னிக்கும் குடும்பங்களே நீடித்து வாழ்கின்றன. ஒருவரையொருவர் மன்னிக்கும் தங்கள் பெற்றோரின் செயலைப் பார்க்கும் குழந்தைகளும் அவர்களிடமிருந்து மன்னிக்கக் கற்றுக் கொள்கின்றன. நாமும் ஒருவரையொருவர் மன்னித்து ஒப்புரவாக வேண்டும் என்பதற்காகவே இயேசுவும் நமக்காக தன் உயிரைத் துறந்தார். இவ்வாறு, நாம், புனித பவுலின் வார்த்தைகளான, அனைத்தும் அழிந்து போகும், "ஆனால், அன்பு ஒருபோதும் அழியாது" (1 கொரி. 13:8), என்ற உண்மையை உணர்கிறோம்.

**இந்தியத் தம்பதியரின் பகிர்வு**

இந்தியாவிலிருந்து வந்து சாட்சி சொன்ன நிஷாவும் டெட்டும், உண்மையான குடும்பமாக வாழ்வது எவ்விதம் என்பதைக் குறித்து, தங்கள் குழந்தைகளுக்கு கற்பிப்பதாகக் கூறினார்கள். சமூகத்தொடர்பு சாதனங்கள், குடும்பங்களுக்கு ஒரு பெரிய பிரச்சனை அல்ல என்பதை இங்கு குறிப்பிட்டார்கள். மிதமாகவும், விவேகத்துடனும், பயன்படுத்தத் தொடங்கினால், சமூக வலைத்தளங்கள் நல்ல பயனுடையதாக இருக்கும். நவீனத் தொழில்நுட்ப கருவிகளுடன் நாம் செலவிடும் நேரம் குறித்தும், குடும்ப அங்கத்தினர்களுடனும் கடவுளுடனும் நாம் ஒதுக்க வேண்டிய நேரம் குறித்தும், முடிவெடுக்க, இவர்களின் உரைப்பகிர்வு நமக்கு உதவலாம்.

**அமைதி தேடும் குடும்பங்கள்**

போர்கள் மற்றும் சித்திரவதைகளின் விளைவுகளான, வன்முறை மற்றும் அழிவின்போது கூட, மன வலிமை மற்றும் அமைதியின் ஆதாரத்தை, விசுவாசத்திலும் குடும்ப அன்பிலும் கண்டுகொண்டதாக Enass மற்றும் Sarmaad எடுத்துரைத்தனர். இவர்களின் பகிர்வு, அமைதி மற்றும் பாதுகாப்பைத் தேடி, தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும் எண்ணற்ற குடும்பங்களை, நமக்கு நினைவூட்டுகிறது.

அன்பு, ஏற்றுக்கொள்ளல், மன்னிப்பு என்ற அனைத்து நற்குணங்களையும், குடும்பங்களே கற்றுக்கொடுத்து, சமூகத்தைக் கட்டியெழுப்புகின்றன. ஓர் அயர்லாந்து அருள்பணியாளர் கற்பித்ததுபோல், "இணைந்து செபிக்கும் குடும்பம், சிதறாமல் இணைந்தே இருக்கிறது", அதன் வழியாக அன்பை பிரதிபலிக்கிறது.

**பொன்விழா காணும் தம்பதியரின் சாட்சியம்**

பயன்படுத்தி தூக்கியெறியும் கலாச்சாரத்தைக் கொண்டுள்ள இன்றைய நவீன உலகில், அன்பின் தேவை குறித்தும், தங்கள் விசுவாசம் மற்றும் அன்பின் சாட்சிய வாழ்வு குறித்தும், பத்து குழந்தைகளின் பெற்றோராகிய மேரியும் டேமியனும் எடுத்துரைத்ததற்கு என் நன்றியை வெளியிடுகிறேன். 50 ஆண்டுகால திருமண வாழ்வை சிறப்பித்துள்ள, AldoTk, Marissaவும், தங்கள் குடும்பம், குழந்தைகள், மற்றும், பேரக்குழந்தைகளுடன், எவ்வாறு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்பதை இங்கு எடுத்துரைத்தார்கள். அவர்களின் பேரக்குழந்தைகள், அவர்களை இன்னும் இளமையாகவே வைத்திருக்கிறார்கள். தாத்தா பாட்டிகளின் மதிப்பை உணராத சமூகம், தன் வருங்காலத்தையே இழந்த சமூகமாகிறது. அனுபவமும் ஞானமும் நிறைந்த நம் தாத்தா பாட்டிகளிடமிருந்து நாம் அறிவுரைகளைப் பெறாமல் இருப்பது, பெரும் தவறாகும்.

**திருத்தந்தை வழங்கிய** 'Amoris Laetitia'


குடும்பங்கள் என்பவை, திருஅவை மற்றும் சமூகத்தின் நம்பிக்கை. குடும்பங்களுக்குள் குடும்பமாக மனித குலம் வாழவேண்டும், அமைதியை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்குடனேயே இறைவன் நம்மைப் படைத்தார். அவரின் நற்செய்திக்கு சான்றுகளாக வாழ்வதன் வழியாக, இறைவனின் கனவுகளை நனவாக்க நம்மால் உதவ இயலும். இறை மக்கள் ஒன்றாக இணைந்து வந்து ஒன்றிப்பில் வாழவும் உதவ முடியும். இதற்காக உங்களுக்கு 'Amoris Laetitia' என்ற என் நூலின் பிரதியை வழங்குகிறேன். இது, குடும்பத்தின் நற்செய்தியை மகிழ்வுடன் வாழ உதவும் வழிகாட்டி. உங்கள் வாழ்வில் அமைதியின் அரசியும், குடும்பங்களின் அரசியுமாகிய அன்னை மரி வழிநடத்துவாராக. இந்நேரத்தில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து, இந்த உலக குடும்ப மாநாட்டின் செபத்தை செபித்து இந்நிகழ்ச்சியை நிறைவு செய்வோம்

**நன்றி : வத்திக்கான் செய்திகள்**




மாணவர்களே! உங்களது ஆக்கங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08.

## வர்ணம் தீட்டுக.



## பழமொழிகள்

- மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அதையே நீ அவர்களுக்குச் செய்.
- இரண்டு முயல்களுக்குப் பின்னால் ஓடினால் ஒரு முயலைக் கூட பிடிக்க முடியாது.
- வெற்றியடைந்தவர்கள் முயற்சியை ஒருபோதும் கைவிடுவதில்லை. முயற்சியை கைவிட்டவர்கள் ஒருபோதும் வெற்றியடைந்ததில்லை.
- கண்ணாடி வீடுகளில் வசிப்பவர்கள் அண்டை வீட்டாரின் மேல் கற்களை எறியக்கூடாது.
- நிதானமும், சீரான போக்கும் போட்டியில் வெற்றியடையச் செய்கிறது.
- எங்கே நீ நடவில்லையோ அங்கே பறிக்காதே.
- ஆழம் தெரியாமல் காலை விடாதே.
- உன் வாயை மூடி வைத்துக் கொள். கண்களைத் திறந்து வைத்துக் கொள்.
- நீ ஓடுவதற்கு முன் நடக்கப் பழகிக் கொள்.
- ஊரோடு ஒத்து வாழ்.
- காலைச் சுற்றின பாம்பு கடிக்காமல் விடாது.
- முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா?

## அன்னை மரியை வாழ்த்துவோம்

புரட்டாதி மாதம் 8ம் திகதி நம் அன்னையின் பிறந்தநாள். மரியா நம் அனைவருக்கும் அன்னை. அவருக்கு நாம் பிறந்தநாள் வாழ்த்துக்களை கூறி மகிழ்வோமா? நாம் எமது அன்னைக்கு வாழ்த்துக்களைக் கூறினால் மட்டும் போதாது. அன்னையின் புகழை, மகிமையை நம் வார்த்தையால், வாழ்வால் பறைசாற்றுவது நாம் நம் அன்னைக்கு தரும் பிறந்தநாள் பரிசாகும்.

ஆகவே நாம் அன்னைக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைக் கூறி அவருக்கு விரும்பமான செபமாலையை அவரது மகிமைக்காக செபிப்போம். அன்பு தாயே உங்களுக்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்களை கூறுகின்றோம்.



## 4. தனிச் செபப் பழக்கம்

### 4. ஆலயத்தில் இயேசு காணிக்கையாக்கப்படுகிறார்

வானகத் தந்தையே அப்பா!

குழந்தை இயேசுவை சிமியோன் உமக்குக் காணிக்கையாகக் தந்தார். அன்னை மரியாவின் பரிந்துரையால் நானும் என்னைக் காணிக்கையாக்க எனக்கு உதவி செய்யும்.

**பரலோகத்தில் இருக்கிற...**

திருக்குடும்பம் கோவிலுக்கு வருகிறது. **அருள் நிறை**
திருச்சட்டம் நிறைவேறுகிறது. **அருள் நிறை**
இறைவாக்கினர் சிமியோன் வருகிறார். **அருள் நிறை**
கைகளிலே பாலனை ஏந்துகிறார். **அருள் நிறை**
மீட்பரை நான் பார்த்துவிட்டேன் என்கிறார். **அருள் நிறை**
மரியாவுக்குத் துன்பம் வரும் என்கிறார். **அருள் நிறை**
வயதான அன்னாவும் வருகிறார். **அருள் நிறை**
குழந்தை பற்றிப் புகழ்ந்து பேசுகிறார். **அருள் நிறை**
இரு புறாக்குஞ்சுகளைக் கொடுக்கிறார்கள். **அருள் நிறை**
மாட்டுத் தொழுவத்துக்குத் திரும்புகிறார்கள். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

### 5. காணாமல் போன சிறுவன் இயேசு கண்டுபிடிக்கப்படுகிறார்.

வானகத் தந்தையே, அப்பா!

ஆலயத்தில் தவறவிட்ட உம் மகனை மூன்று நாட்களின்பின் அவரின் பெற்றோர் திரும்பவும் கண்டுபிடித்தார்கள். அன்னை மரியாவின் பரிந்துரையால் இயேசுவை இழக்காமல் இருக்க எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கிற...**

குழந்தையைக் கொல்லத் தேடுகிறார்கள். **அருள் நிறை**
சதிவேலையை யோசேப்பு அறிகிறார். **அருள் நிறை**
குடும்பத்தோடு எகிப்துக்கு விரைகிறார். **அருள் நிறை**
ஏரோது அவலமாகச் சாகிறான். **அருள் நிறை**
திருக்குடும்பம் நசரேத்துக்கு வருகிறது. **அருள் நிறை**
திருக்குடும்பம் கோவிலுக்குச் செல்லுகிறது. **அருள் நிறை**
இயேசு அங்கே காணாமற் போகிறார். **அருள் நிறை**
தந்தையைப் பற்றி பெரியோரிடம் பேசுகிறார். **அருள் நிறை**
பெற்றோரால் கண்டுபிடிக்கப்படுகிறார். **அருள் நிறை**
அவர்களோடு வீடு திரும்புகிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

### 2. ஒளியின் மறைநிகழ்வுகள்

#### 1. யோவானிடம் இயேசு திருமுழுக்குப் பெறுகிறார்.

வானகத் தந்தையே அப்பா!

இறையாட்சிப் பணியைத் தொடங்க இயேசு யோர்தான் ஆற்றில் திருமுழுக்குப் பெற்றார். அன்னை மரியாவின் பரிந்துரையால் இறையாட்சியின் வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ள எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

யோவான் திருமுழுக்குக் கொடுக்கிறார். **அருள் நிறை**
மனந்திரும்ப அழைப்பு விடுக்கிறார். **அருள் நிறை**
இயேசுவை செம்மறி என்று அழைக்கிறார். **அருள் நிறை**
அவரையே மீட்பர் என்று காட்டுகிறார். **அருள் நிறை**
இயேசுவும் திருமுழுக்குக் கேட்கிறார். **அருள் நிறை**
யோவான் தன்னை தாழ்த்துகிறார். **அருள் நிறை**
இயேசு திருமுழுக்குப் பெறுகிறார். **அருள் நிறை**
தந்தை அவரை மகன் என்று சொல்கிறார். **அருள் நிறை**
ஆவியாரும் அவர்மேலே வருகிறார். **அருள் நிறை**
ஆவியாரோடு பாலைவனம் செல்கிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

தொடரும்

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார்** (ivDei)

## பலநாள் திருடன்



நரி ஒருநாள் காட்டில் தனியே குதித்து விளையாடிக்கொண்டிருந்தது. விளையாடியபடியே அந்த நரி பக்கத்திலிருந்த ஓர் ஊருக்குச் சென்றுவிட்டது. அங்கே இருந்த சாயத் தொட்டியைக் கவனிக்காது அதில் விழுந்து விட்டது. கஷ்டப்பட்டு அதிலிருந்து எழுந்து வெளியே வந்தது அந்த நரி. இப்போது அதன் உடல் சாயத்தால் நீல நிறமாகிவிட்டது. யோசித்தபடியே காட்டிற்கு வந்தது. அப்போது எதிரே வந்த ஒரு பூனை நரியை ஏதோ வினோதமான விலங்கு என நினைத்து வணங்கி வழிவிட்டது. இப்போது நரி யோசிக்க ஆரம்பித்தது.

காட்டிற்குள் சென்று அது அனைத்து விலங்குகளையும் கூப்பிட்டது. அனைத்து விலங்குகளும் அந்த நீலநரியின் முன் கூடின. நீலநரி பேச ஆரம்பித்தது.

"விலங்குகளே, உங்களைப் பார்த்துக்கொள்ள கடவுள் என்னை இங்கே அனுப்பியிருக்கிறார். இனி நான்தான் உங்களுக்கு புது ராஜா. என் சொல்படிதான் நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். என் சொல்லை மீறி நடப்பவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும்".

நீலநரி கடுமையாக பேசியது. இதைக் கேட்ட மற்ற விலங்குகள் அனைத்தும் பயந்து போயின. நீலநரியின் சொல்லை மதித்து நடப்பதாக வாக்குறுதி அளித்தன.

காட்டில் இருக்கும் நரிகள் மூலம் தன் குட்டு வெளிப்பட்டுவிட்டால் ஆபத்து என நினைத்த நீலநரி அந்த காட்டில் இருக்கும் நரிகள் அனைத்தும் இரண்டு நாட்களுக்குள் பக்கத்துக் காட்டிற்கு சென்றுவிட வேண்டும் என்ற ஆணை பிறப்பித்தது.

"நாளைக்கு இதே நேரத்துக்கு நீங்க எல்லாரும் இங்க வந்துடுங்க. உங்ககிட்டே நிறைய பேச வேண்டியிருக்கு".

நரிகள் தங்களுக்குள் கூடிப் பேசின. அதில் ஒரு நரி தன் சந்தேகத்தைத் சொன்னது. இப்ப வந்திருக்கிற புது ராஜாவைப் பார்த்தா நம்ம ஆளு மாதிரிதான் எனக்குத் தோணுது. அவரு எதுக்காக நம்மை மட்டும் காட்டைவிட்டு வெளியே போகச் சொல்லணும்.

இதைக் கேட்ட மற்றொரு நரி ஒரு யோசனை சொன்னது. நாம எல்லாம் சேர்ந்து ஊளையிடுவோம். புது ராஜா நம்ம ஆளா இருந்தா அதால ஊளையிடாம இருக்க முடியாது. இந்த யோசனையை மற்ற நரிகள் ஏற்றுக்கொண்டன. அடுத்த நாள் நீலநரியின் தலைமையில் கூட்டம் கூடியது.

கூட்டம் ஆரம்பித்ததும் திட்டப்படி நரிகள் சற்று தொலைவில் நின்றுகொண்டு ஒன்று சேர்ந்து ஊளையிட்டது. நரிகளின் ஊளைச் சத்தத்தைக் கேட்ட நீலநரி நெளிந்தது. அதனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இப்போது நீலநரி ஊளையிட்டது. நீலநரியின் ஊளைச்சத்தத்தைக் கேட்ட மற்ற விலங்குகளுக்கு உண்மை புரிந்து போனது. நீலநரிக்கு நல்ல உதை கிடைத்தது. சிங்கராஜா தங்களை ஏமாற்றிய நீலநரியை காட்டை விட்டே துரத்திவிட்டார்.








# பட்டம்: கற்க வேண்டிய பாடங்கள்

வாழ்க்கை என்பது ஒரு கலை. அதை முறையாக, சரியாக, சாதனையான விதத்தில் வாழ நாம் கற்க வேண்டிய வாழ்க்கைப் பாடங்கள் பல உள்ளன. அறிஞர்கள், சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தேடிப் படிப்பதன் வழி கற்கும் பாடம் மிகவும் உதவியாக இருக்கும். பாடங்கள் புத்தகங்களில் மட்டுமல்ல. நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பக்கங்களிலும், பார்க்கும் மனிதர்களிலும் பாடங்கள் உண்டு.

நாம் கற்றுக்கொள்ள உதவும் அனுபவப்பாடம் பயணங்கள். மண்ணைப் பிசையாமல் பானை வருமா? கால் பதியாமல் பாதை தெரியுமா? வெற்றிக்கு ஐந்து படிகள். முதற்படி வாசற்படி. வாசலை விட்டு வெளியேறி வீதியில் கால் பதிப்போம். தடம் பார்த்து நடந்தவர்கள் மனிதர்கள். தடம் பதித்து நடந்தவர்கள் மாமனிதர்கள். நாம் பலரும் நடப்பதனால் மட்டுமே பாதைகள் உருவாகும் என்பதை மறந்து, புதிய பாதை நம்முன் தோன்றும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதிலேயே அதிக நாள்களைச் செலவிடுகிறோம்.

நம் பாதங்கள் வாசற்படியை விட்டு வெளியேறி, பூமியைத் தொட்டு, நடக்கும் பாதையைக் கூர்மையாய் கவனிப்போம். கல்லும், மண்ணும், சர்க்கரையும், ஒன்றாய்க் கலந்திருக்கும்போது எறும்பும் சர்க்கரையை மட்டும் கவ்விச் செல்லும். இந்த உலகம் நல்லதும், கெட்டதும் சேர்ந்த கலவைப் போன்றது. சிற்றெறும்புகளைப்போல நாம் நல்லவற்றை மட்டுமே நமது வாழ்க்கைக்குப் பாடமாய் எடுத்துக் கொள்வோம்.

சுறுசுறுப்புக்கும், சேமிப்புக்கும் எடுத்துக்காட்டான எறும்புகளைப் போல, சுறுசுறுப்புடன் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையானவற்றை முன்கூட்டியே தேடி சேமித்து வைப்போம். சீஸ்மோகிராப் என்னும் கருவி நிலநடுக்கம் நிகழ்வதைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே நண்டுகள் நில அதிர்வைக் கண்டுபிடித்து விட்டன. சந்நியாசி என்ற நண்டு, பூமி அதிர்ச்சி வருவதற்கு 36 மணி நேரத்திற்கு முன்பாகவே வெவ்வேறு வகையான சமிக்ஞைகளை வெளிப்படுத்தி, அங்குமிங்கும் நகர்ந்து தன்னைத் தற்காத்துக்கொள்ள இருப்பிடத்தை விட்டு நகர்வதைக் கண்டு பூமி அதிர்ச்சி நிகழப்போகிறது என்று மனிதர்கள் கற்றுக்கொண்டார்கள். நாம் நல்ல பாடங்களை நண்டுகளைப் பார்த்து மட்டுமல்ல, எதிலிருந்தும் கற்கலாம்.

வானத்தில் நாம் பறக்கவிடும் பட்டங்களில் நல்ல பாடங்கள் உண்டு. பட்டங்கள்... விதவிதமானவை. நாம் பட்டங்களைப் பார்த்து பரவசப்படுகிறோம். வானில் பறக்கும் பட்டங்கள் வெறும் நூல் கயிற்றினால் மட்டுமல்ல, உயரத்தைத் தொட எதிர்ப்பு என்ற காற்றை எதிர்கொண்டு மேலே முன்னேறிச் செல்ல, கயிற்றை கீழே இழுக்க இழுக்கத்தான் மேலே போகிறது. பின்னடைவோ, முன்னேற்றமோ நம் கையில்தான் உள்ளது. எட்டாத உயரத்தில் பட்டம் பறந்தாலும் அதன் பிடிமானம் நாம் பிடித்திருக்கும் கையில்தான் உள்ளது. நூல் அறுந்தாலோ, பட்டம் உயரப் பறப்பதில் நூலை நழுவ விட்டாலோ சிறகிழந்த பறவையாய் கீழே விழுந்துவிடுகிறது. இதுதான் பட்டம் நமக்குச் சொல்கிற வாழ்வியல் பாடம். நமது மனித வாழ்வின் உயர்வு ஏதோ ஓர் ஆதாரத்தின் பிடிப்பில்தான் நிற்கிறது. அது பெற்றோராக, உறவுகளாக, நண்பர்களாக இருக்கலாம். 'நாம்தான் மேலே வந்து விட்டோமே, இனி எனக்கு யாரும் தேவையில்லை' என்று நாம் கொண்டுள்ள ஆதாரங்களை முறித்துக் கொள்ள முடியாது.

கல்லூரி அரங்கத்தில் பயிற்சியளிக்க வந்திருந்த பேராசிரியர், கூடியிருந்த மாணவர்களைப் பார்த்து ஆளுக்கொரு பலூனை கையில் கொடுத்து அவரவரது பெயரை எழுதச் சொன்னார். எல்லாரும் தங்கள் பெயரை பலூனில் எழுதி முடித்தவுடன், அந்தப் பலூன்களை இன்னொரு அறையில் நிரப்பச் சொன்னார். "இப்பொழுது உங்கள் பெயர் எழுதிய பலூனை அந்த அறையில் இருந்து ஒரு நிமிடத்தில் எடுத்து வாருங்கள்" என்று அறிவித்தார். உடனடியாக அனைவரும் விழுந்தடித்து அந்த அறைக்குள் ஓடிச்சென்று தங்களது பலூனைத் தேடினார்கள். கொடுக்கப்பட்டிருந்த காலநேரம் முடிந்துவிட்டது. ஒருவராலும் தங்களுக்குரிய பலூனை கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போது அந்தப் பேராசிரியர் எல்லாரையும் அழைத்து, "ஒவ்வொருவரும் ஒரு பலூனை மட்டும் எடுங்கள். அந்த பலூனில் யார் யார் பெயர் இருக்கிறதோ அதை அந்தப் பெயர் உடையவரிடம் கொடுங்கள்" என்றார்.

அடுத்த ஒரு நிமிடத்தில் தங்கள் பெயர் எழுதப்பட்ட பலூன் எல்லாருக்கும் கிடைத்தது. "பார்த்தீர்களா? இது தான் வாழ்க்கை" என்றார் பேராசிரியர். எல்லாரும் மகிழ்ச்சியைத் தேடுகிறோம். ஆனால் அது எங்கே, எப்படி, எதில் கிடைக்கும் என்று நினைப்பதில்லை. மகிழ்ச்சி என்பது மற்றவர்களுக்கு உதவுவதில் இருக்கிறது. இதுதான் இந்தப் பலூன் கற்றுத்தருகின்ற பாடம். மாணவர்களே, அடுத்தவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்போம். நம் மகிழ்ச்சி நம்மைத் தேடி வரும். இப்படிப் பாதை எங்கும் மகிழ்ச்சிக்கான பாடங்கள் நிரம்ப இருக்கின்றன.

ஆசிரியர்களே! நமது மாணவர்கள் பட்டங்கள் போன்று சுதந்திரமாய் வான் உயர வலம் வரட்டும். பட்டத்தின் கயிறு கைகளில் இருப்பதுபோல உங்கள் கட்டுப்பாட்டில் அவர்கள் இருக்கட்டும். பாரம்பரியமிக்க குடும்ப உறவுகளும், பண்பாடும், மரபுகளும், நாட்டின் வரலாற்றுத் தடங்கள் நூலறுந்த பட்டமாய் சிதைந்துவிடாமல், பண்பாட்டை பயிற்றுமொழியாக்குவோம். தரையில் தவழும் தங்கப் படகுகளாய், தளிர் நிலவுகளாய் நமது மாணவர்களைப் பார்ப்போம்.

மாணவர்களே! நம் ஒருங்கிணைந்த சமூகப் பொறுப்புணர்வுகளில் சவால்கள் நிறைந்தது கல்வி. நமது வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய பள்ளி பருவத்திலேயே முறைப்படி பாடங்களைப் படித்து, நினைவாற்றல் கலையை வளர்த்துக்கொள்ள கற்க வேண்டிய பாடங்களை நிதானமாக, கவனமாகக் கற்போம்.

வாழ்க்கை என்பது ஒரு கலை என்றால், அக்கலையை வெற்றிகரமாக வாழ உதவுவது வாழ்க்கைப் பாடமென்றால், நமது கல்விக் கொள்கைகள், கற்கும் பாடங்கள், காணும் காட்சிகள், சந்திக்கும் நபர்கள், சாதனை மனிதர்கள் என்ற நமது வாழ்க்கையை வளப்படுத்தும் பாடங்கள் அல்லவா! கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்ற உண்மையை உணர்ந்து கற்றலில் கவனம் செலுத்துவோம். வாழ்வில் வெற்றி என்பது ஒருசிலரின் உடமை அல்ல. அது அனைவருக்குமான ஆண்டவரால் வழங்கப்பட்ட ஒரு கொடையாகும்.

# சிந்திக்க சில நிமிடங்கள் ...



ஹார்வெர்ட் ருஜ் என்ற அறிஞர் முன்னூறு மொழிகளைக் கற்றுத் தேர்ந்த பன்மொழி வல்லுநர். இவர் எல்லா மொழிகளிலும் சரளமாகப் பேசவும், எழுதவும் ஆற்றல் பெற்றிருந்தவர். அவரிடம் ஒரு நாள் சிலர் சென்று ஐயா, எப்படி முன்னூறு மொழிகளிலும் இப்படி தங்கு தடையின்றி உங்களால் பேசவும் எழுதவும் இயலுகிறது. இத்தகைய ஆற்றலை எப்படிப் பெற்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர் அது ஒன்றும் என்னுடைய தனிப்பட்ட ஆற்றல் இல்லை. இத்தகைய ஆற்றல் பெற மூன்று விசயங்கள் முக்கியமானவை என்று கூறினார். உடனே அவர்கள் அவரிடம் ஐயா, அந்த மூன்று விசயங்களை எங்களுக்குச் சொல்லித் தாருங்கள் என்று கேட்டனர். அதற்கு அறிஞர் ஹார்வெர்ட் ருஜ் அவர்கள் **முதலாவதாக** ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற தணியாத ஆவல், ஆர்வம் இருக்க வேண்டும்.

**இரண்டாவதாக,** எந்த நிலையிலும் கைவிடாத விடாமுயற்சி வேண்டும்.

**மூன்றாவதாக,** கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த மூன்று விசயத்திலும் கவனம் இருந்தால் நீங்களும் பல மொழிகளைக் கற்றுக்கொள்ள முடியும்.

..........................

**ஒவ்வொருவரும் வாழ்வில் ஒரு குறிக்கோளை ஏற்றுக் கொண்டால்தான் வாழ்வு அர்த்தமுள்ளதாகும்.**

..........................

# முயற்சி செய்யலாமே!

**★ தண்ணீருக்கு மட்டுமே தான், தன்னை அழுக்காக்கிக் கொண்டு பிறரை சுத்தப்படுத்த முடியும். நாமும் கஷ்டங்களை உள்வாங்கி பிறரை சந்தோஷப்படுத்த முயற்சி செய்யலாமே.**

**★ புல்லாங்குழலுக்கு மட்டுமே வெறும் காற்றை உள்வாங்கி இனிய இசையை வெளியிட முடியும். அதனைப்போலவே தீமைகளை மாற்றி நன்மைகளாய் வெளியிட நாம் முயற்சி செய்யலாமே.**

**★ பூக்களுக்கு மட்டுமே ஒரே நாள் ஆயுளில் ஓராயிரம் சந்தோஷங்களை தரமுடியும். நூறாண்டு வாழும் ஆயுளை உடைய நாம் கோடி பெருக்கு சந்தோஷம் தர முயற்சி செய்யலாமே.**

**★ தன் இரத்தத்தினை அளித்து உலகில் பல ஜீவன்களை வாழ்விக்க உதவுகிறது பசு, நாம் நம் இரத்தத்தை தானமாகவும், பிறர் இரத்தத்தினை உறிஞ்சி வாழாமலும், இருக்க முயற்சி செய்யலாமே.**

**★ மெழுகுவர்த்தி மட்டுமே தன்னை கரைத்துக் கொண்டு தன் ஒளியை பிறருக்குத் தருகிறது. நாமும், நம் திறமைகளை பிறரது நலனுக்காய் பிறர் வளர்ச்சிக்காய் பயன்படுத்த முயற்சி செய்யலாமே.**




# திருப்பலியில் விண்ணகத்தின் முன்சுவை

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆவணி 19, ஞாயிறு மூவேளை செப உரையில் கிறிஸ்துவின் திருநற்கருணை குறித்த சிந்தனைகளை வழங்கினார்.


திருப்பலிக்குச் செல்வதும், திருநற்கருணை வாங்குவதும் மிகவும் முக்கியமானது, ஏனெனில், திருநற்கருணை வாங்குகையில், நம் மனதை மாற்றி, விண்ணகத்திற்கு நம்மைத் தயாரிக்கும் உயிருள்ள கிறிஸ்துவை உட்கொள்கிறோம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

திருநற்கருணையில் இயேசு, வானினின்று இறங்கிவந்த உணவாக வருகிறார் என்று கூறினார் மேலும், நான் கொடுக்கும் உணவு, என் சதையே, அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன் என்றும், மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள் என்றும் இயேசு கூறியவேளையில், அவரோடு ஒன்றித்திருக்கவும், அவரை உண்டு, அவரோடு பகிர்ந்து வாழவும், இயேசு தங்களை அழைக்கிறார் என, மக்கள் புரிந்துகொண்டனர் என்றுரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

### விண்ணகத்தின் முன்சுவை மண்ணகத்தில்

கிறிஸ்துவின் திருஉடலும், திருஇரத்தமுமாகிய இந்த வாழ்வு தரும் உணவு, திருநற்கருணை விருந்தில், நம்மிடம் இலவசமாக வருகின்றது என்று கூறியத் திருத்தந்தை, நாம் திருப்பலியில் பங்குகொள்ளும் ஒவ்வொரு நேரமும், விண்ணகத்தை ஏற்கனவே, இம்மண்ணகத்தில் அனுபவிக்கின்றோம் என்று கூறினார்.

இயேசுவின் திருஉடலும், திருஇரத்தமுமாகிய திருநற்கருணை உணவிலிருந்து, விண்ணக வாழ்வு என்பது என்ன என்பதை நாம் புரிந்துகொள்கின்றோம் என்றுரைத்த திருத்தந்தை, நாம் இயேசுவில் நிறைவடையும் பொருட்டு, அவரின் திருவிருந்திற்கு நம்மை அழைப்பதில், அவர் ஒருபோதும் சோர்வே அடைவதில்லை எனவும் கூறினார்.



இயேசுவின் திருவுணவில் நம்மை ஊட்டம் பெறச்செய்யும்போது, கிறிஸ்துவின் உணர்வுகள் மற்றும் அவர் செயலாற்றும் முறைகளோடு, அவரோடு முழுமையாய் ஒன்றிக்கும் சக்தியைப் பெறுகிறோம் என்றும், ஞாயிறு மூவேளை செப உரையில் கூறினார்.



# கேரளாவில் வரலாறு காணாத மழை

## வெள்ள நிவாரணப் பணிகளில் திருஅவை தீவிரம்

கேரளாவில் இடம்பெற்றுவரும் வரலாறு காணாத கன மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ள நிவாரணப் பணிகளில் கத்தோலிக்கத் திருஅவையின் நிறுவனங்கள் தீவிரமாய் ஈடுபட்டுள்ளன.

கேரளாவில் கடந்த நூறு ஆண்டுகளில், முதன்முறையாக, இவ்வாண்டின் பருவமழை மிகத் தீவிரமடைந்து, கடும் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தியுள்ளவேளை, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, அம்மாநிலத்தின் 41 கத்தோலிக்க மறைமாவட்டங்களும், தங்களின் பள்ளிகளையும், ஆலயங்களையும், துறவு சபைகளும் தங்களின் இல்லங்களையும், பள்ளிகளையும், ஏனைய கட்டடங்களையும் திறந்து விட்டுள்ளன.

கேரளாவின் 33 அணைகளும் ஆவணி 13ம் திகதியிலிருந்து நிரம்பிவழியத் தொடங்கியதால், அவற்றைத் திறந்துவிட்ட நிலையில், அம்மாநிலத்தின் 44 ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, வீடுகளையும், வயல்களையும், சாலைகளையும் நீரால் மூடியுள்ளன. குன்றுப் பகுதிகளில் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இப்பேரிடரில் 300க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர் மற்றும் இதுவரை ஏறத்தாழ 2 இலட்சத்து 23 ஆயிரம் பேர் மீட்கப்பட்டுள்ளனர். 50,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள், 1,568 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன. நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், கேரள காரித்தாஸ் அமைப்பின் இயக்குனர் ஜார்ஜ் வேட்டிக்கட்டில் அவர்கள், கத்தோலிக்கத் திருஅவையின் நிவாரணப் பணிகளை முன்னின்று வழிநடத்தி வருகிறார் என, யூக்கா செய்தி கூறுகிறது.

இதற்கிடையில் அடுத்த சில நாட்களில் கேரளா முழுவதும் மழை படிப்படியாக குறையும் எனவும், ஒரு சில இடங்களில் மட்டும் கனமழை தொடர வாய்ப்பு உள்ளதாகவும், வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு, பெருமளவில் வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளவேளை, தேவகோட்டையில் சிறுமிகள், தங்களின் உண்டியல் சிறுசேமிப்புக்களை வழங்கியுள்ளனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருத்தந்தை செபம்

வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் 19ம் திகதி நண்பகலில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களோடு இணைந்து, கேரளாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செபித்தார்.

கேரளாவில், கனமழை, நிலச்சரிவுகள், வெள்ளம் ஆகியவற்றால் பலியாகியுள்ள, பாதிக்கப்பட்டுள்ள மற்றும் காணாமல் போயுள்ள எண்ணற்ற மக்களை இந்நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன் என்று, ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரைக்குப் பின்னர் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இடர்துடைப்புப் பணிகளை முன்னின்று ஆற்றும் கேரளத் திருஅவைக்கு நம் ஒருமைப்பாட்டுணர்வைத் தெரிவிப்போம் எனவும், இந்த நம் சகோதரர், சகோதரிகள், நம் ஒருமைப்பாட்டுணர்வாலும், உலகளாவிய சமுதாயத்தின் தெளிவான உதவிகளாலும் ஆதரவளிக்கப்படுவார்கள் என்ற தன் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார், திருத்தந்தை.

இப்பேரிடரில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காகச் செபிப்போம் என்று சொல்லி, வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களோடு இணைந்து, அருள்நிறைந்த மரியே என்ற செபத்தை செபித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.






# ஜெனோவா மக்கள், நம்பிக்கையை இழக்க வேண்டாம்

இத்தாலியின் ஜெனோவா நகரில், Polcevera கிளை நதியின் மேல் அமைந்துள்ள நெடுஞ்சாலை மேம்பாலம், திடீரென இடிந்து விழுந்த விபத்தில் 41 பேர் பலியாகியுள்ளவேளை, இந்தக் கடும் துயரத்திற்கு மத்தியிலும், ஜெனோவா மக்கள், தங்கள் நம்பிக்கையை இழக்கவில்லை என்று, அந்நகர் கர்தினால் ஆஞ்சலோ பஞ்ஞாஸ்கோ அவர்கள் கூறினார்.

இவ்விபத்தில் இறந்தவர்களில் 19 பேருக்கு 18ம் திகதி அடக்கச்சடங்கு திருப்பலி நிறைவேற்றிய கர்தினால் பஞ்ஞாஸ்கோ அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அனுதாபச் செய்தி, செபம், மற்றும் இவ்வெள்ளிக்கிழமை இரவில் தொலைபேசியில் தன்னை அழைத்து ஆறுதல் தெரிவித்தது போன்ற அனைத்தையும் நினைவுகூர்ந்தார். இவ்விபத்திற்குப் பின்னர் எண்ணற்றோர் எழுப்பிய செபங்களை நினைவுகூர்ந்த கர்தினால் பஞ்ஞாஸ்கோ அவர்கள், நாம் எவ்வளவுக்கு பலவீனர்களாக உணர்கின்றோமோ, அவ்வளவுக்கு மனிதரின் பிணைப்புகள் நமக்குத் தேவைப்படுகின்றன என்று, தன் மறையுரையில் உரைத்தார்.

இந்தப் பாலம், ஜெனோவா நகரின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது என்பதைக் குறிப்பிட்ட கர்தினால் பஞ்ஞாஸ்கோ அவர்கள், இவ்விபத்தால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீண்டும் தங்கள் இடங்களுக்குத் திரும்பவும், நம்பிக்கையுடன், புதிய பாலங்களைக் கட்டியெழுப்பவும், அனைவரும் ஒன்றிணைந்து நடக்கவும் அழைப்பு விடுத்தார்.

# “குடும்பமும் மணமுறிவும்” – புதிய நூல்

## - திருத்தந்தை பிரான்சிஸ்

“அன்பின் மகிழ்வு“ (Amoris Laetitia) என்ற திருத்தூது அறிவுரை மடல், இரு உலக ஆயர்கள் மாமன்றங்களில் நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றங்களின் விளைவாக உருவான மடல் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பொதுநிலையினரும், இறையியலாளருமான Steven Walford என்பவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்தில் வாழும் Walford அவர்கள், “அன்பின் மகிழ்வு“ என்ற மடலை மையப்படுத்தி, உருவாக்கியுள்ள ஒரு நூலைக் குறித்து, திருத்தந்தை எழுதியுள்ள இக்கடிதம், அந்நூலின் அணிந்துரையாக வெளிவந்துள்ளது.

”திருத்தந்தை பிரான்சிஸ், குடும்பமும் மணமுறிவும், உண்மைக்கும் இரக்கத்திற்கும் சார்பாக” என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இந்நூல், “அன்பின் மகிழ்வு“ என்ற மடலில் திருத்தந்தை பதிவு செய்துள்ள கருத்துக்களை வலியுறுத்தியுள்ளது. இன்றைய உலகில் குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சனைகளான குழந்தைகளின் கல்வி, திருமண தயாரிப்பு, சவால்களைச் சந்திக்கும் குடும்பம் ஆகிய பல கருத்துக்கள் தன் மடலில் விவாதிக்கப்பட்டுள்ளன என்றார் திருத்தந்தை.





# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 6:9)

பகுதி – 3

# இறைபுகழ்ச்சியின் படிகள்

இறைப்புகழ்ச்சி என்றால் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து நன்றி செலுத்துவது என்பதை நாம் அறிவோம். ஆனால், அந்த இறைப்புகழ்ச்சியிலும் ஒரு படிமுறை (Hierachy) இருக்கிறது என்பது நமக்கு வியப்பைத் தரலாம்.

**இறைப்புகழ்ச்சியின் நான்கு படிகளான**

1. இறைவனின் மாட்சிமைக்காக அவரைப் போற்றுதல்.
2. இறைவனின் வல்ல செயல்களுக்காக அவரைப் போற்றுதல்.
3. இறைவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளுக்காக அவரைப் போற்றுதல்.
4. இறைவன் நம் வாழ்வில் அனுமதித்த துன்பங்களுக்காகவும் அவரைப் போற்றுதல்.

என்பவை இறையியல் பார்வையிலும், மானிடவியல் பார்வையிலும் முறையானதே என்பதை உணர்ந்தால், நாமும் இந்தப் படிமுறையின் படியே இறை - மனித உறவை அமைத்துக் கொள்வோம்.

## 1. இறைவனின் மாட்சிமைக்காக இறைப்புகழ்ச்சி :

இறைவனின் மாட்சிமையைப் புகழ்வதே மாந்தரின் அடிப்படைக் கடமை. அவர்கள் கடவுளை அறிந்திருந்தும், கடவுளுக்குரிய மாட்சியை அவருக்கு அளிக்கவில்லை, நன்றி செலுத்தவுமில்லை (உரோ 1:21) எனப் பவுலடியார் கூறுகிறார். எனவே, இறைவனை அறிந்த அனைவரும் அவருக்குரிய மாட்சியை, நன்றியை அளிக்க வேண்டும். அவர்தம் எல்லையில்லா மாண்பினைக் குறித்து அவரைப் போற்றுங்கள் (தி.பா 150:2) எனத் திருப்பாடல் ஆசிரியர் அழைக்கின்றார். “உமது மேலாம் மாட்சிமைக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம்” என்று உன்னதங்களிலே என்னும் புகழ்ப்பாடலில் பாடுகின்றோம்.

இறைவனின் மாட்சிமை என்றால் என்ன? கண்ணுக்குப் புலப்படா அவரது பண்புகள் - அதாவது, என்றும் நிலைக்கும் அவரது வல்லமையும் கடவுள் தன்மையும் அவருடைய செயல்களில் தெளிவாய்த் தெரிகின்றன (உரோ 1:20) என்கிறார் பவுலடியார்.

ஆம், இறைவனின் இறையியல்பே, இறைப் பண்புகளே அவரது மாண்பு, அவரது மாட்சிமை. அப்பண்புகளையே நாம் முதலில் போற்ற வேண்டும். என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் எத்துணை மேன்மைமிக்கவர். நீர் மாண்பையும், மாட்சியையும் அணிந்துள்ளவர். பேரொளியை ஆடையென அணிந்துள்ளவர். வான்வெளியைக் கூடாரமென விரித்துள்ளவர் (தி.பா 104:1-2) என்னும் திருப்பாடல் வரிகள் இத்தகைய இறைப்புகழ்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

## 2.இறைவனின் வல்ல செயல்களுக்காக இறைப்புகழ்ச்சி:

இருத்தல் (Being), செயல்படுதல் (Doing) என்னும் இரண்டிலும், இருத்தலே முதன்மையானது என்பதை மெய்யியல் பார்வையில் நாம் அறிவோம். இருத்தலின்றி செயல்பட முடியாது என்பதை நம் வாழ்வியல் அனுபவத்திலிருந்து அறிவோம். இறைவன் உலகைப் படைத்ததற்கு முன்னரே, கடவுளின் ஆவி நீர்த்திரளின் மேல் அசைந்தாடிக் கொண்டிருந்தது என்பதை விவிலியம் வழி (தொ.நூ 1:2) அறிகிறோம். எனவே, முதலில் இறைவனின் இயல்பைப் புகழ்வதும், அதன்பின்னரே அவரது செயல்களைப் புகழ்வதும் தகுதியானதே.

அவரது வல்ல செயல்களுக்காய் அவரைப் போற்றுங்கள் (தி.பா 150:2) என திருப்பாடல்கள் நூலில் வாசிக்கின்றோம். அடிப்படையில், இறைவனின் செயல்கள் இரு வகைப்படும்.

**1. படைப்பு 2. மீட்பு**

இந்த இரு செயல்களும் படைப்பின் தொடக்கத்தில் (தொ.நூ - வி.ப) நிகழ்ந்தன. பின்னர் இயேசுவின் இறப்பு - உயிர்ப்பு வழியாக நாம் மீட்கப்பட்டு, புதுப்படைப்பாக மாறினோம். நமது பிறப்பும், திருமுழுக்குமே இறைவனின் படைப்பு மற்றும் மீட்புச் செயல்கள்தானே. தொடர்ந்து, இந்த இரு செயல்களையும் இறைவன் நம் வாழ்வில் நிகழ்த்திக்கொண்டேயிருக்கிறார். எனவே, இறைவனின் இந்த வல்ல செயல்களுக்காக அவரைப் போற்றுவது நம் கடமை.

ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள் எத்தனை, எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர். பூவுலகம் உமது படைப்புகளால் நிறைந்துள்ளது (திபா 104:24) என்னும் இறைப்புகழ்ச்சி செபம் இந்த வகைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

## 3. இறைவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளுக்காக இறைப்புகழ்ச்சி :

இறைப்புகழ்ச்சியின் முதல் இரு படிகளும் இறைவன் மீதே கண்களைப் பதிக்கின்றன. மூன்றாவது படியில்தான் நாம் நம் பக்கத் திருப்புகின்றோம். நமது வாழ்வில் இறைவன் செய்த செயல்களுக்காக அவரைப் போற்றுகிறோம்.

ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்? மீட்பின் கிண்ணத்தை கையில் எடுத்து ஆண்டவரது பெயரைத் தொழுவேன் (தி.பா 116:12-13) என்னும் பழைய ஏற்பாட்டுப் புகழ்ச்சியும், வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர் (லூக் 1:52) என்னும் அன்னை மரியாவின் இறைப்புகழ்ச்சியும் இவ்வகையின் இரு எடுத்துக்காட்டுக்கள்.

## 4. இறைவன் நம் வாழ்வில் அனுமதித்த துன்பங்களுக்காகவும் இறைப்புகழ்ச்சி :

இறைப்புகழ்ச்சியின் நான்காவது படி ஓர் அறைகூவல். ஆம், நம் வாழ்வின் துன்பங்களுக்காகவும், இறைவனைப் போற்றுவது, துன்பங்களுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டுமா?

## இதற்கு சில இறையியல் காரணிகள் இருக்கின்றன.

1. அனைத்தும் நன்மைக்கே. தீமைகளின் வழியாகவும் இறைவன் நன்மைகளைச் செய்வார்.
2. தீமைகளின் வழியாக நாம் வாழ்வியில் பாடங்களைக் கற்றுக்கொள்கின்றோம்.



3. நமது துன்பங்களின் வழியாக பிறர் வாழ்வடைவார்கள்.

இந்தக் காரணங்களை முன்னிட்டு, நமது துன்பங்களுக்காகவும் நாம் இறைவனைப் போற்றுவது நல்லதே.

## விவிலியம் சில எடுத்துக் காட்டுக்களைத் தருகிறது :

நீதிமான் யோபு மாபெரும் துன்பங்களைச் சந்தித்தபோது, இறைவனைப் பழிக்கவில்லை. மாறாக, போற்றினார் என்று பழைய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன். அங்கே திரும்புகையில் பிறந்த மேனியனாய் யான் செல்வேன். ஆண்டவர் அளித்தார். ஆண்டவர் எடுத்துக் கொண்டார். அவரது பெயர் போற்றப்பெறுக (யோபு 1:21) என்றார் யோபு. துன்ப நேரத்திலும் இறைவனைப் போற்றுவதற்கு அவர் சிறந்த சான்றாக விளங்குகிறார்.

ஆண்டவரே, எனக்குத் துன்பம் விளைந்தது என் நன்மைக்காகவே. அதனால் உம் விதிமுறைகளை நான் கற்றுக்கொண்டேன் (திபா 119:71) என்கிறார் திருப்பாடலாசிரியர். துன்பம் நமக்குச் சில வாழ்வியல் பாடங்களைக் கற்றுத் தருகிறது. எனவே, நாம் இறைவனுக்கு நன்றி கூறலாம்.

“அத்திமரம் துளிர்த்து அரம்பாமல் போயினும், திராட்சைக் கொடிகள் கனி தராவிடினும், கிடையில் ஆடுகள் யாவும் அழிந்து போயினும், தொழுவங்களில் மாடுகள் இல்லாது போயினும், நான் ஆண்டவரில் களிகூர்வேன்” (அப 3:17-18) என்றார் இறைவாக்கினர் அபக்கூக்கு.

பிறவியிலேயே பார்வையற்ற மனிதரைப் பற்றித் தம்மிடம் வினவிய தம் சீடருக்கு இயேசு தந்த பதில் : “இவர் செய்த பாவமும் அல்ல, அவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல. கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தார்” (யோவா 9:3)

அதுபோல, லாசர் நோயுற்றபோது, இயேசு கடவுளின் மாட்சி விளங்கவே இவன் நோயுற்றான் ) யோவா 11:4) என்று சொல்லித் தம் சீடரை மட்டுமல்ல நம்மையும் வியப்பில் ஆழ்த்துகின்றார்.

பவுலடியாரும் தமது உடல் நலக்குறைவிலும், ஒரு நன்மையைப் பார்க்கின்றார். கலாத்தியருக்கு எழுதிய திருமடலில் என் உடல்நலக் குறைவுதான் உங்களுக்கு முதன் முதல் நற்செய்தி அறிவிக்க எனக்கு வாய்ப்பு அளித்தது (கலா 4:13) என்று எழுதுகிறார்.

எனவே, நோய், தோல்வி, இன்னல்கள் இவற்றையெல்லாம் நேர்மனநிலையோடு எடுத்துக் கொண்டு, அவற்றுக்காகவும் இறைவனைப் போற்றுவது நம்மை ஆன்மீகத்தில் வளரச் செய்கிறது. நாம் இறைப்புகழ்ச்சி செபங்கள் செபிக்கும்போது, இந்தப் படிமுறையை மனதில் கொள்வோம்.

**தொடரும்**

# சில்லையூரின் பாதுகாவலியாம் கதிரைமாதாவின் திருவிழா!





இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்ட மக்களையும், இயற்கை வளங்களையும் கொண்டு செழிக்கும் சில்லாலைக் கிராமத்தில் பெரும்பான்மையானோர் கத்தோலிக்கர் என்பதாலும் புனித யோசவ்வாஸிற்கு புகலிடம் கொடுத்து காப்பாற்றி அவரின் வழி நடத்தலுடன் இறை வாழ்வை விடாமல் தொடர்ந்தமையாலும், பல குருமாரையும் கன்னியாஸ்திரிகளையும் உருவாக்கியதாலும் இக்கிராமத்தை “சின்ன ரோம்” என புனை பெயரிட்டு அழைத்து யாழ் மண்ணின் கத்தோலிக்க விசுவாசிகள் பெருமையடைகிறார்கள்.

சில்லையூரின் மத்தியில் வானுயர்ந்த கோபுரங்களுடன் காட்சியளிப்பது சில்லையூரின் பாதுகாவலியாம் கதிரைச்செல்வியின் ஆலயம். அருட்திரு டெய்சி (அ.ம.தி) அடிகளாரின் அருட்பெரும் முயற்சியாலும் சில்லையூர் மக்களின் ஒத்துழைப்பாலும் சில்லையூரின் மத்தியில் ஒரு அழகான ஆலயம் அன்னைக்கு அமைக்கப்பட்டுள்ளது. நுட்பமான வேலைப்பாடுகளைக் கொண்ட மரத்திலான, சிங்காசனத்தில் பொன்முடி தரித்து குழந்தை யேசுவை கையில் ஏந்திய வண்ணம் கொலுவீற்றிருக்கும் பரலோக பூலோக அரசியாம் கதிரைச்செல்வி சில்லையூர் மக்களின் அன்னையாகவும் பாதுகாவலியாகவும் இருந்து தன்னை அண்டி வரும் பக்தர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து கருணை மழை பொழிந்து பரிபாலித்து வருகின்றார்.


சில்லையூர் மக்கள் மரியன்னையின் விண்ணேற்பு விழாவை ஆவணித் திங்கள் 15ஆம் நாள் வெகு விமர்சையாக கொண்டாடுவார்கள்.

மணியோசையுடன் கூடிய கொடியேற்றம், திரைப்பாடல், விருத்தங்களுடன் நவநாள் வழிபாடுகள், நற்கருனைப்பவனி, பெருவிழா கூட்டுப்பலி, மரியன்னையின் திருச்சுரூப ஊர்வலம், சிரோலைப்பாட்டுக்கள் போன்ற வழிபாடுகளில் சில்லையூர் மக்களும் அயற்கிராமங்களின் கத்தோலிக்க பிற சமய மக்களும் பங்குகொண்டு பக்தி பரவசத்தில் திளைப்பது கண்கொள்ளா காட்சியாகும்.

பெயர் போன வைத்தியர்கள் வாழ்ந்த இடம் சில்லாலை “எல்லோரும் கைவிட்டாலும் சில்லையூரின் பாதுகாவலியாம் கதிரைத்தாய் கைவிடமாட்டார். அவரை “மருந்து மாதா” என்று அழைப்பார்கள். அதற்கமைய அநேக பரம்பரை வைத்தியர்கள் இங்கு உள்ளனர். நாடி பார்த்து வருத்தத்தை கண்டறிந்து வாகடம் ஏடு பார்த்து மருந்தறிந்து மூலிகைகள், தாவர இலை, பட்டை, வேர் போன்ற இவற்றை கொண்டு வருத்தத்தை மாற்றும் சித்த ஆயள்வேத வைத்தியர்கள் இருந்தனர். குழந்தைப்பிள்ளை வைத்தியத்துக்கு தலைசிறந்த வைத்தியர்கள் இங்கு உள்ளனர். இவர்களின் சிறப்புக்கெல்லாம் மூல காரணமாக இருந்து வருபவள் “மருந்துமாதா” கதிரைச் செல்வியே! கதிரைச்செல்வியின் அடைக்கலத்தில் வாழ்ந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நாட்டின் பல்வேறு பாகங்களில் வாழும் சில்லையூர் மக்கள் அன்னையின் அருளால் தாம் பெற்ற நன்மைகளுக்கு நன்றிக்கடனாக தங்கள் தங்கள் இடங்களில் கதிரைச்செல்வியின் விழாவைக் கொண்டாடுகிறார்கள். இம் முறையும் 15ம் திகதி ஆவணி 2018 சில்லையூர் மக்களாலும் மற்றும் வெளியூர் பக்தர்களாலும் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது.

S.B.**டேவிட்**

# நல்லாயன் இயேசுவின் இதயக் குமுறல்கள்



## என் மந்தையின் அவலநிலை நோக்கிப் பார்க்கிறேன்.





பசும்புல் மேய்ச்சல் இல்லை
கண்களுக்குள் ஒளியில்லை
கால்களுக்கு வலிமையில்லை
வாழ்க்கையில் இனிமையில்லை
காயங்களுக்கு கட்டுப்போட யாருமில்லை
அவற்றைத் தேடிச்செல்லும் கால்களில்லை.
நலிந்தவற்றைத் திடப்படுத்த கரங்களில்லை
பிணியுற்றவற்றிற்கு குணமளிக்கும் இதயமில்லை
வழிதவறியவற்றை திரும்ப கூட்டி வர ஆர்வமில்லை.

கொடுமையும் வன்முறையும் ஆட்சி செய்ய
செல்லுமிடம் புரியாமல் அலைந்து திரிய கண்டேன்

இவ்வுலக சவால்களில் துன்பங்களில் மூழ்கி
கவனிப்பாரின்றி சிதறுண்டு போகக் கண்டேன்
கண்ட கண்ட காட்டு விலங்குகளுக்கு
இரையாகி அனுதினம் மடிவதைக் காண்கிறேன்.
இவர்களைத் தேடி என் பாதம்
பயணிக்க வேண்டுமென ஏங்குகிறேன்.

முகப்புத்தகத்தில் இல்லாத
தம் முகவரிகளை தொலைத்த மனித
முகங்களை தேடி

முகப்புத்தகமே கதி என தம்
முகத்தையே தொலைத்த
இளைஞரின் முகவரி தேடி

வறுமையில் மூழ்கி
ஒருவேளை உணவுக்காய்
அங்கலாய்த்து மடிகின்ற
மனிதர்களை தேடி

கவர்ச்சியோ அழகோ இன்றி
கவனிப்பார் யாருமின்றி
சோமாலிய கண்களோடு வாடும்
ஒடுக்கப்பட்டோரை தேடி

உடல்நலமிழந்து உள்ள
வேதனையால் உருக்குலைந்து
புறந்தள்ளிப்பட்டோரின்
இதயம் நோக்கி
உறவிழந்து உற்ற துணையிழந்து
ஆறுதல் கூறி தேற்றுவார் இன்றி
தனிமையில் வாடுவோரின்
மனங்களை நோக்கி


பணமும் பதவியும் பட்டமும் இன்றி
சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டு
மனித மாண்பிழந்த
ஓளஙகளை தேடி

நீதியும் உண்மையும் மறுக்கப்பட்டு
குரல் கொடுக்க யாருமின்றி
வாழ்வை தொலைத்து ஏங்கும்
அனாதை மனங்களைத் தேடி

சுத்தமான காற்றும் சுகாதார சூழலும்
இன்றி சமுதாய சகதிக்குள்
மூழ்கி நலமிழந்த
என் மந்தைகளை தேடி

போதை வஸ்து பாவனையும்
துஷ்பிரயோகமும் மலிந்த இடத்தில்
நல்வாழ்வு இழந்து வாடும்
என் அருமை ஆடுகளை தேடி

நல்வார்த்தை சொல்லவும்
நல்வழி காட்டவும்
யாருமின்றி சின்னாபின்னமாக
வாழ்வை தொலைத்து வாடுவோரின்
துயரமான வாழ்வைத் தேடி.



ஆக்கம்.
த.மேரி பற்றீசியா

## 02 திரு இருதயநாதர்...

21ம் திகதி வியாழக்கிழமை "திரு இருதயத்தின் ஆழத்தை எடுத்துக்கூறும் ஒப்புரவு" என்ற தொனிப்பொருளில் மறையுரையாற்றப்பட்டு ஒப்புரவு அருளடையாளமும் வழங்கப்பட்டது. 23ம் திகதி சனிக்கிழமை மாலை ஆராதனையானது கோட்டே வட்டாரத்தின் மாவட்ட தலைவரும், புனித தோமையார் ஆலயத்தின் பங்குத்தந்தையுமான பிறெடி சாந்திகுமார் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. அவரோடு பங்குத்தந்தையும் அருட்தந்தை லின்டன் அடிகளாரும் இணைந்து கொண்டனர். அத்தோடு மாலை ஆராதனைக்கு பௌத்த மதத் தலைவர்களும் எம் அழைப்பை ஏற்று வருகை தந்தமை சிறப்பம்சமாகும். மாலை ஆராதனையைத் தொடர்ந்து திரு இருதயநாதரின் திருச்சுரூபப்பவனியும் அதனைத் தொடர்ந்து திருச்சுரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது. 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலிக்கு கொழும்பு மறைமாவட்டத்தின் ஊடக மற்றும் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளரும், எம் முன்னாள் பங்குத்தந்தையுமான அருட்தந்தை எட்மன் திலகரட்ன அடிகளார் தலைமை தாங்கினார். "எம் இருதயத்தை உம் இருதயத்திற்கு ஒத்ததாகச் செய்தருளும்" என்ற கருப்பொருளில் மாலை ஆராதனை மற்றும் திருவிழா திருப்பலியின் மறையுரைகள் அமைந்திருந்தன. இத்திருவிழாவுக்காக வலுவூட்டிய தந்தை, மகன், தூய ஆவியாகிய மூவொரு இறைவனுக்கும், எம்மோடு இணைந்துகொண்ட அருட்தந்தையர்களுக்கும், பங்கிலே பணியாற்றும் கிளரீசியன் மறைபோதக அருட்சகோதரிகளுக்கும் அத்தோடு பல்வேறுபட்ட வழிகளில் உதவி நல்கிய அனைவருக்கும் இந்நிகழ்விற்காக கைக்கோர்த்த பங்குமக்கள் அனைவருக்கும் கோடான கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

**தகவல் : ஆன் சகானா பிரான்சிஸ்**

## 02 கத்தோலிக்க...

நிறைவு பெறாத அவ் அன்பை அவர் சிலுவையிலேயே முடிவுபெறச் செய்யவில்லை. அவ் அளப்பரிய அன்பை என்றும் எம்மில் நிலைத்திருக்க வைப்பதற்கு அவரின் மரணத்தை என்றும் நிலைத்திருக்கும் பலியாக ஒப்புக் கொடுத்தார். எமது மனதினை தூய்மைப்படுத்திக் கொண்டு, ஒப்புரவு அருட்சாதனத்தை பெற்றுக்கொண்டு, திருப்பலியின் போது, இயேசு கிறிஸ்துவை எம் உள்ளத்திற்கு வரவழைத்துக் கொள்ள முடியும்" எனத் தெரிவித்தார்.

தமிழ்மொழி பேசும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் இவ் ஆலயம் கட்டப்பட்டுள்ளமையால் தமிழ் மொழியிலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதோடு, அதனைத் தொடர்ந்து ஆலயத்தின் ஆலய மணிக் கோபுரமும் ஞாபகப் பலகையும் மெல்கம் கர்தினால் ஆண்டகையின் கைகளால் திறந்து வைக்கப்பட்டன. ஹொரணை பங்குத்தந்தை அருட்பணி. நுவன் புத்திக்க அடிகளாரால் இத்திருப்பலி ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததோடு, அருட்பணி. ஒனாசிஸ் பர்னாந்து அடிகளாருடன் இங்கிரிய மற்றும் ஹொரணை பிரசேத மக்கள் பெரும்பாலானோர் இந்நிகழ்வில் பங்கு கொண்டனர்.

**தகவல் : ரீ, சுனில் பர்னாந்து மற்றும் ரொஷான் பிரதீப்**

## 02 கொழும்பு உயர்...

ஞாயிறு திருப்பலி திருப்பாலத்துவ சபை தமிழ் பிரிவு பொறுப்பாளர் அருட்பணி ஒனாசிஸ் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் அவருடன் எமது பங்குத்தந்தை, உதவிப்பங்குத்தந்தை (திருப்பாலத்துவ சபைவத்தளை வட்டார இயக்குனர்) ஆகியோரால் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் கிண்ணமும் வழங்கப்பட்டன. மேலும் பங்கின் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களையும் மாணவர்களையும் உற்சாகப்படுத்தும் வகையில் நெறிப்படுத்தும்படி பங்குத்தந்தை கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது மாதத்தில் இறுதி ஞாயிறு திருப்பலி சிறுவர் பாடகர் குழாமினரால் சிறப்பிக்கப்பட்டு வருகிறது என்பதும் சிறப்பம்சமாகும்.

அத்துடன் எமது பங்கின் மறைக்கல்விக்குப் பொறுப்பாய் இருக்கும் ஆசிரியை திருமதி. ரூத் அவர்கள் ஊக்குவிப்பாளராகிய எமக்கும் திருப்பாலத்துவ சபை மாணவர்களுக்கும் எல்லா விதத்திலும் எப்போதும் ஒத்துழைப்பும் உற்சாகமும் அளிப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இச்சிறுவர் பாடகர் குழாமினருக்கு அருட்சகோதரி விக்டோரியா அவர்கள் உறுதுணையும் உற்சாகமும் அளிப்பவர் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்படத்தில் சான்றிதழ்கள் பெற்ற மாணவர்களையும் அருட்பணி ஒனாசியஸ் அடிகளாரையும், பங்குத்தந்தை ரஞ்சன் சில்வா அடிகளாரையும், உதவிப்பங்குத்தந்தையும் திருப்பாலத்துவ சபை வத்தளை வட்டார இயக்குனருமான அருட்பணி. லலித் திசேரா அடிகளாரையும் அருட்சகோதரி ஜூடித் அவர்களையும் ஊக்குவிப்பாளர்களான திருமதி. டயஸ், திருமதி. ஜோன், திருமதி. பிளோரா அவர்களையும் காணலாம்.

**தகவல் : திருமதி. கோமதி ஜோன்.**

**நாயக்ககந்தை பங்கு, தி.பா.ச. ஊக்குவிப்பாளர்.**

## 03 தலைமுறைகள்...

"நான் கனிவும், மனத்தாழ்ச்சியும் உடையவன்" (மத் 11:29) என்று சொன்ன இயேசுவின் பண்புகளைப் பின்பற்றி, தாழ்ச்சியால் தன்னையே தாழ்த்திக் கொண்ட மரியாபோல் வேறு எவரும் தன்னைத் தாழ்த்திக் கொள்ளவும் இல்லை, இறைமகனுக்கு அடுத்து மரியாபோல் வேறு எவரும் உயர்த்தப்படவும் இல்லை. அதனால்தான் எலிசபெத்து தன்னை வாழ்த்தியதும் மரியா மனமகிழ்ந்து "தாழ்நிலை நின்ற தம் அடியவரைத் தயவுடன் கடைக்கண் நோக்கினார். இந்நாள் முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1:41-48) என்று கூறுகின்றார். நிச்சயமாக தலைமுறை தோறும் வாழ்த்தும் தவப்புதல்வி அன்னை மரியா என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

நம் கத்தோலிக்கத் திருச்சபை எத்தனையோ விழாக்களைக் கொண்டாடி வந்தாலும், மிக முக்கியமான மூன்று பேருக்கு மட்டும் பிறந்தநாள் விழா என்று கொண்டாட மகிழ்கின்றது. அவை

1. இயேசுவின் பிறப்பு நாள் - மார்கழி 25
2. அன்னை மரியாவின் பிறந்தநாள் - புரட்டாதி 8
3. திருமுழுக்கு யோவானின் பிறந்தநாள் - ஆனி 24

மீட்பின் சரித்திரத்தில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்ததால் இவர்களுக்கு இந்தச் சிறப்பு. மற்ற புனிதர் அனைவருக்கும், அவர்கள் ஆன்மா இறைவனிடம் சென்று சேர்ந்த நாளையே விழாவாகக் கொண்டாடி வருகின்றோம்.

இத்தகு சீர்மிகு சிறப்புப் பெற்ற தூய அன்னை மரியாவின் பிறப்பு விழாவில், நமது தேவைகள், துன்பங்கள், வியாதி, வருத்தங்கள் அனைத்திற்காகவும் அவரிடம் மன்றாடுவோம். அவரது அடைக்கலத்திலும், பாதுகாப்பிலும் நம்மையும், நம் குடும்பங்களையும் முழுவதுமாக ஒப்படைப்போம் அன்னையைப் போல் தூய்மையும், கனிவும், மனத்தாழ்ச்சியும் உள்ளவர்களாக வாழ்வோம். அப்பொழுதுதான் அவரது உடனிருப்பையும், அவரது அருள் வரங்களையும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் உணர்ந்து மகிழ்வோம்!

**அனைவருக்கும் அன்னை மரியாவின்,**

**ஆரோக்கியத் தாயின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்!.**

## 01 நாட்டின் சமாதானம்...

நிகழ்வின் பிரதான விருந்தினராக கலந்து கொண்டு ஆற்றிய மறையுரையின் போது தெரிவித்தார்.

மேலும் "இவ் லௌகீக உலகியல் விடயங்களுக்கு அடிமைப்படாமல் ஆன்மீக வாழ்வின் ஆழத்தினை முன்னுணர்ந்து இறைவனால் எமக்கு வழங்கப்பட்டுள்ள மேன்மை நிலையிற்கான அழைப்பினை விளங்கிக் கொண்டு இறைவனின் நிலையான நம்பிக்கையுடன் நாம் எடுக்கும் முடிவுகளின் போது அவ் விசுவாசத்திற்கு சாட்சியாளர்களாவோமானால் எமக்கு கிடைப்பது திண்ணம்".

எம் கத்தோலிக்கத் திருச்சபையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தினர் அனைவரினதும் அழைப்பானது, இறைவனின் அன்பை உங்களுக்கு கொடுப்பதாகும். நாங்கள் இதனை நூற்றுக்கு நூறு வீதமாக நிறைவேற்றுகின்றோம். நாம் எமக்கான திருமண வாழ்வினை அர்ப்பணித்து இறையன்பை உங்களுக்கு அருள எம்மை அர்ப்பணித்துள்ளோம். இறைமக்களாகிய நீங்கள் இயேசு கிறிஸ்துவில் நிலைத்து, ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சிகரமாக வாழ்வதை பார்ப்பதே எமது வேண்டுதலாகவும் அகமகிழ்வாகவும் அமையும்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக இலங்கையின் அப்போஸ்தலிக்க தூதுவர் மேதகு பியரே வென் டொட் ஆண்டகை கலந்து கொண்டதுடன், யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், உயர்மறைமாவட்ட துணை ஆயர்களான மேதகு மெக்வல் சில்வா ஆண்டகை, மேதகு ஜே.டீ. அந்தனி ஆண்டகை, ஓய்வுபெற்ற பேராயர்களான மேதகு நிக்லஸ் மார்க்கஸ் ஆண்டகை மற்றும் மேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் குருக்கள், துறவிகள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சரான திரு. ஜோன் அமரதுங்க, கிறிஸ்தவத் தலைவர்கள் இறைமக்கள் உள்ளிட்ட ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானோர் இந்நோயாளர்கள் தினத்தில் கலந்து கொண்டனர்.

**தகவல் : ரீ, சுனில் பர்னாந்து மற்றும் ரொஷான் பிரதீப்**

## 09 அயர்லாந்தில்...

குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டிய நம் கடமைகளை வலியுறுத்துவதாக இருக்கட்டும். குழந்தைகளுக்கும் வாழ்வின் மதிப்பீடுகள் பற்றி கவனமுடன் கற்பிக்க வேண்டிய நம் கடமைகளை உணர்ந்து செயல்படுவோம்.

1500 ஆண்டுகளுக்கு முன்னரே இந்நாட்டில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. அது இந்நாட்டு மக்களின் வாழ்விலும் கலாச்சாரத்திலும் ஒரு பகுதியாகவே மாறியுள்ளது. நற்செய்தியைப் பெற்ற இந்நாட்டு மக்கள், வேறு இடங்களுக்கும் மறைபோதகர்களாக நற்செய்தியை எடுத்துச் சென்றுள்ளனர். இந்த நாட்டின் மக்கள், தங்கள் விசுவாசத்தால் பிறந்த ஞானத்தின் துணைகொண்டு தேசிய வாழ்வை வளப்படுத்தியுள்ளனர், வளப்படுத்தி வருகின்றனர். கடவுளின் ஞானம், மகிழ்ச்சி, மற்றும் அமைதியின் அருளை உங்கள் அனைவருக்காகவும் இறைவனிடம் இறைஞ்சுகின்றேன். நன்றி.

## 01 உன் விசுவாசம்...

நாங்களும், நீங்களும் இங்கே அன்னை மரியின் பரிந்துரையின் மூலம் நற்கருணை நாதரிடமிருந்து அருளைப் பெற்று குணமடைய வந்திருக்கின்றோம்.

இன்று எமக்கு உடல் நோய்கள் மட்டுமல்ல, நாம் வாழும் சமுதாயத்தில் பல்வேறுபட்ட நோய்கள் பரவிக்கொண்டிருக்கின்றது பொய் சொல்லுதல், விபச்சாரம் செய்தல், கருச்சிதைவு போன்ற நோயின் அழிவுகளுக்குள் நாம் சென்று கொண்டிருக்கின்றோம்.

நாங்கள் சொல்லலாம் எம்மிடம் களவு இல்லை, பொய் இல்லை என்று அழிந்து போகின்றோம். நமது பிழைகளை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. எம்மிடம் பிரமாணிக்கம் என்பது இல்லை. ஆனால் அன்னை மரியாளிடம் பிரமாணிக்கம் இருந்தது. ஆம், ஆகட்டும் என்று சொல்லி கடவுளுக்கு உகந்த பிரமாணிக்கமான வாழ்க்கையை வாழ்ந்தார். ஆம் என்று சொன்னதாலே பல்வேறு துன்பங்களை அனுபவித்தார். எல்லாவற்றையும் உள்வாங்கி தியானித்து இறைசித்தம் நிறைவேற சிலுவையின் அடியில் தன் ஒரே மகனையே ஒப்புக்கொடுத்தாள்.

பிரமாணிக்கம் என்பது தியாகத்திலே தான் கட்டப்படுகின்றது. மரியன்னையின் வாழ்க்கையிலும் தியாகம் நிறைந்த வாழ்க்கையாக தான் இருந்தது. இறைவனின் சித்தத்தை நிறைவேற்றுவது மிகவும் கடினம். அதைத்தான் அன்னை மரியாள் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்தாள். அன்பார்ந்தவர்களே நாங்கள் வருத்தங்களை மட்டும் யோசிக்கக்கூடாது இந்த நாட்டிலே பெரிய வருத்தங்கள் காணப்படுகின்றது. எங்கள் குடும்பங்களிலே பிரமாணிக்கமற்ற தன்மை, தொழில்களிலே பிரமாணிக்கமின்மை இவையெல்லாம் மிகப் பெரிய பாவம், பெரிய நோய், பொய் சொல்லுவது, களவு எடுப்பது எல்லாம் சர்வசாதாரணம். மிகவும் பயங்கரமான நோய் இப்படியானவையெல்லாம் நாம் கண்டுகொண்டு வருகின்றோம். மனம் தூய்மையானதாக இருக்க வேண்டும். எது சரி எது பிழை என்பதை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். மரியன்னையின் முன்மாதிரிகையைப் பின்பற்றி இறைசித்தத்தை நிறைவேற்றுபவர்களாக மரியன்னையின் மூலம் அவரது மகன் நற்கருணை நாதரிடம் மன்றாடி எங்களை நாம் குணப்படுத்துவோம். விசுவாசம் தான் எங்களை குணப்படுத்தும் எங்களுடைய நோய் நொடிகள் மாத்திரமல்ல எங்களுக்கு வந்திருக்கின்ற வெவ்வேறு வியாதிகளிலிருந்து, சுயநலமான வாழ்வு, விட்டுக்கொடுப்பதற்கு மனமேயில்லை ஆனால் நாளாந்தம் கோயிலில் இருந்து மன்றாடுவோம். மற்றவர்களுக்கு உதவி செய்தல், குடும்பத்திலேயும், சமுதாயத்திலேயும் தியாகம் என்பது அற்றுப்போயுள்ளது கத்தோலிக்கர்களாகிய நாங்கள் தியாக வாழ்விலேதான் மற்றவர்களுக்கு உதவி செய்வது, எனக்கு வேண்டியதை மறுத்து மற்றவர்களுக்கு உதவுவது. இதிலேதான் தியாகம். கத்தோலிக்க மதத்திலேதான் இருக்கிறது. மரியன்னை தன் வாழ்க்கையையே பிறருக்காக வாழ்ந்தாள். எலிசபெத் முதிர்ந்த வயதிலே கருத்தரித்திருக்கின்றாள், பிரசவம் கடினம். தானாக போய் மூன்று மாதம் அவருக்கு உதவி செய்தாள். தனது வருத்தத்தை கவனிக்கவில்லை. தானும் தன் மகனை வயிற்றில் வைத்திருக்கின்றேன் என்று எண்ணவில்லை. இது தான் உண்மையான கிறிஸ்தவம்.

அன்பார்ந்தவர்களே மரியன்னையின் பாதத்திலே இருந்து நற்கருணை நாதரிடத்திலே வேண்டி பெற்றுக்கொள்வோமாக ஆமென்.


# பணிப்பெண் தேவை

**வயதான தம்பதியரை கவனித்துக் கொள்ள வேண்டும். உணவு, விடுதி வழங்கப்படும், சம்பளம் பேச்சுவார்த்தைக்குட்பட்டது.**

**தொடர்புகளுக்கு : 077 7034155**

(N2691)


எமது இணையத்தள முகவரி

**http://www.colomboarchdiocesancatholicpress.com**



## முட்டை அவிப்பது பற்றிய சில அறிவுறுத்தல்கள்



முட்டையை சிலர் பொதுவாக சோறு வேகவைக்கும் போது அந்த தண்ணீரிலேயே சோற்றுடன் சேர்த்து வேக வைப்பார்கள். இன்னும் சிலர் குழம்பு செய்யும் போது அதிலும் முட்டையை ஓட்டுடன் முழுமையாக வேக வைப்பார்கள். இது தவறானதாகும்.

ஏனென்றால் அந்த பச்சை முட்டையிலிருந்து வெளிவரும், கெட்ட நீர் ஒரு இறந்த உடலை குளிப்பாட்டும் நீருக்கு சமமாகும்.

இதனால் கெடுதி அதிகம் ஏற்படும். ஆகையால் முட்டையை அவிக்கும் போது, தனியாக ஒரு பாத்திரத்தில் வேக வைப்பது சிறந்ததாகும்.

# கொசுவை ஒழிப்போம்!



கொசு வலைக்குள் ஒரு மனிதர் பாதுகாப்பாக படுத்திருக்கிறார். கொசு வலைக்கு வெளியே உட்கார்ந்திருக்கும் கொசு, உள்ளே படுத்திருக்கிற மனிதரைப் பார்த்துச் சொல்கிறது.. “டேய்... நீ சரியான ஆம்பிளையா இருந்தா, கொசு வலைக்கு வெளியே வந்து படுடா பார்க்கலாம்...!

இது பத்திரிகையில் வெளியான நகைச்சுவை, ஆனால், இன்று உலகமே கொசுவைப் பார்த்துப் பயப்படுகிறது. மலேரியா, டெங்கு, பைலேரியா, சிக்குன் குன்யா போன்ற பல்வேறு நோய்களை கொசுக்கள் பரப்புகின்றன. உலக அளவில் பத்து இலட்சம் பேருக்கு மேல் ஆண்டுதோறும் உயிரிழக்கின்றனர்.

சில கொசுக்களால் பரப்பப்படும் ஜிகா வைரஸ் நோயால் தாக்கப்படும் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் தலை சிறியதாக இருக்குமாம். வளர்ந்தபின் அதன் மூளை வளர்ச்சி பாதிக்கப்படும். டெங்கு, சிக்குன் குன்யாவைப் பரப்பும் ஏடஸ் எஜிப்தி என்ற வகை கொசுக்கள் இந்த ஜிகா வைரஸையும் பரப்புகின்றன. தொடக்கத்தில் தாய்லாந்து, மாலத்தீவுகளில் இவ்வகை வைரஸ்கள் பரவின.

சுற்றுப்புற தூய்மையில் அலட்சியம் காட்டுவதால் கொசுக்கள் பரவுகின்றன. நோயுற்ற மனிதர்களையோ, பிராணிகளையோ கடிக்கும் கொசுக்கள் நோயில்லாதவர்களைக் கடிக்கும்போது அவர்களையும் நோய் தாக்குகிறது. உடலில் தூய்மையான இரத்தம் இல்லாதவர்களையும் உடலில் அதிகக் கழிவுகளைச் சேர்த்து வைத்திருப்பவர்களையும் கொசுக்கள் அதிகமாகத் தாக்கும். எனவே சுற்றுப்புறத்தை மட்டுமல்ல, வீட்டையும், உடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

அறியாமையாலும், வசதிக் குறைவாலும் வாழ்கின்ற அடித்தட்டு மக்களே கொசுக்கடியால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். உழைத்துப் பிழைப்பவர்கள் அசதியால் அயர்ந்து தூங்கும்போது கொசுக்கள் தடையின்றிக் கடிக்கின்றன. மருத்துவமனைக்கு அன்றாட வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டுத்தான் அவர்கள் செல்லும் நிலை உள்ளது.

கொசுக்களை விரட்ட பெரும்பாலும் கொசு வர்த்திச்சுருள், கிரீம்கள், கொசுமருந்து ஸ்பிரே, எலக்டிரானிக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. கொசுவர்த்திப் புகை பலருக்கும் ஒத்துக் கொள்வதில்லை. ஆஸ்மா, மூச்சிரைப்பு நோயை உருவாக்குகின்றன. அல்லது மிகைப்படுத்துகின்றது. கொசு வர்த்தியை பயன்படுத்தும்போது உணவுப்பொருட்கள், குடிநீர் பாதிப்படைகின்றன. ஒரு கொசுவர்த்திச் சுருளை வெளியிடும் புகை ஆயிரம் சிகரெட்டுகள் புகைப்பதற்குச் சமம். கொசுக்கள் தம்மில் எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொள்வதால் தற்போதுள்ள புகையை சட்டை செய்வதில்லை. கொசுவைத் தடுக்க வீட்டு ஜன்னல்களில் கொசு நுழையாத அளவுக்குக் கம்பி வலைகளை அமைக்கலாம். கொசுப்படைகள் மாலை நேரங்களில் புறப்பட்டு வரும். அந்த நேரங்களில் ஜன்னல், கதவுகளை மூடி வைக்கலாம்.

காய்ந்த வேப்பிலைச் சருகுகளை நெருப்பில் இட்டால் வரும் புகை கொசுவை விரட்டும். புகை மூட்டம் இடும்போது கதவு, ஜன்னல்வளைத் திறந்து வைக்க வேண்டும். துளசி, புதினா போன்ற செடிகளை வீட்டினுள் வளர்க்கலாம். கொதிக்கும் நீரில் கற்பூரத் துண்டுகளைப் போடலாம். நொச்சித் தழை, பேப்பந்தழை, சாம்பிராணி போன்றவற்றால் புகை மூட்டினால் கொசுக்கள் வெளியேறும்.

கொசுக்களின் வாழிடங்களான சாக்கடை வீட்டருகில் தேங்கக்கூடாது. உடைந்த பாத்திரங்கள், தேங்காய் சிரட்டைகள், பயன்படாத டயர்களை வீட்டுக்கு வெளியே வீசினால் அவற்றில் தண்ணீர் தேங்கி கொசுக்கள் வெளியேறும். புறநகர் இரயில்களுக்குள்ளேயும் நொருக்குத் தீனிகள், பழங்கள், திண்பண்டங்கள் விற்கப்படுகினறன. இருக்கைகளின் கீழே கடலைத்தோல், பழத்தோல், காகிதக் குப்பைகள் சேர்ந்து, ஓடும் இரயிலுக்குளேயும் கொசுக்கள் நுழைந்து மனிதர்களைக் கடிக்கின்றன.

டெங்கு காய்ச்சலும், மர்மக் காய்ச்சலும் பல உயிர்களைக் காவு வாங்கி விட்டன. இனியாவது சுற்றுச்சூழல் தூய்மையைக் காப்போம்.




தூக்கத்தில் எழுந்து நடப்பது, தூக்கத்தில் எழுந்து கத்துவது, தூக்கத்தில் பேசுவது, தூக்கத்தில் எழுந்து சாப்பிட்டுவிட்டு பிறகு மீண்டும் உறங்குவது போன்ற பாதிப்பு உள்ளவர்களை “பாரா சோம்னியா” என்று குறிப்பிடுவோம்.

இது எதனால் வருகிறது என்றால், நம்முடைய மூளையில் உள்ள சுரப்பிகளின் செயல்பாட்டில் ஏற்படும் சமச்சீரற்ற தன்மைதான். இந்த பாதிப்பு ஒரு சிலருக்கு அரிதாக ஏற்படுகிறது என்றால் அவர்களுக்கு சிகிச்சை தேவையில்லை. முறையான மருத்துவ ஆலோசனை மட்டுமே போதுமானது என்ற தகவலை பகிர்ந்துகொண்டே நம்முடன் பேசத் தொடங்குகிறார் டாக்டர் ராமகிருஷ்ணன்.

இவர் சென்னையில் தூக்கமின்மை என்ற குறைபாட்டுக்காகப் பிரத்தியேகமாகச் செயல்பட்டு வரும் நித்ரா இன்ஸ்டியூட் ஆ·ப் ஸ்லீப் சயின்ஸ் என்ற மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் மற்றும் தூக்கமின்மைக்கான சிறப்பு சிகிச்சை நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தூக்கத்தில் ஏற்படும் மூச்சு திணறலுக்குரிய சிகிச்சை குறித்து..?

“உடற்பருமன், குறுகலான கழுத்தைக் கொண்டவர்கள், இரத்த அழுத்தம், சர்க்கரைநோய், தைராய்ட் பிரச்சினை, மது மற்றும் புகைபிடிக்கும் பழக்கம்... இவைகளில் ஒன்றின் பாதிப்பு இருந்தாலும் இந்த “ஸ்லீப் அப்னியா” என்ற பாதிப்புக்கு ஆளாவார்கள். அரிதாக ஒரு சிலருக்கு மேலே சொன்ன எந்த காரணங்களுமின்றி இந்த பாதிப்பு வரக்கூடும்.

உறங்கும் போது அதிலும் குறிப்பாக ஆழ்நிலை தூக்கத்திற்கு செல்லும் போது நம்முடைய உடலில் உள்ள அனைத்து தசைகளும் தளர்ச்சியடைந்து ஓய்வெடுத்துக் கொள்கின்றன. இந்நிலையில் தொண்டைப் பகுதியில் இருக்கும் சுவாசக்குழாய் அருகேயிருக்கும் தசைகளும் தளர்ச்சியுற்று ஓய்வு பெறும் போது அவை சுவாசக்குழாயை அழுத்துகின்றன. இதனால் அதன் வழியாக பயணிக்கும் காற்று உள்ளிழுக்கப்படும் போதும், வெளியேறும் போதும் ஒலியை எழுப்புகின்றன. இந்த ஒலி தான் குறட்டை என்று குறிப்பிடுகிறோம்.

இந்நிலையில் குறட்டை விடுவோர், அவர்களின் நுரையீரலுக்குத் தேவையான ஒக்ஸிஜன் கிடைக்காத காரணத்தால் மூச்சு விடுதலில் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். இவர்களில் ஒரு சிலருக்கு மூச்சு விடும் அளவு குறைந்து கொண்டே வரும். சுவாசக்குழாய் எந்தளவுக்குச் சுருக்கமடைகிறதோ அந்த அளவுக்கு குறட்டையின் ஒலி அதிகரிக்கும். ஒரு சில தருணங்களில் இந்த சுவாசக்குழாய் முழுவதுமாக அடைப்படும் அளவுக்கும் செல்லலாம். அந்த தருணங்களில் அவர்களுக்கு மூச்சு திணறல் ஏற்படுகிறது. ஆனால் குறட்டை விடுவோருக்கு தாங்கள் உறக்கத்தில் மூச்சு திணறலுக்கு ஆளாகியிருக்கிறோம் என்பது தெரியாது. இதற்கு தான் “ஸ்லீப் அப்னியா” என்று குறிப்பிடுகிறோம்.

தூக்கத்தின் போது அவர்களுக்கு தேவையான ஒக்ஸிஜன் கிடைக்காத காரணத்தால், அவர்கள் அடுத்த நாள் காலையில் எழுந்திருக்கும் போது,சோர்வு, தலைவலி ஏற்படும். அன்றைய தினம் முழுவதும் அசதியாகவே இருப்பார்கள். மூளைக்கு போதிய அளவு ஒக்ஸிஜன் கிடைக்காததால் எரிச்சல் மற்றும் கோபமான மனநிலையிலேயே இருப்பார்கள். மன உளைச்சலுக்கும் ஆளாவார்கள். ஒரு சிலருக்கு நினைவுத்திறன் பாதிக்கப்படலாம். இதனை சரியான தருணங்களில் கண்டறிந்து சிகிச்சையெடுத்து குணமடையவில்லை என்றால், இதன் காரணமாக இரத்த அழுத்தம், பக்கவாதம், சர்க்கரை நோய் போன்றவை வரக்கூடும்.

ஏற்கனவே சர்க்கரை நோயும், இரத்த அழுத்தமும் இருந்தால் அவர்களுக்கு இந்த இரண்டு நோயும் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குச் சென்றுவிடும்.

இவர்களுக்கு முதலில் ஸ்லீப் ஸ்டடி என்ற பரிசோதனையை மேற்கொள்வோம். மூளைக்குச் செல்லும் ஒக்ஸிஜனின் அளவு, மூச்சு விடும் பாணி, குறட்டை எந்தநேரத்தில் அதிகரிக்கிறது, எந்த நேரத்தில் குறைகிறது, இரத்த அழுத்தத்தின் அளவு, சர்க்கரையின் அளவு என பல விஷயங்களை இந்த உறக்க கண்காணிப்பு பரிசோதனையில் கண்டறிந்து அதற்கேற்ற வகையில் சிகிச்சையளிப்போம்.

### தூக்கமற்ற நிலை அல்லது தூக்கமின்மைக்கான மருத்துவ காரணங்கள் என்ன? அதற்கான நிவாரணம் என்ன?

“தூக்கமின்மைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். உடலை பராமரிக்க தினமும் குளிக்கிறோம். அதே போல் பற்களை பராமரிக்க தினமும் இரண்டு வேளை பல் துலக்குகிறோம். இதே போல் தூக்கத்தையும் நாம் சீராகப் பராமரிக்கவேண்டும். அதாவது தினமும் இரவு ஒன்பது மணி நேரம் முதல் பதினொரு மணி நேரத்துக்குள் உறங்கசெல்ல வேண்டும். அதே போல் காலையில் ஐந்து மணி நேரம் முதல் ஏழு மணி நேரத்துக்குள் எழுந்துவிடும் பழக்கத்தைச் சீராகப் பராமரிக்கவேண்டும்.

காலையில் எழுந்தவுடன் நம்முடைய உடலில் சூரிய ஒளி படும்படி நடைபயிற்சியோ அல்லது மெல்லோட்டத்தையோ வைத்துக் கொள்ளவேண்டும். அதே போல் உணவுகளையும் தவறாமல் ஒரே சீரான நேரத்தில் சாப்பிடவேண்டும். இரவு உறங்கச் செல்வதற்கு இரண்டு மணிநேரம் முன்பாக இரவு உணவை முடித்துக் கொள்ளவேண்டும். முழு வயிற்றுடன் உறங்கச் சென்றால் அது தூக்கத்தைப் பாதிக்கும். அதே போல் காபி மற்றும் தேநீரை மாலை ஐந்து மணிக்குள்ளாக அருந்திடவேண்டும். மது மற்றும் புகை பிடிப்பதை தாமதமாக வைத்துக் கொண்டால் அவற்றால் கூட உறக்கம் கெடும். அதே போல் பயம், தனிமை, கவலை போன்றவற்றால் கூட தூக்கம் பாதிக்கும். அதனால் இவற்றில் எல்லாம் கவனமாக இருந்தால் தூக்கமின்மை பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம்.

### தூக்கத்திற்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்?

ஒரு நாள் முழுவதும் நீங்கள் தூங்கவில்லை என்றால், அடுத்த நாள் உங்களுக்கு கண் எரிச்சல், சோர்வு, கோபம், எரிச்சல், மன உளைச்சல், தலைவலி, எதிலும் மனதை ஒருமுகப்படுத்த இயலாமை போன்ற பல பாதிப்புகள் ஏற்படும். எம்முடைய உடலில் பகலில் ஒருவகையான ஹோர்மோன் சுரப்பிகள் தங்களுடைய பணியை மேற்கொள்கின்றன. இரவில் வேறு வகையான ஹோர்மோன் சுரப்பிகள் தங்களுடைய பணியை மேற்கொள்ளும்.

இவை இயல்பாக செயலாற்றுவதால் எம்முடைய இரத்த அழுத்தத்தையும், சர்க்கரையின் அளவையும் கட்டுக்குள் வைத்துக் கொண்டு உடலைச் சீராக பராமரிக்கலாம். பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் உறக்கம் கெட்டால், அவர்களின் மாதவிடாய் சுழற்சியில் பாதிப்பு ஏற்படலாம். குழந்தையின்மையால் பாதிக்கப்படலாம்.

அதனால் தூக்கம் என்பது மனதுக்கும், உடலுக்கும் இவ்விரண்டின் ஆரோக்கியத்துக்கும் முக்கியமானது.

நன்றி இணையத்தளம்.

# இந்நாட்டின் இளம் கலைஞர்களின் திறமைகளை வளர்ச்சியுறச் செய்து, உயரிய ஆக்கங்களை உருவாக்க அவர்களை ஊக்கப்படுத்துவது அரசின் பொறுப்பாகும்.

**சிக்னிஸ் சினிமா மற்றும் நாடக விருது வழங்கல் வைபவத்தின் போது கர்தினால் ஆண்டகை தெரிவித்தார்.**



"மனிதனின் எண்ணங்களில் மற்றும் உடலியல் உறுப்புக்களின் உணர்வுகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்படும். நாடகங்கள், சினிமாக்கள் மற்றும் பிரசுரிக்கப்படும் புத்தகங்கள், சஞ்சிகைகள், பாடல்கள் உள்ளிட்ட சமூகத் தளங்களில் வெளியிடப்படும் ஆக்கங்கள் முன்னிலையில் மனித எண்ணங்களை நற்சிந்தனையுடையதாக கொண்டு செல்வதற்கான ஆக்கங்கள் இன்றைய காலகட்டத்தில் பாதகமான பெறுபேறுகளைக் கொண்டதாக அமைகின்ற-மையையே நாம் காணுகின்றோம்.

மனித ஆன்மீகம் மற்றும் கலைத்திறன்கள் சமூகத்தில் விக்ரணையுடனான பயனுள்ள ஆக்கங்களாக அமையும்போது பொருளாதார ரீதியான அம்சங்களுடன் எமது சமூகத்துக்குள் அமைந்திருப்பினும் பொருளாதாரத்திற்கு அவை சாதகமாக அமையாத காரணத்தால், கலைஞர்கள் உயர் தரத்தினாலான கலை நிர்மானங்களை உருவாக்குவதற்கு உதாசீனமாக, அலட்சிய போக்குடன் இருக்கின்றனர். இவ்வாறான உயரிய கலை நிர்மானங்களை, நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்கு எம் நாட்டு இளம் கலைஞர்களுக்கு முறையான பயிற்சியும், பொருளாதார உதவிகளும் வழங்குவதற்கும், கலை நிர்மானங்களுக்கு அதிகப்படியான வரிகளை விதிப்பதை தடுப்பதற்கும் அரசாங்கம் நடிவடிக்கைகள் மேற்கொள்ளும்போது, இந்நாட்டின் இளம் கலைஞர்களின் திறமைகள் வளர்க்கப்பட்டு, உயரிய தரத்திலான ஆக்கங்களை உருவாக்குவதற்கு வாய்ப்புக்கள் அமையும். இவ்வாறு வாய்ப்புக்களை உருவாக்குவது அரசின் கடமையும் பொறுப்புமாகும்.

இக்கருத்துக்களை கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கடந்த வாரம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற 41வது சிக்னீஸ் சினிமா மற்றும் நாடக விருது வழங்கல் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட போது தெரிவித்தார்.

பிரசித்தி பெற்ற கலைஞர் திரு. ஜெக்சன் என்டனி அவர்கள் பிரதான உரையை வழங்கியதோடு, இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தொடர்பாடல் துறையின் தலைவராக காலி மறைமாவட்ட மேதகு ஆயர் ரேமண்ட் விக்கிரமசிங்க ஆண்டகை, இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரான பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு. வின்சன்ட் பர்னாந்து ஆண்டகை, உயர்மறைமாவட்ட துணை ஆயரான மேதகு. ஜே.டீ அந்தனி ஆண்டகை உள்ளிட்ட விசேட சிறப்பு விருந்தினர்களான அருட்பணி. யோவன்ட் மற்றும் அருட்பணி. டேவிட் ஆரோக்கியம் ஆகிய அருட்தந்தையர்களும் மேலும் குருக்கள், துறவிகள் மற்றும் இந்நாட்டு சினிமா மற்றும் நாடகத் துறையின் நடிகர் நடிகைகள், கலைஞர்கள் பெரும்பாலானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தேசிய தொடர்பாடல் இயக்குனரும் சிக்னீஸ் இயக்குனருமான அருட்பணி. லால் புஸ்பதேவ் அவர்கள் உள்ளிட்ட சிக்னீஸ் நிறுவனத்தின் உறுப்பினர்கள் இந்நிகழ்வினை ஒழுங்கு செய்திருந்தனர். கர்தினால் ஆண்டகை உள்ளிட்ட ஆயர்கள் மற்றும் பிரவீன கலைஞர்களின் கைகளினால் விருதுகள் வழங்கப்பட்டன.

**தகவல் : ரீ. சுனில் பர்னாந்து மற்றும் ஷோஷான் பிரதீப்**

# வடகொழும்பு மறையாசிரியர்களின் ஒன்றுகூடல்







வடகொழும்பு மறையாசிரியர்களின் ஒன்றுகூடல் ஆவணி 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (19.08.2018) மட்டக்குளி புனித மரியாள் ஆலய மண்டபத்தில் வடகொழும்பு மறையாசிரியர்களின் பொறுப்பாளர் அருட்பணி நியூமன் முத்துத்தம்பி அடிகளார் தலைமையில் மு.ப 11.30 மணிக்கு நடைபெற்றது. முதலில் வடகொழும்பு தலைமை மறையாசிரியர்களின் குத்து விளக்கேற்றல் இடம்பெற்று பின் பிரார்த்தனை நடைபெற்றது. மறையாசிரியர்களின் விளையாட்டு போட்டிகள் இடம்பெற்றன. வயது வித்தியாசமின்றி எல்லா மறையாசிரியர்களும் போட்டிகளில் பங்குபற்றினர். வெற்றி பெற்றவர்கள் பரிசில்கள் பெற்றனர். இறுதியில் நடனப் போட்டி சிறப்பாக அமைந்தது. பகலுணவின் பின் இனிதே முடிவுற்றது.

**தகவல் : திருமதி. சந்திரிக்கா**
**புனித யோவான் பங்கு.**



# மரண தண்டனைக்கு மறுப்பளிக்கும் திருத்தந்தை



**மனித வாழ்வு புனிதமானது மற்றும், மரண தண்டனை நிறைவேற்றுதல், மனிதரின் மீறமுடியாத மாண்பின் மீது தாக்குதல் நடத்துவதாகும் என்பதால், இத்தண்டனை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது**

- திருத்தந்தை பிரான்சிஸ்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மரண தண்டனை குறித்து விடுத்துள்ள அழைப்பை, இலங்கை கத்தோலிக்கர் பின்பற்றவேண்டியது இன்றியமையாதது என்று, இலங்கை மனித உரிமை ஆர்வலர் ஒருவர் கூறியுள்ளார். இலங்கையில், போதைப்பொருள் குற்றவா-ளிகளை, மரண தண்டனை கைதிகள் வரிசையில் வைப்பதற்கு, இலங்கை அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேனா அவர்களும், அவரது அமைச்சரவையும் தீர்மானித்திருப்பது குறித்த செய்தி, கடந்த ஆடி மாதம் வெளியானபோது, தான் அதிர்ச்சியடைந்ததாக, அந்த ஆர்வலர் தெரிவித்தார்.

யூக்கா செய்தியிடம் இவ்வாறு கூறியுள்ள அந்த மனித உரிமை ஆர்வலர், இலங்கை, உள்நாட்டுப் போர்களையும், கிளர்ச்சிகளையும் எதிர்கொண்டி-ருந்தாலும், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, மரண தண்டனை மீது தடை விதித்திருந்த 29 நாடுகளுள், இலங்கையும் ஒரு நாடாக இருந்தது என்று கூறினார்.

2017ம் ஆண்டில், மேலும், 106 நாடுகள் மரண தண்டனையை முற்றிலும் இரத்து செய்தன என்றும், அதே ஆண்டில், 23 நாடுகள் மரண தண்டனையை நிறைவேற்றின என்றும் அவர் தெரிவித்தார்.

மரண தண்டனையை நிறைவேற்றுவதன் வழியாக குற்றங்கள் குறைக்கப்பட்டன என்று, இலங்கை உட்பட எந்த நாடும் கூற முடியாது என்றும் உரைத்த அந்த ஆர்வலர், மரண தண்டனை நிறைவேற்றுவது, மனிதமற்றது மற்றும் நற்செய்திக்கு முரணானது என, திருத்தந்தை மரண தண்டனை மறுப்புப் பற்றி கூறினார்.

## 01 போதைப் பொருளில்...

ஜனாதிபதியவர்களுக்கு இருக்கின்றது. இப்போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்க மஹா சங்கரத்ன மத குருமார்களிடம் பங்களிப்பை பெற்றுக்கொள்ளவும், கத்தோலிக்க திருச்சபையினாலான பங்களிப்பை நாம் தருவோம். போதைப்பொருள் நிவாரணம் தொடர்பிலான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள நான் முன்நிற்பேன். நான் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானாலும் பரவாயில்லை. இச்சீர்கோடான போதைப் பொருளிலிருந்து எம் பிள்ளைச் செல்வங்களை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென பேராயர் கர்தினால் ஆண்டகை தெரிவித்தார்.

இதன்போது, கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் "ஒரு சிகரெட்டை விற்பனை செய்வதை தடுக்க வெண்டுமென் நான் கருத்து முன்வைத்தேன். போதைப் பொருள் ஒழிப்புத் திட்டமொன்றை களுத்துறையில் ஆரம்பிப்பேன். கர்தினால் ஆண்டகையின் வேண்டுகோ-ளுக்கு எனது முழுமையான பங்களிப்பை நான் வழங்குவேன்" எனக் கருத்து தெரிவித்தார்.

**தகவல்: அஜித் அலஹகோன்.**

## 01 மறையாசிரியர்கள்...

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் மறையாசிரியர் தேர்வு, மறையாசிரியர் இடைநிலைத் தேர்வு, மறையாசிரியர் இறுதித் தேர்வு ஆகிய தேர்வுகள் எதிர்வரும் புரட்டாதி மாதம் 22ஆம் திகதி (22.09.2018) நடைபெற உள்ளன.

இலங்கையின் 12 மறைமாவட்டங்களிலுமுள்ள 47 பரீட்சை நிலையங்களில் மேற்படித் தேர்வுகள் இடம் பெறவுள்ளன. மறையாசிரியர், மறையாசிரியர் இடைநிலை, மறையாசிரியர் இறுதித் தேர்வுகளில் தமிழ் பிரிவில் முறையே 660, 420, 169 மறையாசிரியர்களும் சிங்கள பிரிவில் முறையே 728, 502, 260 மறையாசிரியர்களும் ஆங்கில பிரிவில் முறையே 53, 39, (இறுதித் தேர்வு அடுத்த ஆண்டு முதல்) மொத்தம் 2831 மறையாசிரியர்கள் இத் தேர்வுகளுக்குத் தோற்ற உள்ளனர்.

தேர்வுகளுக்கு தோற்றவுள்ள மறையாசிரியர்கள் குறித்த நேரத்திற்கு குறைந்தது 10 நிமிடங்களுக்கு முன்னராகவே தத்தம் பரீட்சை நிலையங்களுக்கு வருகைத்தந்து தமக்குரிய இடங்களில் அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிப்பதற்கான அனுமதி பத்திரத்தையும் மறக்காமல் கொண்டுவரவும்.

**அருட்சகோதரி ரஞ்சி போல்துரை**
**தமிழ் பிரிவு பொறுப்பாளர்**
**[தேசிய மறைக்கல்வி நடுநிலையம்]**

## 01 அறிவித்தல்

இதனால் தேவையற்ற விதத்தில் கதைகளைப் பரப்புவதற்கும், குழப்பங்களை உண்டாக்கி, பதற்ற நிலையை உருவாக்க வேண்டிய அவசியமில்லை.

இவ் வேலைத்திட்டத்திற்காக உயர்மறை-மாவட்ட கல்வித் துறை இயக்குனர் அருட்பணி. ஜவன் பெரேரா அவர்களின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டு, இவ்விடயம் பற்றி மேற்பார்வை செய்து, கல்லூரியின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை முன்வைப்பதற்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இக்குழுவினரை தொடர்பு கொண்டு கருத்துக்களையும், ஆலோசனைகளையும் முன்வைப்-பதற்கான வாய்ப்பும், உரிமையும் அனைவருக்கும் உரியது.

இறையாசீர் உரித்தாகுக!

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்**
**2018 ஆவணி 29**

## 01 தேசிய குடும்ப...

இம்மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தலவில புனித அன்னம்மாள் திருத்தலத்தில் "மகிழ்ச்சியான குடும்பம் இறைவனின் அழைப்பாகும்" என்ற மையப்பொருளில் குடும்பங்களுக்கான ஞானொடுக்கம் தேசிய ரீதியாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வளர்ந்தோர், இறையோர் மற்றும் சிறார்கள் என மூன்று நிலைகளில் ஞானொடுக்கம் இடம்பெறுகிறது. ஆகவே இத்தியானத்தில் தாங்களும் கலந்து கொண்டு பலன் பெறவும்.

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

# இயேசுவின் படிப்பினைகளுக்கேற்ப எம்மை உருமாற்றுவதே மறைக்கல்வி



மனிதர்களிடம் பல்வேறுபட்ட ஆற்றல்களும், திறமைகளும் குவிந்திருப்பதைக் காணலாம். அவை மனிதனுடைய ஒவ்வொரு வாழ்க்கைப் பருவத்திலும், நிலையிலும் வெளிக்கொணரப்படுவதை அவதானிக்க முடியும். மனிதர்களிடையே காணப்படுகின்ற இத்தகைய அளவற்ற ஆற்றல்களையும் ஆழமான உணர்வுகளையும் கருத்தாழமிக்க சிந்தனைகளையும் செயற்பாட்டு திறமைகளையும் வெளிக்கொணர்ந்து, உரியமுறையில் நெறிப்படுத்தி, அவனை ஒரு முழுமனித வாழ்வுக்கு அழைத்துச் செல்வதுதான் உண்மையான கல்வியின் நோக்கமாகும். “உண்மையான கல்வி மனிதன் தான் கொண்டுள்ள குறிக்கோளுக்கேற்ப அவனை வழிநடத்து-வதையும், கடமைகளில் அவனுக்கு பங்குகொடுத்து அவனை ஓர் அங்கமாக ஏற்றுக்கொள்வதையும், சமூக நன்மைக்கேற்ப அவனை உருவாக்குதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது” எனக் கருத்துரைக்கிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம்.

இறைவனின் படைப்பிலே சிகரமாக விளங்குபவன் மனிதன். அவன் இறைவனின் பேரன்பையும், இரக்கத்தையும் மணிமுடியாகக் கொண்டவன் (தி.பா 103:4). அவன் என்றும் நல்ல விழுமியங்களோடும், இறையரசுக்கனவுகளோடும் தன்னையும் பிறரையும் ஒன்றுபடுத்தி வாழவேண்டும் என்ற நோக்கத்திற்காக திருச்சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வியே மறைக்கல்வி. இயேசுவின் படிப்பினைகளுக்கேற்ப எம்மை உருமாற்றுவதே மறைக்கல்வியாகும். இது ஒரு தொடர் பயிற்சியாகும். கருவறை தொடக்கம் கல்லறைவரை நீடிக்கவேண்டிய ஒரு நெடும் பயணம் என்றும் கூறலாம். இதில் மழலைகள் மட்டுமல்ல இளைஞர்கள், பெற்றோர்கள், முதியவர்கள் அனைவரும் பங்குகொள்ள வேண்டியது அவசியமாகும். ஏனெனில் மறைக்கல்வி என்பது எமது விசுவாச வாழ்வில் உயிர்த்துடிப்பைப் போன்றது. ஒருவர் தன்வாழ்வில் நற்பண்புடையவராகவும், அனைத்து மக்களோடும் ஒற்றுமையுணர்வுடன் வாழக்-கூடியவராகவும், இறைமதிப்பீடுகளை முன்னெடுப்-பவராகவும் வாழ்வதற்கு வேண்டிய மனநிலையை அவரில் உருவாக்குவது மறைக்கல்வியே. “குழந்தைகள், இளைஞர்கள், வளர்ந்தோர் ஆகியோரை விசுவாசத்தில் வளர்ப்பதற்கான கல்வியாகவே மறைக்கல்வி விளங்குகிறது. இத்தகைய கல்வி கிறிஸ்தவக் கோட்பாடுகளை மையமாகக் கொண்டுள்ளது. இதனைக் கற்பவர்கள் கிறிஸ்தவ வாழ்வின் நிறைவைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடேயே திட்டமிட்ட-முறையில் மறைக்கல்வி வழங்கப்படுகிறது” என்று கூறுகிறார் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் (“தற்காலத்தில் மறைக்கல்வி” சுற்றுமடல் 1979).

இன்று பெரும்பாலும் எமது பங்குகளிலே மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆனால் எத்தனைபேர் அதில் பங்குபற்றி பயன்பெறுகிறோம்? பிள்ளைகளுக்கு மறையறிவை ஊட்டுவதில் பெரும்பங்-காற்ற வேண்டியவர்கள் பெற்றோர்களே. இன்று மறைக்கல்வி தொடர்பான பெற்றோர்களின் மனநிலை சற்று மாறுபட்டுச் செல்லும் நிலையை நாம் காணமுடியும். பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வில் அக்கறை காட்டுவதற்கு மேலாக கல்வியில் தங்களின் விருப்பங்களை பிள்ளைகள் நிறைவேற்றவேண்டுமென விரும்பும் பெற்றோர்களே அதிகம். மறைக்கல்வியின் நோக்கம் ஆரம்பநிலையில் உள்ள எமது விசுவாசத்தை இறைவனின் அருட்துணையால் வளர்ப்பதும் நாளுக்கு நாள் அதற்கு உறுதியூட்டி நிறைவுக்கு இட்டுச்செல்வதுமாகும். இதை ஒவ்வொரு பெற்றோர்களும், மறைக்கல்வியை பிள்ளைகளுக்கு கொடுக்கும் அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும். பங்கிலே வழங்கப்படும் மறைக்கல்வியானது, பாடசாலையில் வழங்கப்படும் மறைக்கல்வியின் தொடர்ச்சியாகவும், மேலும் அதை ஆழப்படுத்தி பிள்ளைகளை ஆன்மீகத்திலும் இறைமதிப்பீடுகளிலும் வளர்த்தெடுக்கின்ற கல்வியாகவும் அமையவேண்டும். இன்று எமது சமூகத்தில் நடப்பவை எம்மால் அறியப்படாதவை அல்ல. அனைவரும் தீமைகளை பார்த்து வருந்துகின்றோம். எம்மவரின் எதிர்காலத்தை நினைத்து கலங்குகின்றோம். ஆனால் தீமைகளை களைந்து நல்ல சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியில் எம்மை இணைத்துக்கொள்ள பின்னிற்கின்றோம். சமூக நன்மைக்காக எல்லோரும் ஒன்றுபட்டு நல்ல மாற்றத்தை எம்மில் உருவாக்க தயங்குகின்றோம். அதன் விளைவுதான் இன்று நாம் அனுபவிக்கும் அவலங்கள்.

இன்று மாறிவரும் சமுதாயத்தின் மாற்றத்தினால் தம்மை நாளும் மாய்த்துக்கொள்ளும் மக்களையே நாம் எங்கும் சந்திக்கிறோம். இந்த அவலநிலை மாறவேண்டுமெனில் எம்மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். இறைமனித உறவை வலுப்படுத்த வேண்டும். இதற்கு சிறந்த ஊடகம் பங்கு மறைக்கல்வியே. மழலைகளுக்கு, இளைஞர்களுக்கு, பெற்றோருக்கு, முதியவர்களுக்கென அனைவருக்கும் உண்மையான மறையறிவு கொடுக்கப்படவேண்டும். கிறிஸ்தவ விழுமியங்களை வாழவும், இயேசு ஆண்டவரின் இறையாட்சிக்கேற்ப மக்களாக உருமாறவும் ஒவ்வொருவரும் சரியான முறையில் வழிநடத்தப்பட வேண்டும். திருச்சபையின் தலைவர்களும், பங்குரீதியில் பணியாற்றும் அருட்பணியாளர்களும், துறவியரும், மறையாசிரியரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். இன்றைய சூழலுக்கும், அறிவியலுக்கும், உளவியலுக்கும் ஏற்றவகையில் நல்ல பாடத்திட்டங்களை வகுத்து, அனைவரும் விரும்பி, தேடிக் கற்றுக்கொள்ளும் வகையில் வகுப்பு முறையில், கருத்தரங்கு முறையில், இசைநாடக முறையில், மற்றும் நவீன ஊடகங்களின் உதவியுடன் மறைக்கல்வி வழங்கப்படுவதே தற்காலத்தின் அவசிய தேவையாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் இதை பொறுப்புள்ள விதத்தில் உணர்ந்து செயற்படுத்தும்-போதே கிறிஸ்துவாக எம்மை உருமாற்றிக்கொள்ள முடியும்.

**ஆக்கம்:- அருட்தந்தை. றமேஸ் அ.ம.தி**

# இரத்தினபுரி பேராலய பங்கில் – விடுமுறை கால பயிற்சி பாசறை





பாடசாலை வகுப்பறையில் மாணவர் பெற்றுக்கொள்ளும் அறிவுடன் தமது வாழ்க்கைக்கு தேவையான மலையக பிள்ளைகளின் ஆன்மீக அறிவை மென்மேலும் வளர்த்து வாழ்வை வளம் படுத்த வேண்டுமென்ற பேராவலினால் விசேட விடுமுறை கால பாசறை இரண்டு மத்திய பகுதிகளில் கலபொட,கரபிஞ்ச எனும் இரண்டு தோட்டங்களில் பெருந்தோட்ட பகுதி பணியக இயக்குனர் அருட்பணி றொமேஸ் அடிகளாரும்,அருட்சகோதரி ஜெனிற்றா அவர்களும் ஏற்பாடு செய்து நடத்தினார்கள்- மறையாசிரியர்களும் ஒத்தாசை வழங்கியமை குறிப்பிடத்தக்க விடயமாகும் மாணவர்கள் ஆன்மீக அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

**தகவல்: மேரி இருதயநாதன்,**
**மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**

# இரத்தினபுரி மறைமாவட்ட பெருந்தோட்ட முன் பள்ளி ஆசிரியர்களுக்கான வருடாந்த விசேட பயிற்சி முகாம்

விசேடமாக பெருந்தோட்ட பகுதிகளில் வாழுகின்ற சிறுவர்களுக்கான முன்பள்ளி அறிவை பெற்றுக் கொடுக்கும் முகமாக ஒஸ்ட்ரியா நாட்டு திருமதி மரியா குழுவினர்களின் அனுசரணையுடன் நடாத்தி வரும் வருடாந்த பயிற்சி முகா்ம் கடந்த 2018.08.05 தொடக்கம் 2018.08.15ம் ஆம் திகதி வரை. இரத்தினபுரி மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

இதனை நெறிப்படுத்துவதற்காக அருட் சகோதரி மார்ட்டினா (நல்லாயன் சபை) அவர்களும், அருட்சகோதரியான மனோ (திருச்சிலுவை சபை) அவர்களும் வருகை தந்திருந்தனர்.

இதனை பெருந் தோட்டப்பகுதி பணியக இயக்குனர் அருட்பணி றொமேஸ் அடிகளார் ஏற்பாடு செய்திருந்தார்.

பார்ப்பார் - கேட்பார் யாருமின்றி அநாதைக் குழந்தைகளாக வாழ்கின்ற எமது மலையகக் குழந்தைகள் மீது பற்றும் - பாசமும் - கருணையும் - கரிசணையும் கொண்டுள்ள ஒஸ்ட்ரியா நாட்டு மரியா குழுவினருக்கு எமது உளமார்ந்த நன்றியும் - செபங்களும். நலம் பெற வாழ்த்துகின்றோம்.

**தகவல் : மேர் இருதயநாதன்**
**(மறையாசிரியர்)**
**பேராலயம் – இரத்தினபுரி.**



# புனித யோசவ்வாஸின் திருச்சிலுவைப் பயணம்

| திகதி | புறப்படும் நேரம் | செல்லும் வழிகளும், நாளும் நேர அட்டவணையும். | புறப்படும் நேரம் | கடைசி நாள் | வளாகத்திலிருந்து திரும்புதல். |
|---|---|---|---|---|---|
| புரட்டாதி 8 | காலை 10.00 மணி | கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் ஜெ.டீ அந்தனி ஆண்டகையினால் நீர்கொழும்பு கொச்சிக்கடை பாலத்தில் இருந்து புனித யோசவ்வாஸின் திருச்சிலுவை ஏற்றுக்கொள்ளப்படும். காலை 11.00 மணிக்கு கொச்சிக்கடை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.00 மணிக்கு | ஹல்ப்பே | காலை 07.30 மணிக்கு |
| புரட்டாதி 9 | காலை 09.00 மணி | கந்தவளையிலிருந்து காலை 11.30 மணிக்கு கட்டுப்பிட்டியவிற்கு எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.30 மணிக்கு | போலவளானை | காலை 07.30 மணிக்கு |
| புரட்டாதி 10 | காலை 09.30 மணி | குரனையிலிருந்து காலை 11.00 மணிக்கு திலந்துவவிற்கு எடுத்துச் செல்லப்படும். | மாலை 06.30 மணிக்கு | நீர்கொழும்பு பெரியதெரு | காலை 07.00 மணிக்கு |
| புரட்டாதி 11 | காலை 08.00 மணி | தூவையிலிருந்து காலை 09.30 மணிக்கு பிட்டிப்பனைக்கும் நண்பகல் 12.00 மணிக்கு கெப்புன்கொடவுக்கும், அங்கிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு பமுனுகமைக்கும் எடுத்துச் செல்லப்படும். | மாலை 06.00 மணிக்கு | துடல | காலை 08.30 மணிக்கு |
| புரட்டாதி 12 | காலை 09.30 மணி | ஜுஎலயிலிருந்து காலை 11.30 மணிக்கு வெலிகம்பிட்டியவிற்கு எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.30 மணிக்கு | கந்தானை | காலை 07.30 மணிக்கு |
| புரட்டாதி 13 | காலை 08.30 மணி | உஸ்வடகொய்யாவிலிருந்து காலை 10.00 மணிக்கு நாயகந்தவிற்கும், காலை 11.30 மணிக்கு வெல்லப்பள்ளியவிற்கும் அங்கிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு ஹெந்தலவிற்கும் எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.30 மணிக்கு | வத்தளை | காலை 08.30 மணிக்கு |
| புரட்டாதி 14 | காலை 10.30 மணி | எந்தேரமுள்ளையிலிருந்து காலை 11.00 மணிக்கு மாக்கொலவிற்கு எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.00 மணிக்கு | தளுமக | காலை 07.00 மணிக்கு |
| புரட்டாதி 15 | காலை 09.00 மணி | எல்தெனியாவிலிருந்து காலை 11.30 மணிக்கு மிறிஸ்வத்தவிற்கு எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.30 மணிக்கு | கம்பஹா | காலை 07.30 மணிக்கு |
| புரட்டாதி 16 | காலை 09.30 மணி | வெலிஹேதியாவிலிருந்து காலை 11.30 மணிக்கு தராளவிற்கு எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.00 மணிக்கு | களுஅக்கல | காலை 08.00 மணிக்கு |
| புரட்டாதி 17 | காலை 11.00 மணி | வெலிவிட்டயிலிருந்து எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.30 மணிக்கு | தலங்கம | காலை 07.30 மணிக்கு |
| புரட்டாதி 18 | காலை 09.00 மணி | இராஜகிரியயிலிருந்து எடுத்துச் செல்லப்படும். | காலை 11.30 மணிக்கு | பொறளை | காலை 07.00 மணிக்கு |
| புரட்டாதி 19 | காலை 08.00 மணி | தெமட்டக்கொடையிலிருந்து காலை 09.30 மணிக்கு மாளிகாவத்தைக்கும், காலை 11.30 மணிக்கு கொட்டாஞ்சேனைக்கும், பிற்பகல் 3.00 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்திற்கும், மாலை 5.00 மணிக்கு புனித அந்திரேயா ஆலயத்திற்கும் எடுத்துச் செல்லப்படும். | மாலை 07.00 மணிக்கு | மட்டக்குளி | காலை 07.30 மணிக்கு |
| புரட்டாதி 20 | காலை 08.30 மணி | கொச்சிக்கடையிலிருந்து காலை 11.30 மணிக்கு கொள்ளுப்பிட்டிக்கும், அங்கிருந்து பிற்பகல் 3.30 மணிக்கு பம்பலப்பிட்டிக்கும் எடுத்துச் செல்லப்படும். | மாலை 06.00 மணிக்கு | வெள்ளவத்தை | காலை 07.00 மணிக்கு |
| புரட்டாதி 21 | காலை 08.30 மணி | தெஹிவளையிலிருந்து காலை 11.00 மணிக்கு கல்கிசைக்கும், அங்கிருந்து பகல் 1.00 மணிக்கு ரத்மலானைக்கும் மாலை 04. 00 மணிக்கு ராவத்தவத்தைக்கும் எடுத்துச் செல்லப்படும். | மாலை 07.00 மணிக்கு | மொறட்டுவை | காலை 08.00 மணிக்கு |
| புரட்டாதி 22 | காலை 09.30 மணி | முகத்துவாரத்திலிருந்து காலை 11.30 மணிக்கு பானந்துரைக்கு எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.00 மணிக்கு | வாதுவை | காலை 09.00 மணிக்கு |
| புரட்டாதி 23 | காலை 11.00 மணி | களுத்துரை | மாலை 03.30 மணிக்கு | கலாமுல்லை | காலை 07.30 மணிக்கு |
| புரட்டாதி 24 | காலை 08.30 மணி | பயாகலையிலிருந்து காலை 11.00 மணிக்கு தியவகொடவிற்கும், அங்கிருந்து பகல் 01.00 மணிக்கு மக்கோனவிற்கும் எடுத்துச் செல்லப்படும். | மாலை 04.30 மணிக்கு | பேருவளை | காலை 07.30 மணிக்கு |
| புரட்டாதி 25 | காலை 10.00 மணி | இறுதியாக திருச்சிலுவை காலிக்கு எடுத்துச் செல்லப்படும். | | பலபிட்டிய | |

# கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட குறுநாடக போட்டி

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சின் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட குறுநாடக போட்டி இம்முறை மட்டகளப்பு மாவட்டத்தின் தன்னாமுனையில் மியானி நகர் நிறுவனத்தில் 2018.09.24,25 திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது. இக்குறுநாடகப் போட்டியில் பல மாவட்டங்களில் இருந்து வருகை தந்து நாடக குழுக்கள் சிறந்த முறையிலே போட்டியிட்டன. அப்போட்டியின் இறுதியாக சிறந்த நாடக குழுக்களில் முதல் மூன்று இடங்களை பெற்ற நாடக குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன அக்குழுக்கள் பின்வருமாறு

| இடங்கள் | குழுவின் இலக்கம் | குழுக்களின் பெயர்கள் |
|---|---|---|
| 1ம் இடம் | 02 | புனித இருதய நாதர் ஆலயம் - கல்முனை |
| 2ம் இடம் | 06 | புனித அலோசியஸ் இளைஞர் குழு - பதுளை |
| 3ம் இடம் | 11 | புனித பற்றிக் கல்லூரி - யாழ்பாணம் |

| வெற்றியாளர் | கு.இல | வெற்றியாளரின் பெயர் |
|---|---|---|
| சிறந்த நடிகர் | 03 | பினியோன் பிரனான்டஸ் |
| சிறந்த நடிகை | 02 | ரிலக்சினா அவுட்சூரன் |
| சிறந்த துணை நடிகர் | 01 | சீசர் குகேந்திரன் |
| சிறந்த துணை நடிகை | 06 | R.செலினா |
| சிறந்த எழுத்துரு | 02 | ஜெயக்கொடிதேவி |
| சிறந்த மேடை அலங்காரம் | 01 | பெயர் குறிப்பிடப்படவில்லை |
| சிறந்த ஒப்பனைக் கலைஞர் | 01 | அருட்சகோதரி. நிர்மலா |
| சிறந்த இசையமைப்பு | 02 | ஜேசுதாஸன் இருதயரூபன் |
| சிறந்த உடையலங்காரம் | 06 | பெயர் குறிப்பிடப்படவில்லை |
| சிறந்த நடிப்பு | 02 | புனித இருதய நாதர் ஆலயம் - கல்முனைபங்கு |

**நடுவர்கள் குழு**

01. அருட்தந்தை நிக்லஸ் கப்ரியேல்
02. J.M.K.நிக்லஸ்
03. S.எட்வட்

### கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சின் குறுநாடக இறுதிப் போட்டி - 2018

| வெற்றியாளர்களின் பெயர்கள் | கு. இல | விஷேட பரிசில்கள் | குழுவின் பெயர்கள் |
|---|---|---|---|
| அருட்தந்தை பு.மஹிமைதாஸ் | 05 | நடிப்புக்கான ஒத்துழைப்பு | புனித நிக்கலஸ் கலை குழு |
| ஷ்டெலா | 04 | நடிப்பு | புனித செபஸ்டியன் ஆலயம் - கலையடி குலம் |
| பிரான்ஸிஸ் நேரு மோசஸ் | 04 | நடிப்பு | புனித செபஸ்டியன் ஆலயம் - கலையடி குலம் |
| பிரபாகரன் சரன்யா | 04 | குழந்தை நட்சத்திரம் | புனித செபஸ்டியன் ஆலயம் - கலையடி குலம் |
| ஸ்மெல்டின் டெனரஸ் | 02 | குழந்தை நட்சத்திரம் | இருதய நாதர் ஆலயம் - கல்முனை |
| ரெக்ஸ் சார்ல்ஸ் சுரேஷ் அகஸ்டின் | 01 | குழந்தை நட்சத்திரம் | புனித பற்றிக் கல்லூரி - யாழ்ப்பாணம் |
| பிரின்சி அவுட்சரன் | 03 | இசையமைப்பு | இருதய நாதர் ஆலயம் - மறைப் பாடசாலை |
| பாலேஸ்வரன் | 06 | நடிப்பு | புனித அலோஸியஸ் இளைஞர் குழு - பதுளை |
| சகாயதாசன் அருள்ராஜ் | 05 | ஒப்பனை | புனித நிக்லஸ் கலைக்குழு |
| அருட்தந்தை ஜேசுதாஸன் | 02 | சிறந்த வழிநடத்துனர் | இருதய நாதர் ஆலயம் - கல்முனை |

**நடுவர்கள் குழு**

01. அருட்தந்தை நிக்லஸ் கப்ரியேல்
02. J.M.K.நிக்லஸ்
03. S.எட்வட்

**தகவல் : இயக்குனர், கிறிஸ்தவ மத திணைக்களம்**

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஒப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்




- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்




- ✦ திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- ✦ திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.

**பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.**

**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**














| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |





| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள் | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள் | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |







## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை

கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை

கொழும்பு – 08.

தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586

E-mail : cgnanaoli@yahoo.com

www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்